University of Jaffna
235.3
NAI
249205((கொ.1)AR;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C-9

அண்மலிப்பு

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
Nainativu Sri Nagapooshani Amman Kovil

UNIVERSITY OF JAFFNA LIBRARY

KANDIAH KARTHIGESAN
TRUST FUND

நூலகம்
பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
-7-6-1988
PERIODICALS DIVISION

STACKS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C-9

உ

சிவமயம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

235.3
NAI

# திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர்

KANDIAH KARTHIGESAN
TRUST FUND

AR

பாகம் - I

**28-08-1983**

ARCHIVES

University of Jaffna
249205
Library

249205

249205

அறங்காவலர் சபை வெளியீடு

1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வரலாறும் வழிபாட்டு மரபுகளும்

## சில குறிப்புக்கள்

மா. வேதநாதன் (விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்).

ஈழத்தின் இந்துமத வரலாற்றை ஆராய முற்படும் அறிஞர்கள் நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணியம்மன் ஆலய வரலாற்றைக் கட்டாயம் கருத்தில் கொள்ளுதல் மிகவும் முக்கிய மானதாகும். நாக வழிபாட்டின் தொன்மையை இங்கே காணமுடிகின்றது.

நயினாதீவு ஏறக்குறைய மூன்று மைல் நீளமும், ஒரு மைல் அகலமும் கொண்ட ஞான பூமியாகும். சுமார் ஐயாயிரம் இந்துக்கள் வாழும் இம்மணித்தீவு சர்வமத சந்நிதி யாக விளங்கும் பெருமைக்குரியது. இப்புண்ணிய பூமியில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் குண்டலினி சக்தியாக நீலத் திரைக்கடல் ஓரத்தி ்ல் ஆழ்கடல் மத்தியில் அமர்ந்திருந்து அருள்பாலித்து வருகின்றாள். முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாகப் பொலிந்து விளங்குகின்றாள். புகழ் பூக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் திருக்குடமுழுக்கு என்ற பெருஞ் சாந்தி விழாவானது 28-08-1983 ஞாயிற்றுக்கிழமை காலை 6-05 மணிமுதல் 7-15 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் சிறப்பாக நடைபெற்று தொடர்ந்து முப்பது நாட்கள் மண்டலாபிஷேகமும் இலட்சார்ச்சனையும் நடைபெறுகின்றன. 23-09-1983-ல் சண்டிஹோம மும் சிறப்புற நடைபெற்றது.

நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்தின் தொடக்க காலம் எது என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். இவ்வாலய மூலமூர்த்தி இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முற் பட்ட பழம் பெருமையுடையதென்பதில் சந்தேகமில்லை.

புராதன பெருமை வாய்ந்த ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்தைப் போர்த்துக்கீசர் அழித்தனர். அப்போது ஆலயத்திலிருந்த மூல மூர்த்தியை ஆலய வடமேற்கில் நின்ற ஒரு செவ்வால மரப்பொந்துள் மறைத்து வைத்தனர் என்ற ஐதிகம் இன்றும் நிலவுகின் றது. பல ஆண்டுகளின் பின்னர் இராமலிங்கர் — இராமச்சந்திரர் என்பவர் கி. பி. 1788-ல் நாகபூஷணியம்மன் ஆலயத்தைக் கல்லால் கட்டியதாகவும், அப்போது ஆண்டுக்கொரு முறை ஆனி மாதம் 10-ம் திகதி தொடக்கம் 20-ம் திகதி வரை 10 நாட்கள் திருவிழா நடைபெற்றது என்ற குறிப்பு யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள சைவக் கோயில்களின் பதிவு இடாப்பில் காணப்படுகின்றது.

நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவிலைப்பற்றிய கடந்தகால முழு விபரங்களையும் விசாரணை செய்த கொமிஷனரின் அறிக்கையில் இக் கோயில் பொதுக் கோயில் என்பதும், இதன் நிர்வாகத்திற்குப் பொதுமக்கள் உரிமையுடையவரென்பதும் சந்தேகத்திற்கு இடமில்லா முறையில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் அவ்வறிக்கை யில் யாழ்ப்பாணத்திலுள்ள கோயில்களெல்லாவற்றுள்ளும் நயினை நாகபூஷணியம்மன் கோவிலுக்கே விலையுயர்ந்த காணிக்கைப் பொருட்கள் செலுத்தப்படுகின்றனவென்பது மலை மேல் விளக்கு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது மனம்கொள்ளத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட நீதிமன்றத்தின் 14151 இலக்க வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் 1949-ம் ஆண்டிலிருந்து நயினை நாகபூஷணியம்மன் ஆலய பரிபாலனத்தினை ஒன்பது உறுப்பினர்களைக்கொண்ட அறங்காவலர் சபையினர் சிறப்பாகப் பரிபாலித்து வருகின்றனர். இவர்களில் நால்வர் பரம்பரை அங்கத்துவமுடையவர்களாகவும், ஐவர் மகாசபை உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டும் சேவை செய்து வருகின்றனர்.

## நாகேச்சரத்தில் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

திருக்கேதீச்சரத்தில் கௌரியம்பாள் இருப்பது போலவும், கோணேச்சரத்தில் மாதுமையம்மை விளங்குவது போலவும், முன்னேசுவரத்தில் வடிவாம்பிகை காணப்படுவது போலவும் நகுலேசுவரத்தில் திருத்தம்பலேசுவரி திகழ்வது போலவும், நயினுதீவிலுள்ள நாகேச்சரத்தில் அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணியம்மன் காட்சி தருகின்ருள். மேலும் ஈழத்தில் சிரணிப்பதியில் நாகம்மையும், கோண்டாவில் கிழக்கில் நாகபூஷணியம்மையும் காணப்படுவதும் கவனிக்கத் தக்கதாகும்.

நயினுதீவுக்கு வடபாலுள்ள புளியந்தீவு (புலியேத்தி) என்னும் சிறு கிராமத்திலுள்ள நாகதம்பிரான் ஆலயத்தில் தற்போது பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் சிவலிங்கம், நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்தின் சுற்றுப்பிரகாரத்தில் புராதன காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கமாகும் என்ற நம்பிக்கை நயினையூர் மக்கள் மத்தியில் இன்றும் வலுப்பெற்றிருக்கின்றது. இக்கருத்து நன்கு சிந்தித்தற்குரியது.

கி. பி. 14-ம் நூற்ருண்டின் இறுதியில் அல்லது கி. பி. 15-ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அருணகிரிநாதர் திருப்புகழில் 'கரிநாகபூஷணத்தி', ''நாகபூஷணி'' என்ற சொற்களைக் கையாளுகின்ருர். கி. பி. 18-ம் நூற்ருண்டில் வாழ்ந்த அபிராமிப் பட்டரும் அபிராமி அந்தாதிப் பாடலொன்றில் 'சாதி நச்சுவாய் அகிமாலினி' என்று குறிப்பிடுகின்ருர். இச் சொற்பிரயோகங்கள் நயினை நாகபூஷணி அம்மனை நினைவுபடுத்துகின்றன. அபிராமி அந்தாதிப் பாடலில் காணப்படும் இக்குறிப்பை கி. வா. ஜகந்நாதன் அவர்கள் நயினை நாகபூஷணி அம்மனேடு 'மாலை பூண்ட மலர்' (பக். 190) என்ற அவரது நூலில் தொடர்புபடுத்தி எழுதியுள்ளார்.

## சுயம்புருவமாக விளங்கும் நயினை நாகபூஷணி

கருவறைக்குள் காணப்படும் கருநாகச் சிலையும், அதனருகிலுள்ள அழகிய பீடத்தின்கண் அருவுருவமாகவுள்ள அம்மனின் திருவுருவும் சுயம்பு உருவங்களாகவே காட்சி தருகின்றன. சுயம்புருவங்களின் தன்மை - அமைப்பு ஆகியன பற்றி சில்பரத்தினம் முதலிய சிற்ப நூல்களிலும் (சில்பரத்தினம் II - 2 - 128 – 132) குறிப்பிடப்பட்டுள்ளன. சுயம்புருவங்கள் பற்றி சிற்ப நூல்கள் குறிப்பிடும் கருத்துக்கள் சிலவற்றை இங்கு நோக்குவாம். சுயம்பு உருவங்கள் தாமுகத் தோன்றுவன. தொடக்கம் அற்றன. அவை பலவகையின, சில பழுதடைந்தும் காணப்படுவன. சில மெல்லிய தோற்றத்தின. சில குட்டையாகவும், சில பலகை போன்ற தட்டையான அமைப்புமுடையன. சில பலமுனைகளுடன் கூடியனவாககவும், பசு மாட்டின் காதுபோன்ற அமைப்பைக் கொண்டனவாகவும் விளங்குவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதுளம் பழம் போன்ற அமைப்பைக் கொண்ட சுயம்பு உருவங்களும் உள்ளன. சில பீடத்துடன் காணப்படுவன. சிலவற்றில் பீடம் இருக்காது. சுயம்புருவங்கள் கோயில்களில் மட்டுமன்றி காடு, மலை, ஆறு, கடல், புண்ணிய தீர்த்தம், புண்ணிய சேக்ஷத்திரம் ஆகிய இடங்களிலும், விளங்குவன. இவை எந்நிலையில் இருக்கின்றனவோ அந்நிலையில் உபாசிப்பதற்கு உகந்த இவற்றைக் காண்பதும், பூசிப்பதும் சிறந்த சித்தியைத்தரும். இதனாலன்றோ அனுதினமும் ஆயிரக்கணக்காக அடியார்கள் அம்பாளை வணங்க வந்தவண்ணமிருக்கின்றார்கள். சுயம்புருவங்களின் மூலத்தையோ அல்லது அதன் அமைப்பினையோ ஆராய்வது உகந்ததல்ல என்பது ஸ்ரீகாஞ்சிப் பெரியவர்கள் போன்ற அனுபூதிமான்களின் கருத்தாகும்.

மேற்கூறிய கருத்துக்களை ஆற அமர நடுநிலை நின்று சிந்திக்கும்போது கருவறைக்குள் காணப்படும் பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் நயினை நாகபூஷணியம்மனின் அருவுருவத் திருவுரு சுயம்புருவம் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

மேலும், கருவறைக்குள் சுயம்புருவமாகக் காணப்படும் கல்லினாலான கருநாகச் சிலையானது ஐந்து தலைநாகம் படமெடுத்திருப்பது போன்று பார்ப்பதற்குப் பயங்கரமாகச் சீறுவது போல தெரிகின்றபோதும், உண்மையன்புடன் உபாசிக்கின்றவர்களுக்கு பக்திமையை ஏற்படுத்தக் கூடியதாகவிருக்கின்றது. காரைக்குடி எம். செல்லக்கண்ணு ஸ்தபதியார் மூலஸ்தானத்திலுள்ள அம்மன்விக்கிரகம் ஆயிரம் வருடங்களுக்கு முந்திய புராதனமான தென்ற கருத்தைவெளியிட்டதுடன் நாகப்பிரதிஷ்டை இதற்கு முன்னரே ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் வீரகேசரி (11-03-1951) பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார். 11-03-1951-ல் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களுடன் நயினை நாகபூஷணியம்மன் ஆலயத்தைத் தரிசிக்க வந்த தென்னிந்திய சிற்ப சாஸ்திர ஆராய்ச்சியாளர் திரு. எம். நரசிம்மன் அவர்கள் " நயினாதீவில் மூலஸ்தானத்தில் அம்மன் உருவம் போல் இருப்பது பழைய நாகப்பிரதிஷ்டையே. இது மிகவும் தேய்ந்து அம்மன் உருவம் போலத் தெரிகிறது. இதற்குப் பின்னால் ஐந்து தலை நாகப்பிரதிஷ்டை ஒன்று உண்டு. இந்தியாவிலும் நாக வழிபாட்டிற்கே பிரத்தியேகமாகவுள்ள இவ்வளவு புராதன கோயிலைக் காண்பதரிது கலப்பற்ற தூய்மையான நாக வழிபாட்டுப் பண்பினை நயினாதீவிற்காணலாம். இந்த நாகச் சிலை பதினான்காயிரம் வருடப் பழமையுடையது. இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் வேறு எங்கும் பார்க்க முடியாத பிரத்தியட்ச உருவமாக சர்ப்பவழிபாட்டின் தொன்மைக் கருவூலமாக இது இருக்கின்றது " என நாகக்கல்லின் காலத்தைக் கருவிகொண்டு கணித்தபின் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்நாக உருவின் வால் பகுதியை நிலத்துள் பல அடி ஆழத்திற்கு கீழ் நோக்கி அகழ்ந்து சென்று அறிய முற்பட்டபோது அதன் வாற்பகுதி முற்றுப்பெறாது வளர்ந்து சென்றதும் உண்மையான செய்தியாகும். எனவே கருவறைக்குள் காணப்படும் கருநாகச் சிலையும், பீடத்திலுள்ள அம்பாளின் திருவுருவும் சுயம்பு உருவங்களே என்பது மலைமேல் விளக்கு.

இலங்கையிலுள்ள சக்தி ஆலயங்களுள் சுயம்புத் திருவுருவத்தைக் கர்ப்பக்கிருகத்தில் கொண்டிலங்கும் ஒரேயொரு சத்தியாலயம் நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயம் எனலாம். இலங்கையிலுள்ள சிவாலயங்களில் இப்படியான பெருமைமிகு சுயம்புகேஸ்வரர் ஆலயங்கள் ஒட்டிசுட்டான், கொக்கட்டிச்சோலை, கற்சிலைமடு, வன்னேரிக் குளம் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

நிகமஞானதேவர் தமது ஜீர்ணோத் தாரண தசகத்தில் இந்தியாவெங்கணும் பரந்து விளங்கும் அறுபத்துநான்கு சுயம்பு லிங்கங்களைக் குறிப்பிட்டுள்ளார் என்பது மனம் கொள்ளத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயம்பு உருவங்களில் ஏதாவது உற்பாதங்களினுல் சிதைவு காணப்படினும் திரும்ப வும் பிரதிஷ்டை முதலிய கிரியைகளின்றி வழிபடலாம். அத்துணை பெருமைவாய்ந்தன சுயம்பு உருவங்கள். இவற்றில் ஏதாவதொரு பாகம் பாதிப்புற்ருல் அப்பாகம் தங்கம் அல்லது செம்பு ஆகியவற்ருல் செய்யப்பட்ட பட்டங்களைக் கொண்டு பிணைக்கப்படலாமென்றும், பின் னப்பட்ட பகுதியை வெள்ளி முதலிய உலோகங்களால் நிரவித் தொடர்ந்து பூசிக்கலா மென்றும் சாத்திரங்கள் சாற்றுகின்றன. ஆகமங்களில் ஏனைய உருவங்களுக்கு விதிக்கப்படும் விதிமுறைகள் நயினையில் உள்ளது போன்ற சுயம்புருவங்களுக்கு உரியன வல்ல வென்பது இங்கு மனங் கொள்ளத்தக்கதாகும்.

## மணிபல்லவத்தின் மனேன்மணியம்மை

நயினுதீவு மணிபல்லவம் மணித்தீவு என்றெல்லாம் அழைக்கப்படும் வரலாற்றுச் சிறப்புடையது. இங்கு எழுந்தருளி அருள் பாலிக்கும் அம்மனைச் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் என்றே பண்டு தொட்டு இன்றுவரையும் அன்பர்கள் அழைத்து வருகின்ருர்கள். அருளா ளர்கள் அம்பிகையின் அருட்பேராயிரத்தைக் கூறி வாழ்த்தி வணங்குவது சாக்த வழி பாட்டு மரபாகும். இந்த மரபினடிப்படையில் ஸ்ரீ நாகபூஷணி அம்மனை நாகேஸ்வரி நாக இராஜேஸ்வரி, நாகஇராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி என்றெல்லாம் பக்தர்கள் போற்றி வணங்குவர். "மெய் அறிவாளர்கள் பல பெயரிட்டு அழைத்தாலும் மெய்ப் பொருள் ஒன்றே. என்பது இந்து மத பண்பாட்டுப் பாரம்பரியமாகும். இக்கருத்தை இருக்குவேதம், 'ஏகம் சத் விப்ரா பஹுதாவதந்தி" (இ. வே. I-164-46) என்று குறிப்பிடுவது நோக்கற் பாலதா கும். இங்குள்ள மூலமூர்த்தி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் என அழைக்கப்படுகின்ற போதும் இவ் வாலயத்தின் எழுந்தருளி மூர்த்தியாக விளங்கும் அம்பிகை மனேன்மணியம்மைக்குரிய அங்கலட்சணத்துடன் கூடிய நான்கு திருக் கரங்ளுடன் திகழ்கின்ருள். முன்னுள்ள வலக் கரமும் இடக்கரமும் அபய வரத கரங்களாக அமைந்துள்ளன. பின் வலக்கரம் தாமரை மலரைத் தாங்கியுள்ளது. பின் இடக்கரத்தில் அட்சமாலை திகழ்கின்றது. இந்த மனேன் மணியம்மையின் சொரூபமான திருவுருவச் சிலையொன்று பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வரவழைக்க பட்டிருந்த போதும் 28-08-1983-ல் நடைபெற்ற மஹா கும்பாபிஷேக தினத்தன்றே பிரதிஷ்டை செய்வதற்குத் திருவருள் கிடைத்துள்ளது. இத் திருவுருவம் தெற்கு நோக்கிய வண்ணம் தென் கோபுரவாயில் வழியாக வணங்கக் கூடிய முறையில் மகா மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்த மனேன் மணியம்மையின் சிற்பச் சிலைகளை விமானம் கோபுரம் ஆகியவற்றிலும் கண்டு தர்சிக்கக் கூடியதாக விருக்கின்றது. மங்காப் புகழ் பூக்கும் மணித்தீவிலுறை மனேன்மணியை ஸ்ரீ நாகபூஷணி அம்மனெனவே நினைந்துருகி அந்தமில் ஆனந்தம் அடையலாம்.

## ஆகம மரபில் அமைந்துள்ள திராவிடச் சின்னம்

இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களுள் நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலய மும் திராவிடப் பாணியில் கட்டப்பட்ட சிறந்த கோயில்களுள் ஒன்றெனலாம். இவ்வால யம் ஆகம முறைப்படி கிழக்கு நோக்கிய வண்ணம் அழகுற அமைக்கப்பட்டிருக்கின்றது. நயினை ஆலய அமைப்பினைக் கூர்ந்து கவனித்தால் சுயம்புருவான நாகத்தையும் அம்மனை யும் கொண்டிலங்கும் கர்ப்பக் கிருகம், இரு நிலை விமானம், அர்த்த மண்டபம், மகாமண் டபம், வசந்த மண்டபம், தெற்குப்புற ராஜகோபுரம், கிழக்குப்புற இராஜ கோபுரம், நவக்கிரகக் கோயில், நால்வர் கோயில், சண்டேஸ்வரர் கோயில், பிள்ளையார், சுப்பிரமணி யர், பைரவர், சூரியன், சந்திரன் ஆகிய பரிவார மூர்த்திகள், யாகசாலை, பாகசாலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனசாலை, திருக்கேணி ஆகிய முக்கிய உறுப்புக்கள் இருப்பதை அவதானிக்கலாம். கர்ப்பக்கிருகத்தின் புறச்சுவர்களிலமைக்கப்பட்ட கூடுகளான பஞ்சர கோஷ்டங்களில் நிர்த்த கணபதி, கௌமாரி, வைஷ்ணவி ப்ராம்மி, துர்க்கை, ஆகிய கோஷ்ட தேவதைகள் காணப்படுகின்றனர்.

இப்படியாக ஆகமமரபும் திராவிடக் கலைகளும் இணைந்து சிறந்து விளங்கும் திருக் கோயிலாக இக்கோயில் மிளிர்கின்றது.

## அம்பாளை அர்ச்சித்த அரவம்:

திருவானைக்காவில் உள்ள இறைவனை யானையும், சிலந்தியும் பூசித்ததைப்போன்று நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மையை அரவம் அர்ச்சித்து வந்ததாகவும் - வருவதாகவும் அம் பாள் அடியார்களின் அனுபவக் கதைகள் கூறுகின்றன. புராதன காலத்தில் நயினை யிலுள்ள ஸ்ரீ நாகபூஷணி அம்மனை ஒரு நாகம் பூசித்து வந்ததாம்.

ஒரு நாள் அந்த நாகம் அர்ச்சனை செய்தற் பொருட்டு பூக்கள் கொய்து கொண்டு நயினாதீவுக்கு வடபால் உள்ள புளியந்திவு (புலியேத்தி) என்னும் சிறுதீவிலிருந்து மீளும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டு அஞ்சிய நாகம் நயினைக் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக் கொண்டிருந்தது, கருடனும் அந்த நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டகலாமலும் அதற்கெதிரேயிருந்த கல்லொன்றின்மீது இருந்தது. இங்ஙனம் இவையிரண்டும் பகைமை யைக் கொண்டிருந்த சமயத்தில் அக்கடல் வழியாக மரக்கலத்தில் சென்ற வைசிகன் ஒருவன் (மாநாய்கன் என்பர் சிலர்) அந்நாகத்தின் பயத்தைக் குறிப்பாலுணர்ந்து மரக் கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான். ''உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து நாகபமாள் கோவிலுக்குக் கொடுப்பாயானல் விலகுவேன் என்றது கருடன். வணிகனும் அங்ஙனமே செய்தான். நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டிற்குத் திரும்பினான். நடந்தவற்றையெல்லாம் தன் மனைவியிடம் கூறினான். அன்றிரவு வணிகனும், மனைவியும் நித்திரை கொள்ளும் போது ஒரு பேரொளி தோன்றி அவர்களுடைய கண்களைச் சிறிது நேரம் கூசச் செய்தது பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்த பொழுது நாகரத்தினக் கற்கள் அவ்வறையிலே இருப் பதைக் கண்டார்கள். நயினை அம்பிகையின் திருவருள் இருந்தவாறென்னேயென அவர்கள் வியப்புற்று நயினாதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டு நயினையின் வடகிழக்குக் கரை யோரத்தில் ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தார்கள். ஏழு வீதிகளும், கோபுரங்களும் அமைத்தார்கள். செப்புத்தேர், பவளததேர்களும் செய்வித் தார்கள். நயினா பட்டர் என்னும் பிராமணக் குருவைப் பூசகராக நியமித்தார்கள். நயினா தீவின் கடலோரத்தில் - கடலுக்குள் இன்றும் பாம்பு சுற்றிய கல், கருடனிருந்த கல் ஆகிய இரு கற்கள் காணப்படுகின்றன. இன்னும் மக்கள் மத்தியில் இக்கர்ண பரம்பரைக் கதை வேரூன்றியிருக்கின்றது.

## வழிபாட்டு மரபுகள்:

எல்லாம் வல்ல பராசக்தியை நாம் உபாசிக்கும் வழிகள் பலவுள. அவற்றுள் கலி யுகத்தில் யோகியர், ஞானியர் தவிர்ந்த பொதுமக்களால் அனுஷ்டிக்கப்படுவனவற்றுள் மிகவும் பிரசித்தமானவை மூன்று. அவையாவன வைதிகமரபில் அம்பிகையை வழிபடுதல் ஆகம மரபில் அம்பிகையை ஆராதித்தல், தாந்திரிகமுறையில் ஸ்ரீ வித்தியோபாசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணுதல். இம் மூன்று முறைகளில் அமையும் வழிபாட்டு மரபுகள் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு மந்திர. தந்திர யந்திர முறைகளால் வழிபடப்படும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தமிழ் நாட்டு மரபிலமைந்த தட்சிணசார வழிபாட்டு முறையே பண்டு தொட்டு இன்று வரை இருந்து வருகின்றது

இக் கோயிலின் மகோற்சவம் ஆனி மாதத்தில் நடைபெறுவது வழக்கமாகும். ஆரம்பத்தில் 10 நாட்கள் மட்டும் பிரமோற்சவம் நடைபெற்றது. 1960-ம் ஆண்டில் இருந்து 15 நாட்கள் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத் திருவிழாக்களுள் தேர்த் திருவிழாவின் போது பல்லாயிரம் பக்தர்கள் கூடுவர். அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள், 8-07-1957-ல் செய்து முடிக்கப்பெற்ற சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய திருத்தேரில் பவனி வரும் போது பக்த கோடிகள் பரவசமடைவதைப் பார்க்கமுடியும் இன்று விநாயகருக்கும், சுப்பிரமணியருக்கும் தனித்தனி சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரத் தேர்கள் இருக்கின்றன. இவ்வாலயத்தின் மஞ்சத் திருவிழாவும் எம் நெஞ்சத்தை உருக்கும் பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது. இம் மஞ்சத் திருப்பணி நயினை - கொழும்பு வர்த்தகப் பெருமக்களால் 1981-ம் ஆண்டில் செய்து முடிக்கப்பெற்று 10-07-1981-ல் அதன் வெள்ளோட்டமும் நடைபெற்றது.

நித்திய, நைமித்திய, காமியக் கிரியைகள் சிறப்பாகப் பேணப்படும் இவ்வாலயத்தில் நைமித்தியக் கிரிகைகளுள் ஒன்றான மகா கும்பாபிஷேகம் காலாகாலம் நடைபெற்று வந்துள்ளது. பன்னிரண்டு வருடங்களுக்கொரு முறை மகாகும்பாபிஷேகம் செய்யப்படுவது இந்து சமய சாஸ்திர மரபாகும். இதற்கமைய நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் 26-4-1951 இலும் 3-6-1963 இலும் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதன் பின்னர் சுமார் இருபது வருடங்களின் மேல் 28-08-1983ல் அம்பிகையின் திருவருள் கொண்டு அறங்காவலர் சபையினரால் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது சுயம்புருவங்கள், பிரதிஷ்டை முதலிய கிரியைகளின்றி வழிபடத்தக்க பெருமை வாய்ந்தவை என்பதை மீண்டும் இங்கு நினைவு கூருவது பொருத்தமாகும். ஆகமங்களில் குறிப்பிடப்படும் ஆறு காலப் பூசைகளில் இவ்வாலயத்தில் தற்பொழுது காலைப் பூசை, உச்சிக்காலப் பூசை, சாயரட்சைப் பூசை, அர்த்தயாமப் பூசை ஆகிய நான்கு நேரப் பூசைகளே நித்தியக் கிரியைகளாக நடைபெற்று வருகின்றன.

மாதந்தோறும் வரும் பூரணையில் அம்பிகை ஸ்ரீ சக்கரத்தில் வித்யோபாசனை செய்யப் படுகின்றாள். யந்திர வழிபாடு இந்தியாவிலும், இலங்கையிலும் பெரிதும் விளங்குகின்றது. இவ்யந்திரங்களனைத்துள்ளும் பிரசித்தி பெற்றது ஸ்ரீ சக்கிரம். இந்த யந்திரத்தை மூன்று வகையாக அமைப்பார்கள் இவற்றிற்கு மேரு, கைலாசம், பூ என்ற மூன்று நிலைகள் உண்டு. நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்தில் மேருப்ரஸ்தார ஸ்ரீ சக்கிர யந்திரத்தில் அம்பிகை உபாசனை செய்யப்படுகின்றாள் புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி தினங்களில் இவ்வாலயத்தில் நிகழும் சக்தி வழிபாடுகள் அற்புதம் மிக்கவை. பிள்ளையில்லாதவர்கள் நாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்கு வருகை தந்து நாகப் பிரதிஷ்டை செய்து பிள்ளைகளைப் பெற்று மகிழ்கின்றனர் தமிழகத்திலும் இம்மரபு நிலவிவருகின்றது. இது இவ்வாலயத்தின்தனிப் பெருஞ் சிறப்பாகும்,

இத்துணை வரலாற்றுச் சிறப்புக்களோடும், சாக்த வழிபாட்டு மரபுகளோடும் சிறந்து விளங்கும் அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மனை வணங்கி பேரின்பம் பெறுவோமாக

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கு அரோஹரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாடு - சில குறிப்புகள்

வி. சிவசாமி, B. A. Hons. (Lon.). M A. ( Cey. )
தலைவர், சம்ஸ்கிருதத்துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இந்து சமயத்திலுள்ள ஆறுவகை வழிபாட்டு முறைகளிலே சக்தி வழிபாடும் ஒன்ருகும். சக்தியெனில் ஆற்றல் அல்லது வலு எனப் பொருள்படும். இறைவன் பல பெயர்களினுல் அழைக்கப்படினும், அவனது பிரபஞ்ச இயக்கத்திற்குச் சக்தியின் துணை அவசியமாகும். எனவேதான் சைவ சமயத்திலே ''சக்தியின்றிச் சிவமில்லை'' என்ற கருத்து வலியுறுத்தப்படும். சங்கராச்சாரியார் சௌந்தர்யலஹறியில் இக்கருத்தினைச் ''சக்தியின்றிச் சிவம் அசையவும் முடியாது'' என மேலும் வலியுறுத்தியுள்ளார்.

சக்தி வழிபாடு சாக்தம் எனக்கூறப்படும். இறைவனை இந்துசமயஞானிகள் குணங்கள் எவையும் அற்ற நிலையிலே நிர்குணப்பிரமம் எனவும், குணங்களோடு கூடிய நிலையிலே சகுணப்பிரமம் எனவும் குறிப்பிடுவர், பின்னைய நிலையிலேதான் இறைவனுக்குச் சிவன், சக்தி பிள்ளையார், முருகன், திருமால், சூரியன் எனப் பல பெயர்களிடப்படும். இவ்வறுவகைத் தெய்வ வழிபாடுகளிலும் கடவுளைப் பெண்ணுகப்போற்றி வழிபடும் தனிச் சிறப்புச் சாக்தத்திற்கே உண்டு. ஏனைய ஐந்திலும் ஆண்தெய்வத்துக்கே முதலிடம் அளிக்கப்படும். எனினும் இவ் வாண் தெய்வங்களுக்குரிய பெண் தெய்வங்கள் உள்ளனர். இவர்களிலே சக்தி சிவனின் வாமபாகம் முழுவதையும் தனதாக்கி இறைவனை அர்த்தநாரீஸ்வரராக்கிவிட்டாள். சம அந்தஸ்துப் பெற்றுவிட்டாள். ஏனைய பிள்ளையார். முருகன், திருமால், சூரியன் ஆகியோருக்கும் தனித் தனிசக்திகள் உள்ளனர், இவ் அறுவகை நெறிகளையும் சுமுகமான முறையிலே ஒன்றுபடுத்தும் சைவத்திலே, சக்தி சிவனின் மனைவி; திருமால் சக்தியின் மூத்த சகோதரர், எனவே சிவனின் மைத்துனர்; பிள்ளையாரும், முருகனும் சிவன் சக்தியாகியோரின் பிள்ளைகள். பிறிதொரு மரபின்படி. திருமாலே சக்தியாயுள்ளார். சூரியன் சிவனின் அம்சமாகவும் கொள்ளப்படுகிருர். எனவே. இவ் அறுவகை நெறிகளுக்குரிய தெய்வங்கள் அனைவரும் சைவத்தில் இணைந்துள்ளனர். சிவனிலும் சக்தியிலும் ஒன்று சேர்ந்துள்ளனர். சுருங்கக்கூறின் இறைவனை ஆணுக உருவகிக்கும் போது சிவனுகவும், பெண்ணுக உருவகிக்கும்போது சக்தியாகவும் ஞானிகள் அழைப்பர்.

சக்தியைப் பரமாகக் கொண்ட நெறியே சாக்தம். பரம்பொருளைப் பெண்ணுகப் உருவகிக்கும் முறை மிகத்தொன்மையானது. புராதன சமூகங்கள் தாய் வழியுரிமைச் சமூகங்களாக நிலவிய காரணத்தினுலே தாய்த் தெய்வவழிபாடு தோன்றியிருக்கலாமெனக் கருதப்படுகிறது. மேலும், மனிதன் தான் பலவழிகளிலே நன்மை பெற்று வாழ்வதற்குக் காரணமாவுள்ள பூமியினைத் தாய்த்தெய்வமாக, பூமாதேவியாக வழிபட்டு வந்தான். இவ்வாறும் தாய்த்தெய்வ வழிபாடு உருவாகியிருக்கலாம். நடைமுறையிலே மனிதன் தன்னைப் பெற்று வளர்த்த அன்னையைத் தெய்வமாகவும் கருதி வந்துள்ளான். மேலும், உலகவாழ்விலே மனித குலம் தொடர்ந்து நிலவுவதற்கும் ஆண் பெண் இனங்கள் அவசியமாயின. எனவே மனிதனுடைய இறைவழிபாட்டிலும் ஆண் தெய்வ, பெண் தெய்வ வழிபாடுகள் தோன்றலாயின எனலாம். இன்னேரன்ன பல காரணங்களினுலே பெண்தெய்வ வழிபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகி முக்கியத்துவம் பெற்றுள்ளன. பாரதியாரும் "உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை உமையவளென்றறியீரோ" எனத் தாயிலேயே பராசக்தியைக் கண்டார்.

வரலாற்றுரீதியிலே நோக்கும்போது, இந்தியாவிலே சிந்து சமவெளி நாகரீகத்திற்கு முற்பட்ட கிராமிய நாகரீகங்களிலே தாய்த்தெய்வ வழிபாடு நிலவியதற்குச் சான்றுகள் உண்டு. அக்காலம் தொட்டு இன்றுவரை சக்தி வழிபாடு ஒரு பிரதானவழிபாடாக இந்தியாவிலே நிலவி வருதல் கண்கூடு. இந்தியாவிற்கு வெளியே புராதன காலத்திலே சின்ஞசியாவிலே வாழ்ந்த விசியன்ஸ் சாசனங்களிலே வரும் திர்க்கஸ் (இந்தியத் துர்க்கா), பாரசீகப் பெண்தெய்வமான அனஹித, சுமேரிய-பபிலோனியப் பெண் தெய்வமான இன்னிமி-ஸ்தர், எகிப்திய இஸ்தர்-அஸ்ரட் முதலிய பெண்தெய்வங்களைக் குறிப்பிடலாம். கப்படோசியாவிலே வணங்கப்பட்ட 'மா' என்னும் முக்கியமான தாய்த் தெய்வம் குறிப்பிடற்பாலது. போகஸ் கோயிலுள்ள சிற்பங்களிலே இவர் பெண் சிங்கம் அல்லது புலிமேல் வீற்றிருக்கின்றூர். கிறீற்றி தீவிலும் பெண் தெய்வ வழிபாடு நிலவிற்று. இவ்வாறு எகிப்து கிறீற்றி தீவு மேற்காசியா முதலிய இடங்களிலே மிகப் பழைய காலத்திலே தாய்த்தெய்வ வழிபாடு பிரபல்யமாக நிலவிற்று.

சக்தி வழிபாடு இந்தியாவிலும் ஏற்கனவே குறிப்பிட்டவாறு, சிந்து சமவெளி நாகரீகத்துக்கு முன்பே (கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பே) தோன்றிப் பிரபல்யமாயிற்று. சிந்து சமவெளி நாகரீகச் சின்னங்களிலே தாய்த் தெய்வ வழிபாட்டினைக் காட்டும் சிலைகள், முத்திரைகள் குறிப்பிடற்பாலன. தொடர்ந்து வேத காலத்திலே பெண்தெய்வ வழிபாடு நிலவியதற்கான சான்றுகள் உள்ளன.

இருக்குவேதத்திலே ஆண் தெய்வ வழிபாடு பிரபல்யமாகக் காணப்படினும், உஷா, ராத்திரி, அதிதி, பிருதுளி முதலிய பெண் தெய்வங்கள் பற்றிய சூக்தங்கள் கவனிக்கற்பாலன. மேலும் காலத்தால் பிந்தியதாயினும், தேவி சூக்தம். துர்க்கா சூக்தம், ஸ்ரீசூக்தம் ஆகியன குறிப்பிடற்பாலன. பிந்திய வேதங்கள். பிராமணங்கள், ஆரண்யங்கள்உபநிடதங்களிலே தாய்த்தெய்வ வழிபாடு நன்கு நிலவிற்று ஆரியர், ஆரியரல்லாத நாகரிகங்கள் முரணின்றி ஒன்றுபட சக்தி வழிபாடும் உயர்நிலை பெற்றது. வாஜசனேயி சம் ஹிதையிலே 'அம்பிகா' எனவும் தைத்திரேய ஆரண்யகம், முண்டக உபநிஷத் ஆகியன வற்றிலே துர்க்கா' கார்த்தியாயனீ, கன்னியாகுமரி முதலிய பல பெயர்களாலும் அம்பாள் அழைக்கப்படுகின்றுள். இவற்றுள்ளே கேனஉபநிஷதம் தரும் சான்று குறிப்பிடற்பாலது. இதிலே அம்பாள் அழகு மிக்க உமாவாக பரப்பிரமம் பற்றிய ஞானத்தை இந்திரன் முதலிய தேவர்களுக்கு அறிவுறுத்தும் மேலான பரப்பிரமமாகவே மிளிர்கின்றுள். மேலும் பாவனோபநிஷத் திரிபுரோபநிஷத், பஹ்விருதோபநிஷத் முதலியவை முக்கியமான தேவி உபநிடதங்களாகும்.

வேத காலத்தினைத் தொடர்ந்து தாய்த் தெய்வ வழிபாட்டில் ஏற்பட்ட வளர்ச்சிகளையும் மாற்றங்களையும், இதிகாசங்கள் புராணங்கள் ஆகமங்கள் குறிப்பாகத் தந்திரங்கள் முதலியன வற்றிலும் வேறு இலக்கியங்களிலும் தொல்லியல் சான்றுகளிலும் ஓரளவாவது அறியக்கூடியதாக உள்ளது. இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் இவ்வழிபாடு பற்றிய சான்றுகள் உள்ளன. இவற்றிலே மகாபாரதத்திலே வரும் நேர்த்தியான துர்க்கா தோத்திரங்கள் குறிப்பிடற்பாலன. புராணங்களிலே குறிப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கண்டேய புராணத்திலே வரும் தேவிமகாத்மியம் குறிப்பிடத்தக்கது. தேவியின் வீரதீரச் செயல்களும், பெரும் சிறப்பும் இதிலே நன்கு கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக "எல்லா உயிர்களிலும் சக்தி வடிவமாகத் திகழும் தேவிக்கு வணக்கம்"! எனவும் "மங்களமாக உள்ள யாவற்றிலும் மங்களமாக விளங்குபவளே! எல்லா நன்மைகளையும் வழங்குபவளே! எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுபவளே! (அன்பர்) அடைக்கலம் புகுதற்குரியவளே, மூன்று திருக்கண்ணை உடையவளே கௌரீ தேவியே! தேவரீருக்கு வணக்கம்" எனவும் வரும் பகுதிகளைக் குறிப்பிடலாம்.

இறைவனையும் இறைவியையும் தனித் தனியாக மட்டுமன்றி ஒரே பரம் பொருளின் வெவ்வேறு அம்சங்களாகவும், ஒரே வடிவின் பிரிக்க முடியாத இரண்டு அம்சங்களாகவும் ஞானிகள் கண்டனர். இப்பேர்ப்பட்ட வடிவங்களில் ஒன்றான அர்த்தநாரீஸ்வரர் வடிவத்தில் இறைவனை காளிதாசர் கண்டார். எனவே தமது பெரும் காப்பியங்களில் ஒன்றான இரகு வம்சத்தின் காப்புச் செய்யுளிலே "சொல்லும் பொருளும் போல பிரிக்கமுடியாது இணைந்து விளங்கும் உலக அன்னையாகவும், அப்பனாகவும் மிளிரும் பார்வதி பரமேஸ்வரனை" பிரார்த்தித்துத் தன் நூலைத் தொடங்கியுள்ளார்.

எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாக சக்தி, பராசக்தி என சிறப்பிக்கப்படுகிறாள். இறைவனுக்கு நாமம், உருவம் இல்லாவிடினும் உயிர்களின் நன்மைக்காக அவர் பல திருவடிவங்களைக் கொண்டுள்ளார். இவரின் உருவ, அருவ, அருவ உருவ நிலைகளின் பல்வேறு அம்சங்களையும், சிறப்புக்களையும் அன்பர்கள் பல திருப்பெயர்கள் மூலம் புலப்படுத்தியுள்ளனர். எனவே இறைவனைப் பெண்ணாக வணங்குவதற்கு பல பெயர்கள் தோன்றியுள்ளன. இவற்றுள்ளே அம்பாள், அம்மன், அம்மை, அம்பிகை போன்ற பதங்கள் இறைவியின் தாய்த் தன்மையினை குறிப்பன. உமா என்ற சொல்லும் அம்மா என்ற சொல்லுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். அம்மா என்ற சொல்லுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். அம்மா என்ற பதத்தின் திரிபாக இது கொள்ளப்படும். காளிதாசர் தமது குமாரசம்பவத்திலே அம்பாள் இமயமலை அரசனின் மகளாகக் கடும் தவம் செய்ய முற்பட்டபோது தாய் இவரை கடும் தவம் செய்ய வேண்டாம் என வேண்டியதாகக் கூறப்படும் நிகழ்ச்சியின் அடிப்படையிலே இப்பெயர் தோன்றியதாக கூறியுள்ளார். ('ஓ' விளித்தலைக்குறிக்கும்: 'மா' எனப் பொருள்படும்) மேலும் புராதன வரலாற்று ரீதியில் நோக்கும்போது பபிலோனிய. அக்காடிய தெய்வங்களின் பெயர்களான உம்மு அல்லது உம்மா உர்மி ஆகியவற்றுடன் இப்பெயர் ஒப்பிடற்பாலது. காளி ஒரு வீரத்தெய்வம்: காளி எனில் கறுப்பு நிறமுடையவள், அச்சத்தை ஏற்படுத்துபவள் எனப்பொருள்படும். பத்திரகாளி எனும் போது அவளின் சாந்தமான நல்லியல்பு வெளிப்படுகிறது. 'தேவி' எனும் பதம் 'தேவ' எனும் சொல்லின் பெண்பாற் பதமாகும். 'தேவ' எனில் ஒளியுள்ள பொருள் எனப் பொருள்படும். லத்தின் மொழியிலுள்ள 'தியுஸ்' எனும் பதமும் இதே கருத்துடையது. புராதன காலம்தொட்டு மனிதன் ஒளியுள்ளபொருட்களை குறிப்பாக இயற்கை அம்சங்களைத் தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்துள்ளான்; சமயத் தத்துவக் கருத்துக்கள் வளர்ச்சியடைய இறைவனே பேரொளியாக விளங்குகின்றான் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது சூரியன் சந்திரன், நட்சத்திரங்கள் தீ முதலியனவற்றாலே புறவிருள் நீங்கி வெளிச்சம் உண்டாகின்றது. கடவுள் எனும் பேரொளியால் அஞ்ஞான இருள் நீங்கி மெஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான வெளிச்சம் உண்டாகின்றது. எனவே, இறைவனை ஒளியுள்ளவராகக் கூறும்முறை உலகிலுள்ள சமயங்கள் அனைத்திலும் நிலவுதல் தெளிவு. பராசக்தி பேரொளியாக விளங்குவதாலே தேவி ஆகின்றாள். உலகில் உள்ள பொருட்கள் அனைத்திலும் சிறந்த அழகியராக அம்பாள் லலிதா எனவும் மூவுலகிலும் சிறந்த பேரழகியாக லலிதா மகா திரிபுரசுந்தரி எனவும் அழைக்கப்படுகிறாள். பிரபஞ்சம் அனைத்திற்கும் தலைவியாகத் திகழும் அம்பாள் இந்நிலையில் ''ஈஸ்வரி'' என வருணிக்கப் படுகிறாள்.

தேவி பாம்புகளின் இறைவி இவ்வகையாலும், விஷமாகிய பாவங்களையும், தீமைகளையும் உருவமாகக் குறிக்கும் பாம்புகளைத் தன்வசப்படுத்தி அவற்றின் தீய இயல்புகளைக் களைந்து செம்மைப் படுத்தும் தலைவியாகவும் தேவி 'நாகேஸ்வரி' எனச் சிறப்பிக்கப் படுகிறாள். உலகிலே மறம் நீங்கி அறம் நிலவும் வகையிலும் தீமை நீங்கி நன்மைநிலவும் வகையில் இறைவி அருளாட்சி நடத்தி வருகிறாள். தாய் அன்புக்கு ஈடுஇணையில்லை எனவே உலகனைத்தும் ஈன்ற பேரன்னையின் அன்புக்கு ஈடுஇணையில்லை. உயிர்களைக் காக்கும் இயல்பான பேரன்பால் இறைவியின் திருக்கண்கள் இமை கொட்டுவதில்லை என அன்பர் பெருமைப்படுவர். இப்பெயர்ப்பட்ட இறைவிக்குரிய திருநாமங்கள் பல உள்ளன. இவற்றுள்ளே லலிதா ஷ்டோத்தர சஹஸ்ரநாமவளி (1008 திருப்பெயர்கள்) லலிதாதிரிசத் (300 திருப்பெயர்கள்) அஷ்டோத்தர சஹஸ்ரநாமாவளி (108 திருப்பெயர்கள்) ஆகியன நன்கு குறிப்பிடற்பாலன. இவற்றுள்ளே முன்னைய இரண்டும் தேவிபூசை பற்றிய பல விபரங்களை பிரமாண்ட புராணத்திலே கூறப்படுகின்றன. இத்திருநாமங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆழமான கருத்து உண்டு. தேவிக்குரிய அஷ்டோத்தர சதநாமாவளியில், ''பிரமா, விஷ்ணு, சிவபிரான் ஆகிய முப்மூர்த்திகளையும் உள்ளடக்கிய மேலானவளுக்கு வணக்கம் எனத் தேவியின் பரத்துவம் கூறப்படுகிறது.

தேவியின் வீரச் செயல்களையும் சிறப்பியல்புகளையும் தேவிபராக்கிரமம் எனும் நூலும் விபரிக்கின்றது. தேவிபாகவதம் என்னும் நூலும் இவ்வாறே தேவியின் பல்வேறு வடிவங்களும், சாதனைகளும் காலம்தோறும் பற்பல உபாசகர்களின் உள்ளங்களைக் கவர்ந்துள்ளன. பல நூல்கள் எழுதற்குக் காரணமாக உள்ளன.

இறைவனைப் போலவே இறைவியும் பல்வேறு திருவிளையாடல்களையும், கடமைகளையும் புரியும்போது பலவாறு அழைக்கப்படுகின்றாள். வீரத்திற்குரிய தெய்வமாகத் துர்க்கை (வெல்லுதற்கரியள்) எனவும், செல்வத்திற்கு தலைவியாக லக்ஷ்மி எனவும், கலைகளின் தெய்வமாகச் சரஸ்வதி எனவும் வணங்கப்படுகிறாள். நவராத்திரி விழா சிறப்பாக இம்மூவர்க்குமுரியதாகும். மார்கழித் திருவெம்பாவைக் காலத்திலும், மனோன்மணி முதலிய நவசக்திகள் ஒருவரையொருவர் துயிலெழுப்புவதாகக் கூறப்படுகின்றது. பலவிதமான நோய், பிணிகளை நீக்குபவளாகவும், மழையினை வழங்குபவளாகவும் அம்பாள், மாரி மகாமாரி, கருமாரி (கிருஷ்ணமாரி) என அழைக்கப்படுகிறாள். மேலும் சப்தமாதராகவும், நாச்சிமாராகவும். அம்பாள் இலங்குகிறாள். சக்தி வழிபாட்டு வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களிலே பற்பல வணக்க முறைகளும் இதில் ஒன்றிணைந்துள்ளன. பத்தினி அல்லது கண்ணகி வழிபாடும் இத்தகைய ஒன்றே. வேதாகமமரபிற்கு இயைபாகவும் புறம்பாகவும் சக்தி வழிபாடு நிலவிவருகின்றது.

தமிழகத்திலே சக்தி வழிபாடு தொன்றுதொட்டு நிலவிவருகின்றது. சங்ககாலத்திற்கு மிக முற்பட்ட காலத்தில் இது தோன்றிவிட்டது. சங்ககாலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலே மிகப் பிரபல்யமான தாய்த்தெய்வமாகக் கொற்றவை விளங்கினுள். காலம் செல்ல மதுரை மீனுஷி, காஞ்சி காமாஷி எனத்தலங்களுடன் சிறப்பாகத் தொடர்புபடுத்தி அம்மனை மக்கள் வணங்கி வந்தனர். சைவத்திருமுறைகளிலும், வைஷ்ணவரின் 'நாலாயிரத்திவ்விய பிரபந்தத்திலும் அம்மன்வழிபாடு பற்றிய குறிப்புகள் உண்டு. பிற்காலத்திலே தான் அம்பாளின் தனிச்சிறப்பினைக் கூறும் சிறப்பான தமிழ்ப் பிரபந்தங்கள் தோன்றின. எடுத்துக்காட்டாகக் கம்பனின் சரஸ்வதியந்தாதி, குமரகுருபரரின் மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ், அபிராமபட்டரின் அபிராமி அந்தாதி, பாரதியார் பாடல்கள் முதலியன குறிப்பிடற்பாலன.

அம்பாளின் திருவுருவங்கள் பற்றிய விபரங்கள் சிற்ப நூல்களிலும். ஆகமங்களிலும் தந்திரங்களிலும் கூறப்பட்டுள்ளன. இவற்றைப் பின்பற்றிப் பல சிற்பங்கள் ஓவியங்கள் எழுந்துள்ளன. இந்தியா அடங்கலும், அப்பாலே, ஆப்கானிஸ்தான், இலங்கை, தென்கிழக்காசிய நாடுகளிலும் அம்மனின் சிலைகள் கிடைத்துள்ளன. புராதன வட இந்தியாவிலே புழக்கத்திலிருந்த சில வகைக் காசுகளிலும் அம்பாளின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. அம்பாளின் பெரும்பாலான சிலைகளில் அவர் என்றும் அன்பர்களுக்குத் திருவருள் வழங்கிக் கொண்டிருக்கும் வரதகரமும் யாவருக்கும் " அஞ்சாதே " என அபயம் அளிக்கும் அபயகரமும் நன்கு குறிப்பிடற் பாலன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சக்திக்குரிய பீடங்கள் பல உள்ளன. பல தலங்களிலே சிவனுக்குப் சக்திக்கும் சிறப்பான பெயர்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக மதுரையிலே கோயில் கொண்டிருக்கும் சிவனையும் சக்தியையும், சோமசுந்தரேஸ்வரர் எனவும் மீனுஷி எனவும் சிறப்பாக அழைப்பர். காஞ்சியில் அவர்களுக்கு ஏகாம்பரநாதர் காமாஷி எனும் திருநாமங்கள் உள்ளன. கன்னியாகுமரியிலே அம்பாள் நித்தமும் கன்னியாகவே திகழுகிருள். கேரளத்திலே பகவதி எனவும், சிருங்கேரியிலே சாரதா எனவும், மைசூரிலே சாமுண்டி யெனவும், காசியிலே விசாலாஷி எனவும், வங்காளத்திலே காளி துர்க்கா எனவும், அசாமிலே கர்மாக்யா எனவும் அம்பாள் சிறப்பாக அழைக்கப்படுகிருள்; வழிபடப்படுகிருள்.

அம்பாள் வழிபாட்டினை நன்கு கடைப்பிடிப்போர் சாக்தர் எனப்படுவர். இவர்கள் கூடுதலாக வடகிழக்கு இந்தியாவிலே உள்ளனர். இவ்வழிபாடு குறிப்பாக வங்காள மாநிலத்தில் பிரபல்யமாக உள்ளது. காளி வழிபாடு இங்கு நன்கு நிலவுகின்றது. சக்தி வழிபாட்டிலே கட்டுப்பாடுகள் பல உள்ளன. இவ்வழிபாடு அனுசரிக்கும் முறைகளுக்கேற்ப கௌல அல்லது வாமசாரம், தக்ஷிணுசாரம் என இருவகையாக நிலவுகின்றது. முன்னையது குறிப்பாக வட இந்தியாவிலும், பின்னையது தென் இந்தியாவிலும் நிலவுகின்றன. முன்னையதிலே வைதிக நெறிக்குப் புறம்பான அமிசங்களும் இடம் பெற்றன. இதிலே பஞ்ச மகாரங்கள் - 'ம' விலே தொடங்கும் ஐவகை இன்பங்களைத் துய்த்தல் அவசியமெனக் கருதப்படும், இவையாவன மத்ஸ்யம் (மீன்) மத்யம் (மது) மாமிசம், முத்திரை (கைவிரல்கள் மூலம் காட்டும் இரகசிய மொழி)மைதுனம் (பெண் உறவு) என்பனவாகும். இதில் ஒழுக்கக் கேடுகள் தோன்றின. இதற்கு மாறுகத் தக்ஷிணுசாரம் வைதிக மரபிற்கு உயர்ந்த இடம் அளிக்கிறது: இது ஸ்ரீ வித்தியா உபாசனை எனவும் அழைக்கப்படும். இம்முறையிலே காயத்ரி ஜபம் முக்கியமான இடம் பெறும். தென் இந்திய சக்தி உபாசகர்கள் அனுசரிக்க வேண்டிய ஆறு கடமைகளாக, நாடோறும் நீராடய், சந்தியா வந்தனம், ஹோமம், ஜபம், தேவி ஆராதனை, அதிதிபூசை ஆகியன கூறப்படுகின்றன. ஸ்ரீ சக்கர பூசையும் மேற்குறிப்பிட்ட முறையிலிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும். இலங்கையிலே நிலவும் சக்தி வழிபாட்டிலே தென் இந்திய வழிபாட்டு முறையே நன்கு இடம்பெற்றுள்ளது.

மேலும் அம்பாள் கவின்கலைகளின் வடிவமாகவும், அவற்றினை நன்கு ரசித்து மகிழ்பவளாகவும் விளங்குகிறாள். தேவி வழிபாட்டிலே, இசை, நடனம் ஆகியன வும் முக்கியமான ஓர் இடம்பெறும். எனவே சங்கீத உருப்படிகள் பலவற்றி லும் அவர் நன்கு போற்றப்படுகின் றார். கர்நாடக இசையைப் பொறுத்த ளவிலே புரந்தரதாசர், சங்கீத மும்மூர்த் திகள் சுவாதித் திருநாள் மகாராஜா பாபநாசம் சிவன் முதலியோர் இவரைப் பற்றி இயற்றிய கீர்த்தனைகள் பல உள் ளன. முத்துசுவாமி தீஷிதரின் தேவி நவா வரணக் கீர்த்தனைகளையும் சுவாதித் திருநாள் மஹாராஜாவின் நவராத் திரி கீர்த்தனையும் உதாரணங்க ளாகக் குறிப்பிடலாம். மேலும் பெருந் தொகையான தேவீஸ்தோத்திரங்கள் உள்ளன. இவற்றுள்ளே சங்கரரின் சௌந்தர்ய லஹரி பிரசித்திபெற்றது.

இலங்கையிலே சக்திவழிபாடு மிகப் பழமை வாய்ந்தது. இங்கு குறிப்பாகத் தென் இந்திய மரபையொட்டிய வழி பாட்டு முறைகளே சிறப்பிடம் பெறு கின்றன. இங்குள்ள பௌத்த மரபிலும் பெண்தெய்வவழிபாடு நிலவுகின்றது. இவற்றைவிட இவ்விரண்டிற்கு முற்பட்ட கால சமயமுறைகளிலான வழிபாட்டு முறையுமுண்டு. புராதன இலங்கையிலே பௌத்தம் பரவமுன் இந்துசமயமே குறிப்பாக நிலவிற்று. இதிலே சக்திவழி பாடும் இடம் பெற்றிருந்தது புராதன தலைநகரான அநுராதபுரத்திலே தேவி வழிபாடு நிலவியதற்கான சான்றுகள் காணப்படுவதாக அறியப்படுகிறது.

இலங்கையின் புராதன ஐந்து ஈஸ்வரங்களிலே சிவத்தலங்களிலே சிவனுடன் சக்தியும் வெவ்வேறு திருநா மங்களுடன் வணங்கப்பட்டு வருகிறாள். திருகோணமலையிலே கோணைநாதருடன் மாதுமையாகவும், திருக்கே தீச்சரத்திலே கேதீசநாதனுடன் கௌரி யம்மையாகவும், நகுலேஸ்வரத்திலே நகுலேஸ்வரருடன் நகுலாம்பிகையாகவும் முன்னேஸ்வரத்திலே முன்னைநாதருடன் வடிவாம்பிகை (வடிவழகி) யாகவும் அம்பாள் விளங்குகின்றாள். ஐந்தாவது ஈஸ்வரம் எது என்பது இன்னும் தெளி வில்லை இது பெரும்பாலும் தென்னிலங் கையிலே மாத்தறை அல்லது தேவி நுவரவில் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மேற்குறிப்பிட்ட திருத் தலங்களிலே, முன்னேஸ்வரத்திலே தான் இன்றும் சக்திவழிபாடு வேதாகம மரபுகளுக்கேற்ப நன்கு விமரிசையாக நடைபெற்றுவருகின்றது.

இலங்கையிலே சக்திவழிபாடு சக்தியின் பல்வேறு வடிவங்களுக்குரிய தனிப்பட்ட கோவில்களிலும், ஏற்கனவே குறிப்பிட்டவாறு சிவன்கோவில்களிலும் பிள்ளையார், முருகன், விஷ்ணு ஆலயங் களிலும் நடைபெற்று வருகின்றது. விஷ்ணு ஆலயங்களிலே விஷ்ணுவின் சக்தியாகிய மஹாலக்ஷ்மிக்கு வழிபாடு சிறப்பாக இடம் பெறும். எடுத்துக் காட்டாக பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திலே நடைபெறும் மஹாலக்ஷ்மி வழிபாட்டினை குறிப்பிடலாம் தேவிக்குரியன அல்லாத கோவில்களிலே அம்பாள் பரிவார தெய்வமாகவே பெரும்பாலும் மிளிர்கிறாள். மேலும், பத்தினித் தெய்வமாகிய கண்ணகிவழி பாடும், நாகதெய்வமாகிய நாகேஸ்வரி வழிபாடும் நன்கு குறிப்பிடத்தக்கவை. இலங்கையிலுள்ள சக்திவழிபாட்டிலிவை தனிச்சிறப்புக்கள் பொருந்தியனவாகவும் கருதப்படுகின்றன. இந்தியாவிற்போன்று இலங்கையிலும் சக்திவழிபாடு வேதாக முறைப்படியும், அதற்குப் புறம்பாகவும் நடைபெறுகிறது. அம்பாளின் வீரதீரச் செயல்களையும், பிரபாவத்தையும் காட்டும் உக்கிரமான கம்பீரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்களும் அவரின் சுமுகமான சாந்தமான மங்களகரமான வடிவங்களும் இலங்கையிலே நிலவும் வழிபாட்டு முறையில் உள்ளன. அம்பாளை வெவ்வேறு வடிவங்களிலே சமூகத்தின் பல்வேறு தட்டுகளிலும் உள்ள மக்கள் வழிபட்டுத் திருவருள் பெறுகின்றனர். மேலும் இலங்கையிலே சக்திவழிபாடு தனிவழிபாடாக அன்றிச் சைவத்தில் ஒன்றிணைந்த வழிபாடாகவே நிலவுகின்றது என்பது கவனித்தற்குரியது. எனினும் அதன் தனி அமிசங்கள் மறையவில்லை.

இலங்கையிலே நிலவும் சக்திவழிபாட்டின் சிறப்பையும், செழுமையையும் சில உதாரணங்களையும் காட்டிவிளக்கலாம். முதலிலே வடஇலங்கையிலே மாரியம்மன் வழிபாடும். கிழக்கு இலங்கையிலே கண்ணகிவழிபாடும் நன்கு பிரபல்யமாயிருப்பதைக் குறிப்பிடலாம். மாரியம்மன் - முத்துமாரி, மஹாமுத்துமாரி, மாரியம்மை, மஹாமாரி, மதுரை முத்துமாரி சிவமுத்துமாரி, ஸ்ரீ முத்துமாரியம்மன் மாரி எனப்பலபெயர்கள் அல்லது அடைமொழிகளுடன் வணங்கப்படுதலைக் காணலாம். இவருக்கான ஆலயங்கள் இலங்கையிற் பிறஇடங்களிலும் உள்ளன இவ்வாலயங்களிலே வேதாகம முறைப்படி மட்டுமன்றி, இதற்குப் புறம்பான முறையிலும் வழிபாடு நடைபெறுகின்றன. பேரிகை, பொங்கல், குளிர்த்தி முதலியன சேர்க்கப்பட்டும், சேராமலும் வழிபாடு நடைபெறுகின்றது. கண்ணகி வழிபாடும் இதுபோலவே மேற்குறிப்பிட்ட இரு முறைகளிலும் நிலவுகின்றது. கண்ணகி வழிபாட்டிற்குரிய தனிச்சிறப்பியல்புகளும் உள்ளன. மேலும், கரகம், காவடி, அடியாருக்கு உருவேறுதல் முதலியனவும் இவ்விரு வழிபாட்டிற்குரிய கோயில்களில் இடம் பெறுகின்றன. மேலும், காளி, பல பெயர்களால் வணங்கப்படுகின்றாள்; அவற்றுள் காளிகா, பரமேஸ்வரி, காளிகாதேவி, பத்திரகாளி, வீரமாகாளியம்மை, ஸ்ரீ பத்திரகாளி முதலியன குறிப்பிடற்பாலன. காளி வீரத்தன்மை மிக்கவள், அவளின் வடிவம் அச்சத்தை ஏற்படுத்தக் கூடியது. எனவே மிகச் சுமுகமான நன்மையே புரியும் அம்சம் கொண்டவளாகப் பத்திரகாளியாக வணங்கப்படுகிறாள், இப்பெயரிலான சில கோயில்களும் உள்ளன. நாகேஸ்வரி வழிபாடும் குறிப்பிடற்பாலது. நாகம்மை நாகபூஷணியம்மை என்னும் பெயர்களில் இவருக்கான கோவில்கள் நயினாதீவு, சண்டிருப்பாய், கோண்டாவில், பரந்தன் முதலிய இடங்களில் உள்ளன, இவை போலவே நாகதம்பிரான் கோயில்கள் அனலைதீவு, புளியம்பொக்கணை, நாகர் கோவில், கோட்டைக்கல்லாறு, புதூர் முதலிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. நாகேஸ்வரி - நாகதம்பிரான் வணக்கமுறை ஒரே வழிபாட்டின் இரு அம்சங்களாகும். இவை ஏற்கனவே குறிப்பிட்டவாறு பாம்பு வணக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையவை. மேலும் மனித நடமாட்டத்திற்கு ஒரு பெரும் தடையாக விளங்கிய தீய பாம்புகளை அடக்கி அவற்றை அணிகலன்களாகவோ விதானமாகவோ மாற்றிய பெருமை அம்பாளைச்சாரும்.

அம்பாளுக்குரிய ராஜராஜேஸ்வரி எனும் பெயராலழைக்கப்படும் கோயில்கள் சில பலாலி, நாயன்மார்கட்டு, புங்குடுதீவு முதலிய இடங்களில் உள்ளன. இவைபோலவே புவனேஸ்வரி, புவனேஸ்வரி அம்பாள் எனும் பெயர்களிலான கோவில்கள் ஏழாலை, சுதுமலை, நாவற்குழி, இடைக்காடு முதலிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவ் இரு பெயர்களும் அம்பாளின் அண்டசராசர இறைமையினை எடுத்துக்காட்டுவன.

இறைவனும் இறைவியும் ஒருங்கே சேர்ந்துள்ள அர்த்தநாரீஸ்வரருக்கான கோவில் அச்சுவேலியில் உள்ளது. வீரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினைக் குறிக்கும் பிறிதொரு வடிவம் துர்க்கதேவியாகும். இவ் வடிவத்துக்கான கோயில்கள் தெல்லிப்பழை, காரைநகர், ஏழாலை முதலிய இடங்களில் உள்ளன. தமிழ் நாட்டில் மிகப்பிரசித்தி பெற்ற அம்பாள் வடிவங்களான காமாஷி, மீனாஷி ஆகியோருக்காக கோயில்கள் அச்சுவேலி, நீர்வேலி, வண்ணார்பண்ணை முதலிய இடங்களில் காணலாம். சிவனையும் சக்தியையும் இணைத்துக் காட்டும் சிவகாமியம்மை (இணுவில்) சிவசக்தியம்மை (அச்சுவேலி) பெயர்களாலழைக்கப்படும். கோயில்களும் கவனித்தற்பாலன, மனோன்மணி அம்பாளுக்குரிய ஆலயங்கள் நந்தாவில் நல்லூர், புங்குடுதீவு. நாரந்தனை முதலிய இடங்களில் உள்ளன. பராசக்தியம்மை கோவில் யாழ்ப்பாணத்தில் உள்ளது. ஸ்ரீ முதலியம்மன் கோவில் (புலோலி) சல்லியம்மை ஆலயம் (சாம்பல் தீவு) வராகியம்மை கோவில் முதலானவையும் குறிப்பிடற்பாலன. நல்லூரில் இலங்கைக்குத் தலைவி எனும் பொருள்படும் வகையில் இலங்கை நாயகியம்மை ஆலயம் இருப்பது குறிப்பிடற்பாலது.

நாச்சிமார் வழிபாடும் ஓரளவு பிரபல்லியமானதே. நாச்சிமார், புதுநாச்சிமார் எனும் பெயர்களிலே கோயில்கள் நவாலி, கிளான், வேலணை முதலிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வழிபாடு வன்னிப்பகுதிகளிலும் நிலவுகின்றன.

மேலும் இலங்கையிலுள்ள சிவன் கோவில்களில் சிவபெருமானுக்கும் அம்பாளுக்கும் தனித்தனிக் கோவில்கள் வெவ்வேறு பெயர்களில் உள்ளன. ஏற்கனவே புராதன ஐந்து ஈஸ்வரங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றைவிட எடுத்துக்காட்டாக வண்ணை வைத்தீஸ்வரன் தையல்நாயகி, புங்குடுதீவு மீனாஷி சோமசுந்தரேஸ்வரர் முதலியோரைக் குறிப்பிடலாம். இலங்கைப் பௌத்தமரபிலும் சக்திவழிபாடு நிலவி வந்துள்ளது. மகாயனத்தொடர்பில் உருவவழிபாடு தேரவாதத்திலும் இடம்பெறலாயிற்று. மகாயானத்தில் அவலோகிதேஸ்வரநாத போன்ற ஆண் தெய்வங்களைப் போன்று தாரா, ஐங்குலி, சுண்டா, வசுதரா போன்ற பெண் தெய்வங்களும் பிரபல்யமான இடத்தைப் பெற்றுள்ளன. கல்லினாலும், உலோகத்தினாலும் அமைக்கப்பட்ட தாரா சிலைகள் கிடைத்துள்ளன. மேலும் நாகராஜ, நாகினி சிலைகளும் பௌத்த சமயக் கட்டிடங்கள் சிலவற்றிலே குறிப்பாக வாசல் கடவைகளில் காணப்படுகின்றன. சக்தி வழிபாடு பற்றி இலங்கையிலே கிடைத்துள்ள சான்றுகள் அனைத்தும் தொகுத்து ஒப்பீட்டு ரீதியிலும் ஆராய்தற்குரியன.

இக்கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்ட சில முக்கியமான உசாத்துணை நூல்கள்


1 Sankara and Shanmata, Madras, 1969.
2 Woodroffe Sir John, Sakti and Sakta, Madras, 1959.
3 Nagaswamy R., Tantric Cult of South India, Delhi, 1982.
4 Bose D. N., Tantras theiv philosophy and Occult Cults, Calcutta.
5 Nandasena Mudiyarse, Mahayana Moruments in Ceylon, Colombo, 1967.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அர்ச்சனை மொழியாக வேண்டும்

## இறைவன் சுந்தரரின் தேவாரத்தைக் கேட்டு மகிழவில்லையா?
## மூன்றும் நாள் திருமுறை மகாநாட்டில்
## குன்றக்குடி அடிகளாரின் சொற்பொழிவு

தமிழ்நாடு மட்டுமல்ல எல்லா நாடுகளும் திருவாசகத்தைப் போற்றுகின்றன. தமிழ் மொழியில் திருவாசகம் இருப்பது தமிழ் நாட்டுக்கு ஒரு தனிப்பெருமை. தமிழனிடமிருந்து தமிழ்ப் பண்பாட்டிலிருந்து பூத்துக்காய்த்துக் கனிந்த கனிஎன்று திருவாசகத்தைப் புகழ்ந்திருக்கின்றார்கள். சைவ சித்தாந்தநெறி, தமிழ் நாட்டுக்கு, தமிழ் மொழிக்கு உரிமையான, சொந்தமான நெறி. மனிதன் கடவுளை வணங்குகின்ற போது தனக்குப் புரியாத ஓர் மொழியில் எப்படி வணங்குவது? அப்படி புரியாத மொழியினால் கடவுளை வணங்குவது எப்படி? ஒருவன் தனது தாய் மொழியில் கடவுளை வணங்குவது மிகவும் ஏற்புடையதும், பயனடையக் கூடியதுமாகும். ஆதலினால்தான் நான் தமிழில் நாம் அர்ச்சனை பண்ணவேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

தமிழ் மொழி அர்ச்சனை மொழியாக வேண்டும் என்பதுதான் எனது குறிக்கோள். இந்தக் குறிக்கோளுக்காகவே நான் என் சீவியகாலம் வரையும் பாடு படுவேன். வேறு எத்துறைகளிலும் நான் ஈடுபடமாட்டேன். என்று திருமுறை விழாவில் மூன்றும் நாள் பிற்பகல் நிகழ்ச்சிகழுக்குத் தலைமைதாங்கி நிகழ்த்திய தலைமையுரையில் குன்றக்குடி அடிகளார் அழுத்தமாகக் கூறினார்.

என்னுடைய கொள்கைகளை எதிர்த்துப் பல கேள்விகள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களைச் சிலர் அச்சுவாகனம் ஏற்றிப் புறத்தே வெளியிட்டிருக்கிறார்கள். எனது கொள்கையை அவர்களுக்குப் புரிந்து கொள்ள முடியாவிட்டால் என்னிடம் நேரே வந்து கேள்விகள் கேட்பதுதான் உண்மையாளர்களுடைய நேர்மையான செயலாகும். இது விடுத்துப் பயந்தவர்கள் போல் மறைந்து நின்று கொண்டு ஏதேதோ சிலர் பிதற்றுகின்றனர். முன்னமும் நான் யாழ்ப்பாணத்தில் வந்த போது இப்படியான தவறான அபிப்பிராயம் யாழ்ப்பாணத்தில் புறப்பே உலவினது. என்னிடம் எவராவது நேராக வந்து மறுமொழி கேட்டால் அவர்களுக்கு அன்புடன் சரியான மறுமொழி சொல்லுவேன். இன்று வந்து என்னிடம் கேள்விகள் கேட்டாலும் நான் காய்ப்பு இன்றி மறுமொழி சொல்லத் தயாராக இருக்கின்றேன். அல்லது என்னை அவர்கள் நேரே இன்னொரு முறை அழைக்க விரும்பினாலும் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன். அல்லது என்னிடம் கேள்விகள் கேட்க மறுமொழி பெறக் "குன்றக்குடிக்கு வருபவர்களுக்குச் செலவுக்குப் பணமும் கொடுக்க நான் தயாராயிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகத்தியர் பதிகம்

முன்னம் தமிழ் நாட்டில் தமிழில் பூசை செய்யும் வழக்கம் இருந்திருக்க வேண்டும். அகத்தியர் தனது தேவாரத்திரட்டில் அர்ச்சனைக்கென்று ஒரு பதிகம் அமைத்து இருக்கிறார். வேதம், பசு. ஆகமம்-பால், திருமுறை-நெய்யென்று அறிஞர்கள் போற்றுவார்கள்.

## சம்பந்தரின் பைந்தமிழ்

காஞ்சிபுராணத்தில் கதாநாயகன் தமிழில் பூசை செய்கிறான். அப்படிச் செய்வது அவன் வடமொழியில் கொண்ட துவேஷத்தினால் அல்ல, கூன்பாண்டியனுக்குச் சுரநோய் கண்டபோது சமணர்கள் மந்திரம் செய்தார்கள். ஆனல் பயன்தரவில்லை. ஆனல் சம்பந்தர் பைந்தமிழ் பாடல்களால் பாடினர், திருப்பதிகங்கள் பாடியவுடன் நோய் கூன்பாண்டியனுக்குக் குறைந்தது. சிவாகமங்கள் சிவனின் நின்று தோன்றியவைதான். திருமுறைகளும் சிவனின் நின்று தோன்றியவைதான். எப்படியென்று கேட்டால் உமாதேவியாரின் ஞானப்பாலைக் குடிக்காமல் இருந்தால் திருஞானசம்பந்தர் இப்படியான பாடல்களைப் பாடியிருக்க முடியாது. ஆகவே இது சிவவாக்கு, இந்தச் சிவவாக்கைப் புறக்கணிப்பது சிவத்துரோகம். நான் என்றது அழிந்து உன் செயலேயன்றி என் செயல் எதுவுமில்லை என்று உணர்ந்து இறைவனுடைய அருளைப்பெற்றுப் பாடிய பாடல்கள் சிவ வாக்குகளே.

## இறைவன் சுந்தரரின் பாடல்களைக் கேட்டார்

திருமுறைகளுக்கு மதிப்புக் கொடுக்காததினுல் தில்லைவாழ் அந்தணர்களிடத்துத் திருநீறு வாங்க மறுத்த சைவச் சீலராகிய ஆறுமுக நாவலரின் வழி வந்த மக்கள் நிறைந்திருக்கும் இந்தப் பேரவையில் திருமுறைகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. சேரமான் பெருமானுர் செய்த பூசைக்குப் போகாமல் இறைவன் சுந்தரரின் பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தார். இன்று இந்தத் திருமுறகளை மகாமண்டபம், அர்த்த மண்டபங்களுக்கு உள்ளே போக விடாது தடுக்கிறார்கள். இதைவிடச் சிவத்துரோகமும் உண்டா?

வடமொழி உயர்ந்தது. வடமொழியில்தான் இறை வணக்கம் செய்ய வேண்டுமென்றால் நாயன்மாரில் மூன்று நாயன்மார் அந்தணர்கள். அவர்கள் ஏன் வடமொழியில் பாடவில்லை? வேதநெறி தழைக்க வந்த சம்பந்தர் ஏன் வடமொழியில் பாடவில்லை?

கோயில்கள் எழுந்தது மக்கள் பக்தியைக் காப்பாற்றவேயாம். ஆரியரை, வடமொழியை, வேதத்தைக் காப்பாற்ற கோயில்கள் எழவில்லை. ஆகவே மக்கள் பக்தியைக் காப்பாற்ற எழுந்த கோயில்கள். தம் கடமையைச் செய்யவேண்டுமானுல், தமிழர்கள் வாழும் நாட்டில் தமிழில் பூசை நடைபெறவேண்டும்.

( தினகரன்-21-04-1955 மூன்ரும் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி பீடமா? புத்த பீடிகையா?

ஈழநாட்டின் சிகரமாய் விளங்கும் எழில்மிகு யாழ்ப்பாணக் குடாநாட்டில் அருள் ஒளி வீசிப் பிரகாசிப்பது நயினாதிவாகும். இத்திவு முற்காலத்தில் மணிபல்லவம், மணிபுரி, மணித்திவு, மணிநாகதிவு, நாகதிவு, நாகேஸ்வரம், நாகேச்சரம், நாகநயினார் திவு, பிராமணத் திவு, தண்ணித் திவு எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டது. சிங்கள மக்கள் நாகதிவயின, நாகதிப என்று அழைக்கின்றனர்.

இத்தலம் அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. இங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் அருளை வேண்டிப் பக்தர்கள் ஈழத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் நாடோறும் வந்த வண்ணமிருக்கின்றார்கள். இப்புண்ணிய தலம் பற்றி மணிமேகலைக் காவியம் விரிவாக எடுத்துரைக்கின்றது. மணிமேகலையின் காவியத்தலைவி மணிமேகலையும், புண்ணிய ராசனும் ஒரு பீடிகையை வலம் வந்து வணங்கித் தத்தம் பழம் பிறப்பை அறிகின்றார்கள். அப்பீடிகை புத்த பீடிகை என மயங்குகின்றனர் கல்வி வல்லார் பலர். பதிப்பாசிரியர்களும், உரையாசிரியர்களும் கூட இத்தவறினை இழைத்துள்ளனர். போற்றேன்றுகின்றது.

"பெரியவன் தோன்றா முன்னர் இப்பீடிகை
கரியவன் இட்ட காரணந்தானும்"

(மணி - காதை 25 வரி 54 - 55)

என்னுமடிகளே என்னை இதுபற்றிச் சிந்திக்க வைத்தன. அதனால் மணிமேகலை, ஆபுத்திரன் பற்றிய காவியப் பகுதிகளை ஆராய்ச்சி நோக்குடன் கற்கத் தொடங்கினேன்.

பாண்டி நாட்டின் தலைநகரமாகிய மதுரை மாநகரில் ஆபுத்திரன் என்னும் அடியாருக்கு எடுக்க எடுக்கக் குறையாது அமுது சுரந்து கொண்டேயிருக்கும் "அமுதசுரபி" என்னும் தெய்வப்பாத்திரத்தை அருளுகின்றாள் சிந்தாதேவியாகிய கலைவாணி, ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு முப்பத்திரண்டு தருமங்களையும் உலகுக்கு அருளியவளும் சகலகலாவல்லி, புவனேஸ்வரி, மனோன்மணி, பார்வதி, கௌரி, இராசராஜேஸ்வரி போன்ற பல நாமங்களால் துதிக்கப்படுபவளுமாகிய அம்பிகையின் அம்சமாகிய தேவியே அதனை ஆபுத்திரனுக்கு அருளினள் என்பதில் ஐயமில்லை.

உலக அறவியல் ஆபுத்திரன் அமுதசுரபி கொண்டு ஆற்றிய அறம் இந்திரனுடைய பாண்டு கம்பளத்தை அசைத்தது. அதனால் தனது பதவி பறிபோய்விடும் என இந்திரன் அஞ்சினான். ஆபுத்திரனையடைந்து வாழ்த்துக்கூறி, 'வேண்டிய வரம் கேள்' என்றான். அம்பிகை அருளிய அமுதசுரபியே போதுமானது. உனது வரம் வேண்டியதில்லை. என ஆபுத்திரன் கூறியதால் இந்திரன் சீற்றமடைந்தான். அவன் பசிப்பிணி நீக்கும் தொண்டு புரிந்த பாண்டிநாடு செழிக்க மழை பெய்வித்தான். நாடு செழித்தது. வறுமையகன்றது. இரப்போர் இலர் ஆயினர். ஆபுத்திரனை யாரும் அணுகவில்லை. அறம் புரிந்தோன் உளம் சோர்ந்தான். சாவக நாடு பஞ்சமுற்றிருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃதறிந்து அதனை
பதறிந்து ஆங்கு செல்லும் வணிகர்களுடன் மரக்கலம் ஏறினன். புயலினல் தத்தளித்த
யும் தடைசெய்ய எண்ணிய இந்திரன் புயலை ஏவினன். அங்கு இறங்கியவர்கள் புயல் ஓய்ந்த இர
மரக்கலம் மணிபல்லவத் தீவையடைந்தது. தீவிலேயே விடப்படுகின்றன்.
வில் மரக்கலமேறியபோது ஆபுத்திரன் தவறுதலாகத் பொய்கையிலிட்டு
மனித சஞ்சாரமற்ற தீவில் பயன்படாத அமுதசுரபியைக் கோமுகிப் ஆபுத்திரனின்
அறவோர் கைப்புக வேண்டி ஆபுத்திரன் உயிர் துறக்கின்றன். ஆளாகின்
மரணத்துக்குக் காரணமாக இருந்த இந்திரன் பிரமஹத்தி தோஷத்திற்கு அஞ்சுகின்
ருன். ஆபுத்திரனுக்கு அமுதசுரபி அளித்த அம்பிகையின் சிற்றத்துக்கும் மணி
ருன். அறுபத்துநான்கு சக்தி பீடங்களுள்ஒன்ருக ஆபுத்திரன் உயிர் நீத்த
பல்லவத்தில் அவ்வம்பிகைக்குச் சக்திப் பீடமமைத்து வழிபாடாற்றித் தன்னைப் பீடித்த
பிரம்மஹத்தி தோஷத்தின் நின்றும் நீங்குகின்றன். அவ்வாபுத்திரனே பின்னர்
சாவக நாட்டில் புண்ணியராசனகத் தோற்றுகின்றன். முதலில் மணிமேகலையும்,
பின்னர் புண்ணியராசனும் மணிபல்லவத்தில் வலம் வந்து வணங்கி மறுபிறப்பு
உணரக் காரணமாயிருந்தது இந்திரன் அமைத்த சக்திபீடமேயன்றிப் புத்த பீடமன்று.

பெரியவன் தோன்றுமுன்னர் என்பது, 'புத்தர் தோன்றுவதற்கு முன்' என்
பதையே காட்டுகின்றது. புத்தருடைய காலம் கி. மு. ஆரும் நூற்ருண்டாகும்.
கரியவன் - இந்திரன் என்பது தேற்றம். ஆதலின் அப்பீடிகையைப் புத்த பீடிகை
எனல் எவ்வாற்ருனும் பொருந்தாததாகும்

*[நயினை திரு. சி. ஆ. கதிரித்தம்பி அவர்கள் ஆக்கிய ''ஆபுத்திரனும் அமுதசுரபியும்'' என்ற நூலின் முகப்பிலுள்ள நூலாசிரியர் உரையிலிருந்து]*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினுதீவு நாகபூஷணி அம்பாள் திருத்தல வரலாறு

(ஆத்மஜோதி ஆசிரியர்)

235·3
NAI
AR.

கல்லோலோல்ல ஸிதாமிர்தாத் பதிலஹரீ மத்யேவிராஜன் மனி
துவீபேகல்ப கவாடிகா பரிவிருதே காதம்ப வாட்யுஜ்ஜ்ய வலே
ரத்னஸ்தம்ப ஸஹஸ்ரநிர்மித ஸபாமத்யே விபாேைத்தமே
சிந்தாரத்ன விநிமிர்தம் ஜனனிதே ஸிம்ஹாஸனம் பாவயே.

இது ஆதிசங்கராச்சாரியாரினல் 'மந்த்ர மாத்ருகா புஷ்பமாலாஸ்தவ' என்ற நூலில் அருளப்பட்ட சுலோகமாகும்.

இதன் பொருள்: தாயே! அலைகளினுல் சோபிக்கின்ற அமிர்த சமுத்திரத்தின் நடுவில் விளங்குகின்ற மணித்தீவிலே கற்பக மரங்களாலான வேலியினுல் சூழப்பட்டதும், கடம்பமர வரிசைகளால் பிரகாசிப்பதும், இரத்தினங்களால் இழைக்கப்பட்டு ஆயிரங்கால்கள் அமைத்து நிருமித்த சபையின் நடுவில் உள்ளதுமான சிறந்த விமானத்திலே (கோயிலிலே சிந்தாமணிகளை அமைத்துச் செய்யப்பட்டதான சிங்காசனத்தை நான் உனக்குத் தியானம் செய்து கொடுக்கிறேன்) மனதினுல் சமர்ப்பிக்கிறேன்.

சக்திபீடங்களாகிய நவபீடங்களில் நயினையும் ஒன்ருகும். மணித்தீவு எனச் சங்கராசாரியார் குறிப்பிட்டதுவும் இதனையேதான். ஈழத்துத் திருத் தலங்களுள் சரித்திரங் கண்ட தலங்கள் பலவுள. அத்தலங்களை இன்றும் சாதிசமய வேறுபாடற்ற முறையில் மக்கள் சென்று வணங்குவதைக் காண்கின்ருேம். அரசியலார் கனவிலுங் காணமுடியாத சமரச மனேபாவத்தை அத்தலங்களில் மக்கள் அனுபவிக்கின்றனர். உதாரணம்:- கதிர்காமம், சிவனெளிபாதம், திருக்கேதீச்சரம், கோணேச்சரம், முன்னேஸ்வரம். செல்லச்சந்நிதி, நயினுதீவிலுள்ள நாகேச்சுரம் என்பன இவற்றுக்கெல்லாம் ஆதிசக்திபீடமாயமைந்தது நாகேஸ்வரி ஆலயமாகும். இதனுடைய தோற்றம் சரித்திர காலத்திற்கு முற்பட்டதெனக் கூறுவதற்கும் தகுந்த ஆதாரங்களுண்டு.

இலங்கையின் வடபாகத்தில் ஏழு தீவுகள் இருக்கின்றன, அவற்றுள் நடுநாயகமாக விளங்குவது நயினுதீவாகும். அது இயற்கை அழகினை உடையது. புராதன பல அதிசயங்களை உடையது. யாழ்ப்பாணம் பட்டினத்திற்குத் தென்மேற்கே சுமார் இருபது மைல் தூரத்தில் உள்ளது. இதற்கு மணித்தீவு, மணிபல்லவத்தீவு, மணிநாகதீவு, நாகதீவு, நாகநயி

249205
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

ஞர்தீவு, நயினார்தீவு, சம்புத்தீவு ஆகிய பலபெயர்கள் உண்டு. தட்சிண கைலாயமெனப் பெயர் பெற்றுச் சிறப்புற விளங்கிய லெமூரியாக (நாக நாடு) கண்டத்தில் கடல்வாய்ப்பட்டது போக எஞ்சியுள்ள பாகத்தில் ஓர் சிறந்த பகுதி என்பது ஆராய்ச்சியாளருடைய துணிபாகும். நயினு தீவுச் சுவாமிகள் போன்ற பல மகான்களும் பல புலவர்களும் வாழ்ந்து வந்ததே இதற்கு அத்தாட்சியாகும்.

பூர்வத்தில் இலங்கையில் இயக்கர், நாகர் ஆகிய இரு சாதியினர் வசித்து வந்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. நாகர் வடக்கேயும், இயக்கர் தெற்கேயும் வசித்து வந்தனர். நாகர் சர்ப்ப வழிபாடுடையராய் இருந்தனர். இவர்கள் கல்வியிலும் சீர்திருத்தத்திலும் சிறந்தவர்கள். நாக இராசனுகிய மகோதரனுக்கும் அவன் மருமகனுகிய குலோதரனுக்கு மிடையில் ஓர் மணியிழைத்த ஆசனத்தை முன்னிட்டு பெரும் போர் நடந்தது. அப்பொழுது இந்தியாவிலிருந்து கௌதம புத்தர் இங்கு வந்து இவர்கட்கிடையே சமாதானத்தை நிலைநாட்டி பஞ்சசீலத்தை இவர்கட்கு உபதேசம் செய்தார். உபதேசத்தைக் கேட்டதும் இருவரும் மனந்திருந்தி மணியாசனத்தைப் புத்தருக்குக் கொடுக்க அவர் அதை இங்கு ஸ்தாபித்துச் சென்றாரென்று மகாவம்சம் கூறுகின்றது.

மணித்தீவில் புவனேஸ்வரி பீடம் எனக் காளிதாசனுல் கூறப்பட்டது இத்தலமே என்று கூறுவர். சீத்தலைச் சாத்தனார் தமது மணிமேகலை என்னும் நூலில் இதை 'மணிபல்லவம்' என்றும், பட்டினத்தடிகள் இதை 'மணித்தீவு' என்றும் கூறியதாகத் தெரிகின்றது. இத்தீவிலே சர்ப்பங்கள் மற்றைய அயல் தீவுகளிலும் பார்க்க அதிகமாக வாசஞ் செய்கின்றன. இவைகட்கு ஜென்ம விரோதிகளான கீரிப்பிள்ளை, செண்பகம் இங்கு இயற்கையாயில்லை. அவற்றை இங்கு கொண்டுவந்து வளர்ப்பினும் அவைகள் இறந்து விடுகின்றன.

நாகபூஷணி அம்பாளின் திருக்கோவிலின் வடபாலுள்ள பாம்பன் கடலில் இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களின் முன், ஓர் நாகம் தனது வாயிற் பூவைக் கவ்விக்கொண்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நீந்தி வருகையில் ஓர் கருடன் குறித்த பாம்பைக் கண்டு தொடர்ந்தது. இதனுல் குறித்த சர்ப்பம் கடலில் வளர்ந்துள்ள ஓர் கல்லில் சுற்றி மறைந்து கொண்டது. கருடனும் எதிரே உள்ளதோர் கல்லில் இருந்து கொண்டது. நாகமும் கருடனும் தர்க்கம் செய்து கொண்டிருக்கையில் அவ்வழியாக மரக்கலத்தில் வந்த வணிகன் இவைகளைக் கண்டதாகவும் நாகபாஷை அறிந்தபடியாலவன் நாகத்திடமிருந்து வரலாற்றை அறிந்து கருடனை இந்த நாகத்தைக் கொல்லாது விடும்படி கேட்டதாகவும், கரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் இத்தீவிலிருக்கும் தேவி ஆலயத்திற்கு அவனது பொருள் முழுவதை யும் செலவு செய்துவிடும்படி சொன்னதாகவும், அவனும் அப்படியே செய்து நாகத்தைத் தப்ப வைத்ததாகவும் சொல்லுகின்றனர். அக்கற் கள் இரண்டும் இன்றும் பாம்பு சுற்றிய கல்லு, கருடன் கல்லு என்ற பெயர்களால் அழைக்கப்பெறுகின்றன.

நயினுபட்டர் என்ற பிராமணரால் இங்குள்ள அம்மை பூஜிக்கப் பெற்றமையால் நயினுதீவு என்று இது அழைக்கப்படுகிறது. இப்பொழுது அனலைதீவு - புளியந்தீவில் இருக்கும் நாகதம்பிரான் விக்கிரகம் டச்சுக் காரர் கோவிலைத் தாக்குமுன் நயினுதீவில் இருந்ததென்பது முதியோர் களால் ஒப்ப முடிந்ததொன்ருகும். நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் பூர்வ மூல மூர்த்தியாய் அமைந்திருப்பது ஐந்துதலை நாகமாகும். இம் மூர்த்தி யைத் தரிசித்த தென்னிந்திய சிற்பசாஸ்திர ஆராய்ச்சியாளர் எம். நரசிம் மன் அவர்கள் சரித்திரத்திலே பேசப்பட்ட பழைய சர்ப்ப வழிபாட்டுக்கு ஆதாரமாக இலங்கை இந்தியாவிலே இன்றும் பிரத்தியட்சமாகக் காட்சி யளிப்பது இம்மூர்த்தியே என்றும் சர்ப்ப வழிபாட்டில் நம்பிக்கை குறைந்த பிற்காலத்திலே நாகபூஷணி அம்மையை அயலே பிரதிட்டை செய்திருக் கிருர்களென்றும் முடிபுக்கு வந்திருக்கிருர்கள். மகாகுண்டலினி சந்தியே சர்ப்ப உருவமாகும்.

நாகபூஷணி அம்மன் ஆலயம் சமுத்திரத்தை நோக்கியபடி தம்மை அடையும் மெய்யடியார்களைத் தாமதமின்றி வரவேற்பதுபோன்று அழகுற விளங்குகிறது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கு வாணிப நிமித்தம் வந்த காவிரிப்பூம் பட்டினத்து வணிககுலப் பெரு மக்கள் இதைச் சீர்படுத்தி நிறுவுவதில் பங்குபற்றினர். செப்புத்தேர், பவளத்தேர்களை ஏற்படுத்தி வைத்தார்கள் என்றும், நயினுப்பட்டரை பூஜகராக ஏற்படுத்தினுர் என்றும் கர்ணபரம்பரையாக நம்பப்பட்டு வரு கின்றது. இதன் மூலமூர்த்தியான சர்ப்ப வழிபாட்டுக் காலம் பதினுயிரம் ஆண்டொன்று இந்திய சிற்பசாஸ்திர அறிஞர் நரசிம்மன் கூறியுள்ளார். புராதனமான இந்த ஆலயம் இடையிடையே பலராலும் சீர்திருத்தப் பட்டு நிர்மாணிக்கப்பட்டு வந்தது. டச்சுக்காரர் காலத்தில் அவர்கள் இப்புராதன ஆலயத்தையும் இங்கிருந்த சிவன் கோவிலையும் இடித்து அழித்தார்கள். ஆனுல் இந்த அம்மையின் திருவுருவத்தை அந்தநேரத்தில் ஆலம் பொந்துள் ஒளித்து வைத்திருந்த அடியார்கள் திரும்பவும் கோயி லைக் கட்டி ஸ்தாபித்தனர்.

அக்கோவிலிலே அப்பொழுதிருந்த செப்புத்தேர் பவளத்தேர்கள் அந்நியர் கைப்படாமல் வடமேற்குக் கடலில் தள்ளிவிடப்பட்டன

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் மேலும் திருத்தப்பட்டு தற்போதைய நிலையில் விளங்குகிறது. இத்தலம் அர்ச்சுனன், பட்டினத்தடிகள், மணிமேகலை, ஆபுத்திரன், புத்தர் முதலிய பெரியோர்களால் தரிசிக்கப்பட்டது.

பழைய காலத்தில் எல்லாம் வல்ல இறைவன் ஆன்மாக்களை உய்வித்தற் பொருட்டு தமது மாபெருங் கருணையைப் பதித்த இடங்கள் அறுபத்துநான்காகும். அருட்சக்தி பீடங்கள் எனப்படும் இவை காசி விசாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி என்று வருவனவாகும். அவற்றுள் இரண்டு மணித்தீவில் அமைந்துள்ளன என்றும் அவை "புவனேஸ்வரிபீடம்" "திரிபுரபைரவிபீடம்" எனப் பெயர் பெற்றவை என்றும் தேவி பராக்கிரமத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

அனலை தீவைச்சேர்ந்த புளியந்திவு எனுமிடத்திலுள்ள இப் பெருமானைப் 'புலிஏந்தி நாகதம்பிரான்' எனவும் அழைப்பர். (நாகபூஷணி அம்மை தம்மை வழிபடும் மெய்யடியார்களுக்கு சகல பாக்கியங்களையும் அளித்துவருகிறார். ஆனால் பிரதானமாக புத்திரபாக்கியமின்றி தீராத மனக்கவலையுற்றோரின் பிணியைத் தீர்க்கும் அருமருந்தாக அம்மை அருள் பாலிக்கின்றாள். அதனால் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வருடத்தில் பல நாட்களிலும் அன்பர்கள் இங்கு வந்து சாந்தி பெற்றுச் செல்கிறார்கள்.)

## நயினை மான்மியம்

பெற்றதா லன்னை பெறுமுயி ரனைத்தும் பேணலா லன்னைபெற் றிடுவோர்
உற்றதா லன்னை விரும்பிய வனைத்தும் முதவலா லன்னையெக் கலையுஞ்
சொற்றதா லன்னை யுலகொடு வானுந் தொழுதலா லன்னையென் றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலால் அன்னை பராபரை நாகபூ டணியால்.

— நயினை நாகமணிப்புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகர் வழிபாடு

— எஸ். பத்மநாபன் —

அன்பின் அடிப்படையிலும், அச்சத்தின் அடிப்படையிலும் எழுந்ததுதான் இயற்கை வழிபாடு என்பதை மனிதனின் வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. இயற்கை வழிபாட்டின் ஒரு பிரிவுதான் விலங்கு வழிபாடு. மனிதன் பசுவை அன்பால் வணங்குகிறன். பாம்பை அச்சத்தால் வணங்குகிறன். பாம்பு மனிதனுக்கு அச்சம் விளைவித்தாலும் பாம்பைக் கொல்வது பாவம் என்றும், பாம்பு குடியிருப்பதாகக் கருதப்படும் பாம்புப் புற்றை அகற்றுவதுகூடப் பாவச்செயல் என்றும் மக்கள் கருதுகின்றனர். உலகில் எத்தனையோ உயிர்கள் வணங்கப்பெற்றுலும் அவற்றுள் பாம்புதான் தலைமையிடம் பெறுகிறது. இந்த உலகத்தை கடலில் மூழ்காமல் தூக்கிச் சுமந்து கொண்டிருப்பது பாம்புகளே என்பது ஆப்பிரிக்க மக்களின் நம்பிக்கை. ஆயிரம் தலைகொண்ட ஆதிசேடன் என்ற பாம்புதான் இந்த உலகத்தைத் தாங்கி வருவதாகப் பாரதநாட்டு மக்கள் நம்புகின்றனர்.

உலக நாடுகளின் வரலாற்றை உற்று நோக்கினல் நாகர் வழிபாடு ஒரு காலத்தில் உலகமெலாம் பரவி இருந்தது என்றும், இன்றும் சில நாடுகளில் அவ்வழிபாடு உன்னதமான இடத்தைப் பெற்றுள்ளது என்றும் தெரியவருகிறது. உலக நாகரிகம் உச்ச நிலையில் இருந்த எகிப்து, பாபிலோனியா, மெசப்பட்டோமியா, கிரேக்கம், ரோம், சிந்துவெளி ஆகிய இடங்களில் நாகர் வழிபாடு சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது என்று அங்கே நடத்திய தொல்லியல் ஆய்வுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

எகிப்து நாட்டில் கிடைத்த நாகரிகச் சின்னங்களுள் நாகர் வழிபாடுபற்றிய குறிப்புகள் பல கிடைத்துள்ளன. படமெடுத்தாடும் நாக பாம்புதான் எகிப்து நாட்டின் அரசுச் சின்னமாக விளங்கியது. அந்நாட்டு மன்னர்கள் தமது நெற்றி மேட்டில் படமெடுத்தாடும் பாம்பின் உருவை மணிமுடியாக அணிந்திருந்தனர். எகிப்துக் கடவுளான ஒசிரிசு தலையிலும், அவரது மனைவியான ஈசிசு தலையிலும் பாம்பு படமெடுத்த நிலையில் காட்சி தருகிறது.

பாபிலோனியாவில் கோவோ என்ற தெய்வம் பாம்பின் உருவிலே வணங்கப்பட்டது. பாபிலோனியர் மண்ணின் வளமையைப் பாம்பாக உருவகப்படுத்தி வழிபட்டனர். அங்குள்ள மந்திரவாதிகள் பறக்கும் பாம்புருவத்தைப் பயன்படுத்தினர். மெசபட்டோமியாவில் நாகர் வழிபாடு சிறப்புடன் திகழ்ந்தது என்ற உண்மையை அங்கு நடத்திய ஆய்வுகள் நமக்குக் கூறுகின்றன, கல்லிலும் சுட்ட செங்கல்களிலும், பானைகளிலும் பாம்புருவங்கள் தீட்டப்பட்டிருந்தன.

கிரேக்க நாட்டு மக்கள் பாம்பைக் காவல் தெய்வமாகக் கருதினர். உயிருள்ள பாம்புகளை அவர்கள் வழிபட்டு வந்தனர். போரில் மரணமெய்திய வீரர்கள் பாம்புகளாகத் தோன்றுவர் என்பது அவர்கள் நம்பிக்கை. அவர்கள் வணங்கிய சில தெய்வங்கள் பாம்பின் உருவிலே காணப்பட்டன. உயிருள்ள பாம்புகளை அவர்கள் கோயில்களில் வைத்துப் பாதுகாத்து அவற்றுக்கு ரொட்டியும் தேனும் வழங்கி நேர்த்திக்கடன் முடிப்பர். கிரேக்க நாட்டின் தலைநகரான ஏதென்ஸை ஒரு நாகம் பாதுகாத்து வந்ததாகக் கி. மு. ஐந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஏரோட்டஸ் என்ற பயண ஆசிரியர் குறிப்பிடுகிறுர். ஏதென்ஸ் நகரின் தேசியச் சின்னம் பாம்பாகும். கிரேக்க நாட்டை அடுத்துள்ள கிரேட் என்ற தீவில் கி. மு. 20-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த மக்கள் பாம்பைப் பெண்தெய்வமாக வழிபட்டனர். மரத்தை வெட்டும்போது பாம்பு ஏதேனும் இறந்துவிடுமாளுல் அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தை விட்டுகடவுளும் அகன்றுவிடுவார் என்ற நம்பிக்கை ரோம் நாட்டு மக்களிடம் இருந்தது.

சிந்துவெளியில் நாகர் வழிபாடு இருந்து வந்தது என அறிஞர் மார்ஷல் குறிப்பிடு கிருர். குறுக்கே கால்மடித்த நிலையில் ஓர் உருவம் அதனைச்சுற்றிப் பக்தர்கள், அதன் வலப்பக்கம் ஒரு நாக உருவம். இடப் பக்கம் பட எழுத்து. இம்முத்திரை நாகர் வழி பாட்டினைக் காட்டுவதாக மார்ஷல் எழுதுகின்ருர்.

அமெரிக்க நாட்டு மாயா நாகரிகத்தின் கலைச்சின்னங்களில் பாம்புருவங்கள் இடம் பெற்றிருந்தன, இறக்கையோடு கூடிய பாம் பின் உருவை அவர்கள் வழிபட்டனர். பாம் பிற்குப் பல கோயில்கள் அங்கே இருந்தன. மெக்சிகோவில் கிடைத்த பானைகளில் பாம் புருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன, இவ் வாறு பண்டைக் காலத்தில் நாகரிகம் சிறப் புற்று விளங்கிய இடங்களில் எல்லாம் நாக வழிபாடு சிறந்ததோர் இடத்தைப் பெற்றிருந் தது என நாம் அறியமுடிகிறது.

ஆப்பிரிக்க நாடுகளில் உயிருள்ள மலைப் பாம்பை இன்றும் வணங்குகின்றனர், மலைப் பாம்பு தெய்வீகத்தன்மை கொண்டது என் றும் அறிவுக் கடவுள் என்றும் அவர்கள் கருதுகின்றனர். ஆதியில் ஆணும் பெண்ணும் குருடாகவே பிறந்தனர் என்றும், அவர் களுக்கு மலைப்பாம்பே கண்களைக் கொடுத்தது என்றும் அவர்கள் நம்புகின்றனர். லும்வா என்ற ஆப்பிரிக்க இனத்தவர் பாம்பைத் தம் சமயச் சின்னமாகக் கொண்டுள்ளனர். வாகர்வே என்ற இனத்தவர் பாம்பைப் புனிதமாகக் கருதுவர். மேலும் பாம்பு கடித்து ஒருவன் இறந்தால் அது அவ னுக்கு நற்பேறு என்று நம்புகின்றனர். ஆப் பிரிக்க நாட்டின் சில பகுதிகளில் பெண்டிர் பலர் பாம்பின் அடிமைகளாகத் தங்களை அறிவித்துக் கொண்டு பாம்புக் கோயிலில் கடைசிவரை தங்கள் வாழ் நாட்களைக் கழிக் கும் வழக்கம் இன்றும் உள்ளது

இடிக்கு அரசன் பாம்பு என்பது ஐப்பா னிய மக்களின் நம்பிக்கை. அங்கு வணங்கப் படும் சுசானே என்ற தெய்வம் பாம்போடு தொடர்பு கொண்டது. நாகசாகியில் காணப் படும் வெள்ளைக் கடற்பாம்பு கடவுளின் அவ தாரமாகக் கருதப்பட்டது: கம்போடியாவில் பாம்புக்கு ஒரு கோவில் உள்ளது. அக்கோவி லின் கூரை முழுவதும் ஏழுதலைப் பாம்பின் உருவங்கள் நூற்றுக் கணக்கில் வரையப்பட் டுள்ளன. கொரியாவில் நாககன்னிகை எழு வரை வணங்கும் வழக்கம் இன்றும் உள் ளது. பினங்கில் புத்தர் கோயிலை அடுத்துப் பாம்பிற்கு ஒரு கோயில் உள்ளது. அங்கு உயிருள்ள பாம்புகளை இன்றும் வணங்கு கின்றனர்.

பாரத நாட்டின் நாக வழிபாடு எப் போது தோன்றியது என்று கூற முடியாத அளவுக்குப்பழமையானது. இந்திய சரித்திரத் திலும் புராணங்களிலும் வருகின்ற நாகர்கள் தாம் நாகத்தை முதல் முதலில் வழிபட்ட னர். ஆரியர்கள் வருகைக்கு முன்னுல் நாகர்கள் பாரத நாட்டின் பல பகுதிகளை ஆண்டு வந்தனர் என்பது ஆராய்ச்சியாளர்கள் முடிவு. ரிக் வேதத்கில் 'அகி' என்ற பெய ருடன் பாம்புருவில் இருந்த ஓர் அரக்கனை இந்திரன் கொன்ற செய்தி வருகின்றது. பார்த்திபன் கண்ணனின் உதவியால் காண் டவ வனத்தில் இருந்த நாகர்களை எரித்து அழித்தான். கிருஷ்ண லீலைகளில் காளிங்க வதம் ஒன்று.

அலெக்சாந்தர் பாரதநாட்டின் மீது படையெடுத்தபோது நாகர் வழிபாட்டு மக்களைச் சந்தித்தார் என்று வரலாறு கூறு கின்றது. அம்மக்கள் தக்ஷர்கள் என்று அழைக்கப்பட்டனர். கற்களில் பொறிக்கப் பட்ட பாம்புருவங்களை எழுநூறு இடங்களில் நாகர்கள் வழிபட்டனர் என்று அபுல் பக்சர் எழுதிச் சென்ருர். அசோகர் காலத்தில் நாகமன்னர்கள் பலர் இருந்தனர் என்ற உண்மையை அவர் காலத்தில் கிடைத்த நாக உருவங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காபூல் நகரை ஆண்ட மன்னர்கள் நாகர் வழிவந்தவர்கள் தாம் கி. பி. 639 ஆம் ஆண்டு பாரத நாடு வந்த சீனப் பயண ஆசிரியர் யுவான் சுவாங் காபூலில் வாழ்ந்த நாகவழிபாட்டு மன்னர்களைக் குறிப்பிடுகிறார். ஒரு காலத்தில் காஷ்மீரை ஆண்ட மன்னர் களும் நாகர்வழி வந்தவர்கள் தாம்.

அசாம் மாநிலத்தில் காசி என்ற பழங் குடி மக்கள் நாகத்தை வழிபடுகின்றனர். சோட்டா நாகபுரியை ஆண்ட மன்னர்கள் தங் களை நாகர்களின் வழித்தோன்றல்கள் என்று கூறுவர். வங்காளத்தில் காயத்தர் என்ற இனத்தவரில் ஒரு பகுதியினர் தங்க ளைப் பாம்பரசனாகிய வாசுகியின் வாரிசாகக் கருதுகின்றனர். ஒரிசா மாநிலத்தை ஆண்ட மன்னர்தம் அரச முத்திரைகளில் பாம்புரு வம் இடம்பெற்றிருந்தன. முத்திரையின் மையத்தில் படமெடுத்த பாம்பும், அதன் கீழே மனித முகமும் பொறிக்கப்பட்டிருந்தன.

பாரதநாட்டின் தென் பகுதியில் நாகர்கள் வலிமை மிக்க ஓர் இனமாக வாழ்ந்து வந்தனர் என்று தென்னக வர லாறு கூறுகின்றது. தமிழகத்தில் மறவர் அகமுடையார், கள்ளர் போன்ற இனங்கள் நாகர்களின் வாரிசுதாம் என்று திருச்சி மாவட்டக் குறிப்பேடு தெரிவிக்கிறது. நாகர் களைப்பற்றிய குறிப்புகளைச் சங்க இலக்கியங் களிலே நாம் காணலாம். பெரும்பாணாற்றுப் படை, சோழ மன்னன் தொண்டைமான் இளந்திரையன் பிறப்பை நாக இளவரிசி யுடன் தொடர்பு படுத்தும் சோழநாட்டு மன் னன் நெடுங்கிள்ளி, நாககன்னி ஒருத்தியால் ஈர்க்கப்பட்ட செய்தியை மணிமேகலை கூறுகின் றது. நாகர்களின் பட்டினமாக நாகப்பட்டின மும், சோழர்களின் தலைநகராகக் காவிரிப்பூம் பட்டினமும் அடுத்துள்ளது இங்கே சிந்திக்கத் தக்கது.

இயக்கர், நாகர் என்ற இரண்டு இனங்கள் தாம் ஈழத்தின் முதுகுடி மக்கள் என்று ஈழ நாட்டின் வரலாறு கூறுகிறது. யாழ்ப்பாணத் திற்கு அருகே 'நயினார்தீவு' என்ற ஒரு தீவு உள்ளது. இத்தீவினைச் சிங்கள இலக்கியங்கள் 'நாகத்வீபம்' எனக் குறிப்பிடுகின்றது. இன் றும் சிங்கள மொழி பேசும் மக்கள் இத் தீவை அதே பெயரில்தான் அழைக்கின்றனர். இத்தீவை மணிபல்லவம் என்று மணிமேகலை கூறுகின்றது. இரு நாகமன்னர்கள் ஓர் அரியணை காரணமாகப் போரிட்டபோது அவர்களை உடன் பாடு செய்து வைத்தவர் புத்தபெருமான் என்று மணிமேகலை தெரிவிக் கின்றது. இச்செய்தியினை மகாவம்சத்திலும் காணலாம். ஈழத்தைப் பொறுத்தவரை நாகர்கள் புத்தசமயத்தைச் சார்ந்திருந்தனர் என்று மகாவம்சம் கூறுகிறது. நாகர்களின் வழிபாடு புத்த சமயத்திலே முக்கியதோர் இடத்தைப் பெற்றுக்கொண்டது. அத்துடன் படமெடுத்த பாம்பினடியில் கிடக்கும் புத்தர் பெருமானின் பல திருவுருவச் சிலைகள் ஈழத்திலே இன்றும் காணப்படுகின்றன.

பண்டைத் தமிழகத்தில் வாணிகக் கப் பல்கள் மணிபல்லவத்திலிருந்து நாகர்மலைத் தீவுகள் வழியாகக் கிழக்கிந்திய தீவுகளுக்குச் சென்றன என்று மணிமேகலை தெரிவிக்கின் றது. இந்த நாகர்மலைத் தீவுகள் பின்னர் மாநக்கவாரம் என்ற பெயரைப் பெற்றன. சோழ மன்னர்கள் அத்தீவுகளை அடக்கியாண் டனர் என்று அவர்களுடைய செப்பேட்டுச் சாசனத்திலிருந்து நாம் அறியலாம். இன்று அத்தீவுகள் நிக்கோபார் தீவுகள் என்று அழைக்கப்படுகின்றன.

கோள மாநிலத்தில் ஒரு காலத்தில் நாகர்களே வாழ்ந்து வந்தார்கள் என்றும் அவர்கள்தாம் இன்று நாயர்கள் என அழைக் கப்படுகின்றனர் என்றும் வரலாற்று ஆசிரியர் பத்மநாப மேனோன் எழுதியுள்ளார். சோழர் களைச் சூரிய குலம் என்றும் பாண்டியர்களைச் சந்திரகுலம் என்றும், சேரர்களை நாகர் குலம் என்றும் கருதுவர். சேர என்ற சொல்லுக் குப் பாம்பு என்பது பொருள். அந்த அடிப் படையிலேதான் சேரமண்டலத்தை நாக மண் டலம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். டாக்டர் சீனிவாச ஐயங்கார் எழுதிய தமிழர் வரலாற்றிலிருந்து நம்பூதிரிகளின் வருகை யின்போது, கேரள மாநிலத்தில் நாகர்கள் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர் என்றும், பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெடுத்த பாம்புபோல் முன் குடுமி கட்டி நாகத்தை முக்கிய தெய்வமாக வழிபட்டு வந்தனர் என்றும் நாம் அறிய முடிகிறது. வடக்கிலிருந்து கேரள மாநிலத்திற்கு வந்த பரசுராமன் நாகர்களைப் போரினால் வெல்ல முடியாது எனக்கருதி அவர்களின் பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொண்டு தமது ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொண்டார்.

இன்றைய பாரத நாட்டில் நாகர் வழிபாடு காஷ்மீர் முதல் கன்னியா குமரிவரை பரவியுள்ளது. தென்னகத்தில் பாம்புக் கோயில் எழுப்பியும், அரசு வேம்பு மரங்களின் அடியிலும் கோயில் ஸ்தல விருட்சங்களின் அடியிலும் பாம்புப் புற்றிலும் தோட்டங்களிலும நாகவழிபாடு நடத்துகின்றனர். ஆனால் வட நாட்டில் நாகத்தின் பெயரால் நாகபஞ்சமி என்ற விழா மட்டும் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

ஆயுத பூசை நடைபெறுவதுபோல உத்தரப் பிரதேசத்தில் நாகபஞ்சமி விழாவைக் கொண்டாடுகின்றனர். பஞ்சாப் மாநிலத்தில் வீட்டுச் சுவரில் பாம்பின் படத்தைத் தீட்டி வழிபடுவர். பிகார் மாநிலத்துப் பெண்கள் தங்களை நாகினிகளாக, அதாவது நாகராஜனின் மனைவிகளாகக் கருதி மூன்று நாட்கள் உப்பை உண்ணுமல், கூரையின் கீழ்த தூங்காமல் விரதம் மேற்கொள்கின்றனர். வங்காள நாட்டில் மானஸா தேவியை நாகத்தின் அரசியாகக் கருதி வழிபடுகின்றனர். கர்நாடக மாநிலத்தில் மங்களூர் அருகே உள்ள பானவாகியில் கிடைத்த கல்வெட்டிலிருந்து கி. பி. முதல் நூற்றாண்டில் பாம்பின் உருவை பிரதிஷ்டை செய்து வழிபட்டனர் எனத் தெரியவருகிறது. ஆந்திர மாநிலத்தில் லேபாக்ஷி ஆலயத்தில் காணப்படும் பாம்பின் திருவுருவச்சிலை மிகவும் உயரமானது.

வேறு எந்தப் பகுதிகளிலும் இல்லாதவாறு கேரள மாநிலத்திலும், தமிழகத்திலும் இன்று நாக வழிபாடு மிகவும சிறப்புற்று விளங்குகின்றது. நாகப்பிரதிஷ்டையும், சர்ப்பக்காவும் கேரளத்துக்கே உரியன. சர்ப்பக்காவுகள் பரசுராமனால் தோற்றுவிக்கப்பட்டன என்றும். ஒரு நூற்றாண்டிற்கு முன்னர்க் கேரள மாநிலத்தில் 15000 சர்ப்பக் காவுகள் இருந்தன என்று கூறுவர். இன்று மன்னார்சாலை, வெட்டிக்காவு, பாம்பன் மேக்காடு மூன்றும் பிரசித்தி பெற்ற சர்ப்பக் காவுகளாகத் திகழ்கின்றன.

மன்னார் சாலையில் ஒரு பெண் தனது வாழ் நாள் முழுவதும் கன்னியாகவே இருந்து நாகர் பூஜை செய்வது இன்றும் வழக்கத்தில் உள்ளது. பார்த்திபனும் கண்ணனும் காண்டவ வனத்தை எரியூட்டவே, அங்கிருந்து தம் முன்னோர்கள் தப்பி வந்து கேரளத்தில் தங்கினர் என்று இங்கு வாழும் மக்கள், தலைமுறையாகத் தங்கள் வரலாற்றைக் கூறி வருகின்றனர். புரட்டாதி, ஐப்பசி ஆயில்ய நாளன்று இங்குத் திருவிழா நடைபெறுகிறது. அப்போது புள்ளுவன் என்ற ஓர் இனத்தவர் அரிசிப் பொடியிலும் மஞ்சள் பொடியிலும் தரையிலே நாக உருவங்களை வரைந்து ஒருவித வீணையை மீட்டிச் சர்ப்பப் பாட்டுகள் பாடுகின்றனர். பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் இங்கு வந்து 'உருளி கவிழ்த்தல்' என்ற வழிபாடு நடத்திப் பலனடைகின்றனர்.

வட கேரளத்தில் நாக பகவதியை வணங்குகின்றனர். அங்கு வாழும் வேலன்மார் நாப பகவதிக்குக் கோலங்கட்டி ஆண்டு தோறும் நாக பகவதி ஆட்டம் ஆடுவர். இந்த ஆட்டம் இன்றும் ஆழியூரில் நடைபெறுகிறது. ஆட்டம் ஆடுவோர் பல வண்ணங்களை முகத்திலும் ஆடையிலும் பூசி அட்டையால் செய்த பாம்பின் உருவங்களை அணிந்திருப்பர்.

தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் நாக வழிபாடு உள்ளது. திருவேற்காட்டில் எழுந்தருளியுள்ள கருமாரியம்மன் கருநாகமாகத் தோன்றினள் என்பது தலபுராணச் செய்தி. இன்றும் கருமாரியம்மன் ஐந்துதலை நாகத்தின் குடைநிழலில் அமர்ந்துதான் நமக்குக் காட்சிதருகிறாள் வீதி உலா வரும் போது கருமாரியம்மன் நாக வாகனத்திலே வருவது வழக்கம்

சேலம் மாவட்டத்திலுள்ள திருச்செந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டு மலைச்சரிவில் 60 அடி நீளத்தில் பாம்பு ஒன்று புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அந்த நாகர் உருவத்தை வழிபடும் மக்கள் தங்கள் கால்நடைச் செல்வங்களைப் பாம்பு தீண்டப்படக்கூடாது என்றும் தமக்குப் பிள்ளைச் செல்வம் வேண்டும் என்று பொங்கலிட்டு வழிபடுகின்றனர். சிலர் பாம்பின் உருவைக் கல்லிலே செதுக்கி நேர்த்திக் கடன் முடிப்பர். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழு செட்டுச் சமுதாயத்தினர் பாம்பைத் தங்கள் குலதெய்வமாகக் கருதி, ஒடுப்பறை என்ற இடத்தில் நாக அம்மனுக்குக் கோயில் கட்டி வணங்குகின்றனர்.

கன்யாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர் கோவில் என்ற நாகராஜர் ஆலயம் உலகப் பிரசித்தி பெற்றது, பாம்புக்கென்று எழுப்பப்பட்டுள்ள பேராலயம் இது ஒன்றுதான். நாகர் கோவில் நகரத்தை நாகராஜர் காவல் புரிகின்றார் என்பது ஐதிகம். ஆலயத்தைச் சுற்றி நாகபாம்புகள் நிறைந்திருந்தாலும் இவ்வட்டாரத்தில் பாம்பு கடித்து இறந்ததாகச் சான்றுகள் எதுவும் இதுவரை கிடையா. எண்ணற்ற நாகர் சிலைகள் இந்த ஆலயத்திலே நாம் காணலாம். அவற்றுள் ஏழடி உயரத்தில் படமெடுத்த கோலத்தில் காட்சி தரும் இரண்டு சிலைகள் அழகு மிக்கவை. நாகராஜரை வணங்கினால் நாக தோஷங்கள் எல்லாம் அகன்றுவிடும் என்பது மக்கள் நம்பிக்கை.

ஞாயிற்றுக் கிழமை பாம்புக்குப் பால் வார்ப்பது மிகவும் புனிதமாகக் கருதப்படுகிறது. ஞாயிறு என்றால் சூரியன். சூரியனும் பாம்பும் நெருங்கிய தொடர்புடையவை. இலத்தீன், கிரேக்கம், ஜெர்மன், ஆங்கிலம் போன்ற மொழிகள் ஞாயிற்றுக் கிழமையைச் சூரியனுடனும் தொடர்வுபடுத்திக் காட்டுகின்றன. சூரியனைப் பாம்பு காவல் புரிவதாக எகிப்து நாட்டு மக்கள் நம்பிவந்தனர். சூரியனது உருவமும், பாம்பின் உருவமும் அடுத்தடுத்து எகிப்து நாட்டுக் கல்லறைகளில் பொறிக்கப்பட்டுள்ளன. பண்டைய எகிப்திய நூல்களும் சூரியனையும் பாம்பையும் இணைத்தே கூறுகின்றன. மேற்குக் கரையோரத்தில் வாழும் தண்டப்புலையர் என்னும் பழங்குடி மக்கள் சூரியனையும், பாம்பையும் வழிபட்டு ஆசி வேண்டுகின்றனர். காஞ்சியில் சூரியனும் பாம்பும் சேர்ந்தே செதுக்கப்பட்டுள்ளன. சூரிய வழிபாடு உள்ள இடங்களில் எல்லாம் நாகவழிபாடு இருந்துவந்துள்ளது. சூரியனுக்கும் பாம்புக்கும் உள்ள நெருங்கிய தொடர்பின் அடிப்படையிலே தான் ஞாயிற்றுக் கிழமை பாம்புக்குப் பால்வார்த்து வணங்குவது சாலச் சிறந்தது எனக் கருதினர் போலும்.

நாகர் வழிபாடு சைவம் வைணவம், சமணம், பௌத்தம் என்ற நான்கு சமயங்களுக்கும் பொதுவானது. சிவபெருமான் நாகத்தைக் கழுத்தணியாகக் கொண்டுள்ளார். திருமால் ஆதிசேடனைப் படுக்கையாகக் கொண்டு அறிதுயில் செய்கின்றார். சமணசமய தீர்த்தங்கரர் பார்சுவநாதரின் திருவுருவம் படமெடுத்த பாம்பினடியிலே காணப்படுகிறது. புத்தசமயத் துறவிகள் நாகத்துக்கு ஆலயங்கள் அமைத்து வணங்கி வந்ததாக டாக்டர் பீல் என்ற அறிஞர் குறிப்பிடுகிறார். இவ்வாறு நாகர் வழிபாடு இந்திய சமயங்களை ஒன்றாக இணைக்கின்ற நிலையை நாம் காணலாம். அதேபோன்று நாகர்கோவில் நாகராஜர் ஆலயத்திலும் சமய ஒருமைப் பாட்டை நாம் காணமுடிகிறது. ஆலயத்தில் நாகராஜனுடன் சிவனும், திருமாலும் கோயில் கொண்டு அருள்புரிகின்றனர். கோயில் தூண்களில் பார்சுவநாதர், மகாவீரர் திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கோயிலின் தெற்கு வாயில் புத்த விகாரத்தை நமக்கு நினைவூட்டுகின்றது. நாகர்கோவில் நாகராசர் ஆலயம் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்ற நான்கு சமயங்களின் கூட்டுருவமாக நமக்குக் காட்சி தருகின்றது.

*நன்றி 'கலைமகள்' - டிசம்பர் 1982*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளும் ஆற்றலும்

— இவன் —

எழுந்திரு கல்யாணி ஓம் சுத்த சக்தி
எம் இதயத்தில் உபசாந்த உதயத்தைத் தூண்டி
அழுந்திருள் ஒழிந்திடச், செழுஞ்சுடர் பொழிந்தெங்கள்
ஆதாரா கமலத்தின் மீதேறிப் பொழிந்திட
எழுந்திரு ஓம் வாணி. எழுந்திரு ஓம்லக்ஷிமி,
எழுந்திரு ஓம்காளி, குண்டலிக்களாலே
எழுந்திரு இரத்தினம், எம்முகம் பார்த்தருள்
புரிவதற்கு, எழுந்தருள்நாக இராஜேஸ்வரித்தாயே.

பிரபஞ்சப் பெரும் தோற்றத்திற்கு முன்பும், பிரபஞ்ச பேரொடுக்கத்திற்குப் பின்னும் நிலைத்திருக்கும் அளிவிலா பூரணப்பொருளே சிவம். இந்தப் பூரணப் பொருளில் இருந்து தோற்றிய அனைத்தும் பூரணமாகவும், எஞ்சியிருப்பதும் பூரணமாகவே இருக்கின்றது. உதாரணமாக அக்கினிச் சுடரிலிருந்து பிறிதொரு பொருளுக்கு, சுடரைப் பாவித்தால், அச்சுடர் குறைவதில்லை. கல்வி கற்றவன் தான் கற்ற கல்வியைப் பிறருக்கு எடுத்துச் சொல்வதினால், அவன் கல்வி அறிவு குறைவதில்லை. எடுத்துச் சொன்னவனின் கல்வியும், கேட்பவனின் கல்வியும் ஒரே அளவாக இருக்கக் காணலாம்.

ஒன்றாக இருந்த இறைவன் பிரபஞ்சம் தோற்றமுறும்பொழுது இரண்டாக அவன் இன் அருள் செயலபடுகின்றது. அது பராசக்தியாகவும், ஆதி சக்தியாகவும் மாறுகின்றது. பின்பு அன்பு, அறிவு, ஆற்றல் எனவும், அவன் அவள் அது, எனவும் இச்சா, கிரியா, ஞான சத்திகளாகவும், இராசதம், தாமதம், சாத்வீகம் எனவும் மூன்றாக விரிந்து சர்வ வியாபகமாகின்றது.

அருளில் இருந்து தோற்றும் ஆற்றல் இப்பிரபஞ்சம் முழுவதும் அலை அதிர்வுகளாக நிறைந்து, அண்டங்கள் தொடக்கம் அணுக்கள் ஈறாக ஆட்டுவிக்கின்றது. ஒவ்வொரு அணுவில் உள்ள மின் இலத்திரங்கள், அசைவதற்கும் அண்ட வெளியிலிருந்து வரும் அதிர்வுகளே காரணமாக உள்ளன என்று பௌதிக விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

இதுவே நாதம், நாதம் என்பது ஒலி மட்டுமன்று. விஞ்ஞானிகள் கூறும் அதிர்வு மாலையை (Frcguency Spectrum) பார்க்கும் பொழுது. ஒலி அதிர்வுகள் அதில் ஒரு சிறு பகுதியே. மற்றைய அதிர்வுகளான, ஒளி. றேடியோ கதிர்கள் வெப்பக் கதிர்கள் X கதிர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

& கதிர்கள் B கதிர்கள், கொஸ்மிக் கதிர்கள், என்னும் விஞ்ஞானிகளால் தீர்மானிக்கப்படாத கதிர் அதிர்வுகளும் உள்ளன. இந்த அதிர்வுகள், ஆற்றலாகவே விண்ணிலிருந்து மண்ணை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றன. இந்த ஆற்றலான சக்தியிலிருந்தே ஜடமாகிய (Matter) ஐம்பூதங்களும் தோன்றியிருக்கின்றன.

சிவத்தின் அருளான பராசக்தியிலிருந்து. அறிவு, ஆற்றல், அமைவு நிறைவு, ஆகிய நான்கு சக்தி மகா ரூபங்களாக இவ்வகிலத்தை நடத்தவும், உலக லீலையை வகிக்கவும் முன்னிற்கின்றன,

முதலாவது, சார்ந்த விர்வும், சிறந்த அறிவும், தெளிந்த அருளும், வற்றாத கருணையும், கோப்பெரும் மாண்பும், அனைத்தையும் ஆளும் இராஜராஜேஸ்வரியான மகேஸ்வரியாகவும்,

இரண்டாவது அற்புத பராக்கிரமமும், எதிர்க்க முடியாத ராஜசமும், வீராவேசமும், பிரசண்டவேகமும், தட்டுத்தடைகளை தகர்த்தெறியும் ஒரு திவ்விய பலாத்காரமும், கனலேறும், ஆர்வமும், காக்கவும், தாக்கவும் நீட்டப் பெற்ற கரங்களும், ஆத்தித்தைப் போல் தீவிரமான அன்பும் கொண்ட ஜயசக்தியாகிய மகாகாளியாகவும்,

மூன்றாவது, தெளிவும் கனிவும் பொருந்திய அற்புத வடிவும், அது அழகு, அமைவு, இனிய சமகதி, சூக்மசம்பத்து தடுக்க முடியாத கவர்ச்சி, மோகன சௌந்தரியம், இதயத்திற்கு வசீகரமான தெய்வ சக்தி வடிவம் கொண்ட மகாலச்சுமியாகவும்,

நான்காவதாக, ஆழ்ந்து நிறைந்துள்ள அறிவுத்திறனும் கவனமான மாசற்ற செய்கையும், அனைத்திலும் அமைதியும் சரியான நிறைவும், கர்மசக்தியும், நிர்வாகத் திறமையும், தூல இயல்புகளுக்கு மிகச் சமீபமாகவும், எல்லாவித்தைகளுக்கும் காரணமாகவும், ஊக்கித் தூண்டி நடத்த உறுதியும் அமைதியும், விடாமுயற்சியும் கொண்டு விளங்கும், மகா சரஸ்வதியாகவும் விளங்குகின்றாள்.

சிவத்தின் இயக்கத்தில், செயல்படத் தொடங்கிய அருள், ஆற்றல், ஜடம் இப்பிரபஞ்சத்தில் உள்ள சிருஷ்டி பேதங்களை இடைவிடாது இயக்கி, பலவாகத்தோன்றி இறுதியில் ஒன்றாகத் திரும்பவும் ஒடுக்க முற லீலை புரிகின்றது. சக்தியே சகல காரியங்களுக்கும் பின்னே உள்ளாள். அவள் கீழியல்பில், ஜீவ அகங்காரத்தின் மூலம் செயல் புரிகின்றாள். கீழியல்பாகிய மனித, மிருக இயல்புகளுக்கு காரணமான ஆணவ அகங்காரங்களிலிருந்து விடுபட்டு, தெய்வ சக்தியாக செயல் புரிவதற்கு, ஆர்வம் விலக்கல் அடைக்கலம் ஆகிய மும்முயற்சிகள் தேவை.

249205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வமானது கீழ் இயல்பிலிருந்து இடைவிடாமல் மேலிருந்து சுரக்கும் ஆனந்தப் பொருளை கூவி அழைக்கும் பெருமுயற்சியாம். அதில் ஒளியும் உண்மையும் துலங்கவேண்டும். ஆசைகளையும் அகங்கார வேண்டுதல்களையும், பிடிவாதங்களையும் மறைத்துவைக்காத நினைவும் வேண்டும்.

விலக்கலாவது, நிர்மல மனதில் உண்மை அறிவு சுதந்திரமாக இடம் பெறவும் வீரிய இயல்பின் ஆசைகள், கோரிக்கைகள், வெறிகள். சுயநலம், செருக்கு, மமதை, காமம், பேராசை, குரோதம், பொறாமை, சத்தியவிரோதம், மூடத்தனம் சந்தேகம், அவநம்பிக்கை, இருள், சிறுமை, சோம்பல், மாறுதல், விரும்பாமை, தாமத குணங்கள் அனைத்தையும் விலக்குவதாகும். ஒரு பக்கத்தில் தேவ இயல்புக்கு திறந்து, மறுபக்கத்தை அடிக்கடி அசுர இயல்புகளுக்கு திறத்தலும் விலக்கல் ஆகா.

அடைக்கலமென்பது, தான், தன்மை, தனது, என்ற மனப்பான்மை இல்லாமல், எல்லா உணர்வு நிலைகளிலும், அதாவது விளிப்பு, கனவு, சுழுத்தி, துரியம் முதலிய நிலைகளிலும், ஒவ்வோர் இயக்கமும் செயலும், சக்திக்கு அடைக்கலமாக்க வேண்டும். ஆத்ம சமர்ப்பணம், ஆத்ம நிவேதனம் இவற்றின் வளர்ச்சிக்கு ஏற்றவாறே. தெய்வீக சக்தி கீழ் இறங்கி, தன் அருளை பொழியும், அப்படி கீழ் இறங்கி, தெய்வ சம்பத்தையும், பூரணத்தையும் ஒருவனில் நிலைநாட்டும்.

உலகு உணர்வின் பரிணமத்தில், மனம் அதன் உச்சிமுடியன்று, மனம் மேலும் பரிணமித்து, மனித இயல்பு தெய்வ இயல்பாக பரிணமிக்க வேண்டும். அப்படிப் பரிணமிப்பதற்கு எவ்வித வீண்வாதமுமின்றி, அன்னையிடம், அவள் சக்திகளிடமும் எம்மை ஒப்படைக்க வேண்டும், எவ்வளவுக்கு எவ்வளவு அடைக்கலம், அதாவது சரணாகதி கூடுகின்றதோ, அவ்வளவுக்கு அவ்வளவு தெய்வீக இயல்பு தங்கு தடையின்றி மேலிருந்து பொழிந்து கீழ் இயல்பில் மாற்றங்களைச் செய்யும். அகந்தை விருப்பில் பணிபுரிவதும், சொந்த லாபத்தை அவாவித் திரிவதும், அகம்பாவ ஆசைகளை நிறைவேற்றத் துணிவதும், பலனைக் கேட்டலும், பரிசுதேடலும் இருப்பின், உனக்கு தெய்வசேதனமும், சாந்தமும், பலமும், ஆனந்தமும் உனது பரிசாக மாட்டா. உன்னிடம் தெய்வ கிருபை நிலைக்க எதிர்பார்ப்பது வீண். சரணாகதி பூரணமாகவேண்டும். மெய்யும் பொய்யும் ஒளியும் இருளும், சரணும் சுயநலமும் சேர்ந்து இருக்கக்கூடாது. சரண் உண்மையாகவும், பூரணமாகவும் இருந்தால், தெய்வ சக்தி மற்றதெல்லாம் செய்யும். வாழ்வு தெய்வீகமாகும். அதுவே அன்னையின் அருள், அவள் ஆட்டும் லீலையே ஆற்றல்.

நின்றும் இருந்தும் கிடந்தும்
நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன்மலர்ப்
பாதங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாக வழிபாடு

— கலாநிதி, சி. தில்லைநாதன் —
( தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம் )

பண்டைக் காலமுதல் உலகின் பல பாகங்களிலும் பாம்பை வழிபடும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும், மெக்சிக்கோவிலும், சீனாவிலும், அவுஸ்திரேலியாவிலும், ஜப்பானிலும், பபிலோனியாவிலும், எகிப்திலும், அரேபிய நாடுகளிலும், கிரேக்கத்திலும், உரோமிலும் அவ்வழிபாடு நிலவியமைக்கான ஆதாரங்கள் பரக்கக் காணப்படுகின்றன. பண்டை எகிப்திற் பாம்பு பூமியின் புத்திரனாகவும் பூமியின் உயிராகவும் கருதப்பட்டது. பாம்பின் தோல் அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும் என்று இத்தாலியர் நம்பினர். ஏதென்ஸ் நகர அரணைப் பாதுகாத்த பாம்பு மாதந்தோறும் அதன் தேனப்பத்தினை உண்டு களித்ததாம். உலகச் சமயங்களிற் பாம்புக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. காலத்திலால் மிக முற்பட்டது அதுவே என்று பாம்பு வழிபாட்டினைக் கூற முடியாவிட்டாலும், புரிந்து கொள்ள வியலாத சக்திகளைச் சாந்தப்படுத்தி இணக்க மனித அறிவு நாடிய மிக முற்பட்ட முறைகளில் ஒன்றாக அதனைக் கொள்ளவியலும் என்பர் ஜே, பேர்க்கியூஸன். கடலினடியிலும் பூமியின் கீழும் புதைந்து கிடக்கும் செல்வங்களைப் பாதுகாப்பவை பாம்புகள் என்றும் அவை மெய்யறிவின் சின்னங்கள் என்றும் பலநாட்டவர் கருதினர்.

இவ்வாறு பாம்பு பணிந்து போற்றப் படுவதற்கான காரணங்கள் யாவை? பலமும் புத்திக்கூர்மையும் நுட்பமாக நழுவும் திறனும் மந்திர சக்தியும் வாய்ந்தவையாக அவை காணப்பட்டன. திடீரெனத் தோன்றுவதும் திடீரெனத் தாக்குவதும் திடீரென மறைவதும் அவற்றின் இயல்புகள். வீடு வாசல், தெரு, குளத்தடி, கிணற்றடி போன்ற இடங்களிலெல்லாம் அவை காணப்படும். உயிரெடுக்கும் கொடுமை மக்களை அஞ்சவைப்பது-பாம்பைக் கண்டாற் படையும் நடுங்கும் என்பது பழமொழி. இருந்தும், மனித வாழ்வுக்கும் வேளாண்மைக்கும் எலிகளால் ஏற்படும் நாசம், பாம்புகளால் ஏற்படும் ஆபத்தைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமானது என்றும், எலிகளைக் கட்டுப்படுத்தப் பாம்புகள் அவசியமாகின்றன என்றும் கருதப்படுகிறது.

செட்டையை உதறிவிட்டு இளமையை மீட்கும் சக்தி பாம்புக்கு உண்டென்ற நம்பிக்கை அதன்பால் வியப்பினை ஏற்படுத்துவதாய் அமைந்தது. கைகால்களின் துணையின்றிச் சுயமாக இயங்கும் வல்லமை அதற்குண்டு. அந்த வகையிற் புறத்துணை யெதுவுமின்றிச் சுயம்புவாய் இயங்கவல்ல ஆதிசக்தியின் அடையாளமாகவும் பாம்பு வியந்து துதிக்கப்பட்டது.

குறிப்பிட்டதொரு சமய வழிபாட்டோடு மட்டும் தொடர்பு படுத்தப்பட முடியாத அளவுக்குத் தொன்மையும் சிக்கலும் வாய்ந்ததாகக் காணப்படும் பாம்பு வழிபாடு இந்தியாவிற் சிறப்பாகப் பரவியுள்ளது. பரவப்படும் பாம்பு தன் படத்திற்குள் இரத்தினக் கல்லை வைத்திருக்கிறதென்ற நம்பிக்கை இந்தியாவில் உள்ளது. படத்தை யுடையது நாகபாம்பு. அதுவே பாம்புகளின் அரசனாகக் கருதப்படுவது. நாகம் ஆரியர் வருகைக்கு முற்பட்ட காலமுதல் இந்தியாவின் பல பாகங்களிற் பரவப்பட்டு வருகிறது. நாகச் சின்னங்கள் பலவும் கோவில்கள் பலவும் அமைந்திருக்கின்றன.

நாகங்களைப்பற்றி வடமொழிப் புராண இதிகாசங்களிற் சுவாரஸ்யமான செய்திகள் காணப்படுகின்றன. காசியப்ப முனிவர் தக்கனுக்குப் பிறந்த பதின்மூன்று பெண்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணந்து தேவர்களையும் அசுரர்களையும் விலங்குகள் பாம்புகளையும் பெற்றதாகக் கூறப்படுகிறது. காசியப்பரின் மனைவியான கத்துரு என்பாள் ஆயிரம் வலிமிகு நாகங்களை விரும்பிப் பெற்றுளாம். அவளது வழித்தோன்றல்களுட் பிரதானமானோர் மகா உரகனும் நாகராஜனுமாம்.

இராமாயாணத்திற் சடாயு தன் பூர்வீகத்தைக் கூறும் சந்தர்ப்பத்திற் கத்துரு பன்னகங்களையும், சுரஸா என்பவள் நாகங்களையும் பெற்றதாகக் கூறப்படுகிறது. சிரார்த்தச் சடங்குகளைச் செய்வதற்குப் பிள்ளைகள் வேண்டுமென விரும்பிய ஜரத்காரு முனிவர் தன் வயோதிப காலத்தில் மனசா என்ற நாக தேவதையை மணந்து ஏராளமான நாகங்களைப் பெற்றெடுத்ததாகவும் ஒரு கதையுண்டு. மடியிலே பிள்ளையுடன் நாகபாம்புப்பட விதானத்தின்கீழ் அமர்ந்துள்ள வடிவில் இன்று மனசா வழிபடப்படுகிறாள். அவ்வழிபாடு பாம்புகள் மலிந்த பிரதேசங்களிற் சிறப்பிடம் பெறுகிறது. பாம்பு தீண்டியோர் மனசாவின் மகனை அஸ்திக முனிவரின் பெயரை உச்சரித்தால் உயிர்தப்பக்கூடும் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது.

வைணவ சைவ பௌத்த சமண வழிபாடுகளில் நாகம் இடம்பெறுகிறது. ஆதிசேடன் என்ற பாம்பின்மீது திருமால் பள்ளி கொண்டிருக்கிறார். கண்ணனின் அண்ணனான பலராமனும், இராமனின் தம்பியான இலக்குமணனும் ஆதிசேடனின் அவதாரங்கள் என்று கருதப்படுவர். பலராமன் இறந்த போது அவனது வாயிலிருந்து பெரியதொரு பாம்பு வெளிவந்ததாம். பலராமன் வழிபாட்டுருவங்களில், அவன் கரங்களிற் கலப்பையோடும் நீர் பருகும் பாத்திரத்தோடும் நாக படவிதானத்தின் கீழ்க் காணப்படுகிறான். அத்தோற்றம் மருத நில முல்லைநிலப் பண்பாட்டுக் கூறுகளை நினைவு படுத்துவதாயுள்ளது.

அஹிர்பூதன்ய என்ற பாம்பு உடலுறுதியும் செல்வமும் வேண்டித் துதிக்கப்படுவது பற்றிய குறிப்பு இருக்கு வேதத்திற் காணப்படுகிறது. கடல் கடந்த வர்த்தகத்தில் வெற்றி வேண்டியும் அஹிர்பூதன்ய வழிபடப்பட்டதாய்த் தெரிகிறது. பாம்புகளைத் துதிக்கும் தோத்திரங்கள் மைத்திராயனி சம்மிதையில் உள்ளன.

இந்திய ஆதிக்குடிகளின் மத்தியில் நாக வழிபாடு பிரசித்திபெற்றிருந்தமைக்குப் பல சான்றுகள் உண்டு. புத்தமதம் பரவியகாலத்தில், அம்மத சங்கத்திற் சேர விண்ணப்பித்தோரிடம் அவர்கள் நாகவழிபாடு ஆற்றுகிறவர்களா என்ற கேள்வி கேட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனாற் காலப்போக்கிற் பௌத்த வழிபாட்டில் நாகம் பெற்றிருக்கும் இடத்தை நோக்கும்போது, நாகவழிபாட்டை ஒழிக்கவியலாத நிலையிற் பௌத்தர்கள் அதனோடு இணக்கம் ஏற்படுத்திக்கொண்டனர் என்றே தோன்றுகிறது. பௌத்தர்கள் நாகராசர்களை லோகபாலர்களாகப் போற்றுவதும் சமுத்திர தேவர்களான வருணனையும் சாகரனையும் நாகராசர்களெனக் கொண்டாடுவதும் அதனையே உறுதிப்படுத்துவதாக வேண்டும். நாகங்களைக் கௌரவிப்பதற்கும் அகலச் செய்வதற்குமான சடங்குகளை விளம்பும் கிருஹ்ய சூத்திரங்கள் பௌத்தர்களால் ஆக்கப்பட்டவை. இந்தியாவிலும் இலங்கையிலும் ஜாவாவிலும், பர்மாவிலும். ஜப்பானிலும், சீனாவிலும் பௌத்த தலங்களின் வாயில்களில் நாக உருவங்கள் காவல் செய்வதைக் காணலாம்.

பௌத்த இலக்கியத்தில் நாகம் என்ற வார்த்தை நாகபாம்பினையும் யானையினையும் அருகர்களையும் குறிப்பதாய் வழங்குகின்றது. அருகர்களின் அடையாளச் சின்னமாகவும் நாகபாம்பு கொள்ளப்படும். தவறாக அணுகப் பட்ட விடத்துப் பேராபத்து விளையலாம் என்பதால் தர்மம் பாம்புக்கு உவமிக்கப்படும். பாம்பு தன் செட்டையை உதறி விடுவதுபோல ஞானம் தோன்றிய விடத்துத் துறக்கப்படவேண்டியவற்றைத் தயங்காது துறந்துவிட வேண்டுமென்று பேசப்படுகிறது.

இந்தியாவில் வெகுவாகப் பரவிய நாக வழிபாட்டினைத் தோற்றுவித்தவர் யாரென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதைச் சந்தேகத்திற்கிடமின்றி உறுதியாய் நிறுவுவது கடினம் நாகத்தைப் பிரதான மாக வழிபட்டோர் நாகர் என்பர். நாகரைப் பற்றி வடமொழிப் புராண இதிகாசங்கள் பல வாறுகக் கூறுகின்றன. அவர்கள் அழகும் விவேகமும், வீரமும் வாய்க்கப்பெற்றவர்க ளென்றும் அவர்களது நாகலோகம் அல்லது பாதாளலோகம்இந்திரலோகத்திலும் மேலான தென்றும் கூறப்பட்டுள்ளது. நாகருலகின் போகங்களைக் கண்டு பொறுமை கொண்ட காந்தர்வர் அதனைக் கைப்பற்றினர் என்றும், நாரதரின் உதவியுடன் அதனை நாகர் மீட் டனர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மணி மதில்களாற் சூழப்பட்ட நாகர் தலைநகரான போகவதி அளவற்ற செழிப்பினதாக விளங் கிற்று என்றும் அரசமாளிகையானது மணி மண்டபம் எனப்பட்டதென்றும் கூறப்பட்டுள் ளது. பண்டை இந்தியாவின் ஒன்பது பிரிவு களுள் ஒன்று நாகதீபம் எனப்பட்டதும், ஆதி நாளில் தென்புலத்திலும் இலங்கையிலும் நாகர்கள் பரவியிருந்தனர் என்று மகாவம் சம் கூறுவதும் இங்கு நினைவுகூரத்தக்கவை.

இந்தியாவிற்கு வந்த ஆரியர் தமக்கு முன் அங்கு வாழ்ந்த கறுத்த இனத்தவ ரிடமிருந்தே நாகவழிபாட்டைத் தழுவிக்கொ ண்டனர் என்பது வரலாற்றுசிரியர் முடிபு. நாகவழிபாடு ஆற்றியோரை ஆரியர் தலைவ னை இந்திரனது விரோதிகளாகவும் ஆரிய ரல்லாதவர்களாகவுமே இருக்கு வேதம் கருதுகிறது. மலைமீது நீர்வீழ்ச்சியைத் தடுத் துக் கிடந்த பாம்பாசுரனை அஹி - விருத் திரனை இந்திரன் வதம்செய்து நீரினை வீடு தலைசெய்தமையை இருக்குவேதம் வெகு வாகப் போற்றும். இருக்குவேதத்திற் குறிப் பிடப்படும் சம்பவம் ஆதிக்குடிகளின் நீர்ப் பாசன அணைகளை ஆரியர் அழித்தமையைக் குறிப்பதாகலாம்.

பிருந்தாவனத்து ஆயர்களுக்குத் துன் பம் விளைத்த காலிங்கநாகத்தைக் கண்ணன் அடக்கிய கதை யாவரும் அறிந்ததே அக்க தையும் திருமாலின் படுக்கையாகவும் சிவ னின் ஆபரணமாயும் நாகம் கொள்ளப்படு வதும், முன்னிருந்த நாகவழிபாட்டு முறை யினை ஒழிக்க முடியாதவிடத்துப் பிராமண வழிபாட்டு முறையோடு இணைத்துக்கொண்ட தைக் காட்டுவதாகலாம் என்று வரலாற்று சிரியர் பகர்வர்.

இந்தியாவில் நாகவழிபாட்டை நிறுவிய நாகரை ஆஸ்திரலாயிடு இனத்தவர்களென் றும், காடு திருத்திப் பயிர்செய்யும் முறை யைக் கண்டறிந்தவர் என்றும், பஞ்சாடை நெய்யும் முறையினை அறிந்திருந்தவர்கள் என்றும், சந்திரனுடைய வளர்வு தேய்வுக ளைக் கொண்டு நாட்களைக் கணக்கிடும் முறை யினைக்கைக் கொண்டவர்கள் என்றும் பேரா சிரியர் எஸ். இராமகிருஷ்ணன் கூறுகிறார்.

நாகவழிபாட்டுக்குச் சான்றுகக் கிடைக் கும் மிகப்பழைய ஆதாரம் மொகஞ்சதாரோ மட்பாண்ட முத்திரையிற் காணப்படுகிறது. சிந்துவெளி மொகஞ்சதாரோ நாகரிகத்தை ஆராய்ந்த உலக வரலாற்றுசிரியர்கள் பொரு ளாதாரத்திலோ பண்பாட்டிலோ முன்னேற் றமடையாத நாடோடிகளான ஆரியர்கள் இந்தியாவுக்குள் வந்தபோது அங்கிருந்தவர் கள் திராவிடர் என்றும், அவர்கள் நீர்ப் பாய்ச்சி விவசாயம் செய்தனர் என்றும், வீடுகளையும் தெருக்களையும் நகரங்களையும் வடிகால் வசதிகளையும் வளர்த்திருந்தனர் என்றும் வர்த்தகத்திலும் கைப்பணியிலும் சிறந்திருந்தனர் என்றும் கூறுவர்,

நாகவழிபாடு திராவிடருக்கு மட்டும் உரிய தாய் இருந்தது என்று கூறமுடியாவிட்டாலும் இந்தியாவில், சிறப்பாகத் தென்இந்தியாவில் அது வேரூன்றியமை கவனிக்கத் தக்கது, மலையாளத்தில் மிகப்பழைய காலமுதல் நாகவழிபாடு நடைபெறுகிறது. நம்பூதிரிப் பிராமணர் வீட்டுத்தோட்டங்களில் நாகதலங் கள் அமைந்துள்ளன. கன்னடத்து வனவாசி என்ற இடத்துக் கல்வெட்டொன்று முதலாம் நூற்றுண்டின் மத்தியில் அங்கு நாகக் கற்சிலை ஒன்று நிறுவப்பட்டதற்குச் சான்று பகர்கின்றது.

ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலத் தமிழ்ப்புலவர்களுட் சுமார் இருபதுபேருடையை பெயர்களில் நாகம் இடம்பெற்றுள்ளது. இளநாகனுர், நன்னு கனுர், வெண்ணுகனுர் ஆகியபெயர்கள் உதாரணங்களாகும். சங்ககாலத்திற் பாலை நிலத்தில் வாழ்ந்த எயினர்களை நாகர் என்றும், ஒளியரும் அருவாளரும் மறவரும் பரதவரும் அவர்களது மரபினர் என்றும் வி. கனகசபை கூறுவர்.

இன்று தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் நாகம்மா, நாகையா, நாகலிங்கம், நாகராசா, நாகநாதன், நாகரத்தினம, நாகசாமி, நாகப்பா முதலான பெயர்கள் பெருவழக்காயுள்ளன. நாகத்தைக் கருவுற்றிருக்கும் பெண்கண்டால், பிறக்கும் பிள்ளைக்கு அதன் பெயரை வைக்கவேண்டுமென்று நம்பப்படுகிறது. நாகபட்டினம், நாகர்கோயில், நாகமலை முதலான இடப்பெயர்களும் உண்டு. பாம்புப் புற்றுக்களுட் பாலும் முட்டையும் ஊற்றி வழிபடுவர். மகப்பேறு வேண்டியோ கருச்சிதைவையும் குறைப் பிரசவத்தையும் தவிர்த்தல் கருதியோ பெண்கள் நாகப் புற்றிற் பாலூற்றிப் பழங்கள் மலர்கள் வைத்துக் கற்பூரம் ஏற்றி வழிபடுவர், அவ்வாறு வழிபடும் போது பாடப்படுவதாகக் கூறப்படும் ஒரு நாட்டுப்பாடல். பின்வருமாறு :

"புற்றுப் புற்று நாகரே
பூமி இடம் கொண்டவரே
மணிப் பிரப்பு போல
வால் அழகு நாகரே
சிறு சுளகு போல
பட மெடுக்கும் நாகரே
குண்டு முத்துப் போல
கண்ணழகு நாகரே
பச்சரிசி போல
பல்லழகு நாகரே" என்பதாகும்.

நாகப் பிரதிஷ்டை தென்னிந்தியாவில் பிரதானமாக இராமேஸ்வரத்திலும் தஞ்சாவூரிலும் பிரசித்திபெற்றதாகும். கிராமத்துக் குளத்தின் அல்லது ஆற்றின் கரையிலுள்ள அரசமரத்தின் நிழலில் நாகத்துக்குக் கல்லிற் சிலை அமைத்து வலம் வந்து வழிபடுவர். திங்கட்கிழமை வரும் அமாவாசை தினத்தன்று உடல் நலமும் மகப்பேறும் வேண்டும் இவ் வழிபாடு விசேடமாக நடைபெறும். அரசமரத்தடி நாக உருவச் சிலையினை 108 தடவைகள் அல்லது 216 தடவைகள் அல்லது 324 தடவைகள் அல்லது 432 தடவைகள் பிள்ளை வரம் வேண்டும் பெண்கள் வலம் வருவர். ஆடி ஆவணி நடவுப் பருவத்தில் நடைபெறும் நாக பஞ்சமி விழாவும், புரட்டாதி ஐப்பசி அறுவடைக் காலத்து ஆனந்த சதுர்த்தஸியும் நாகவழிபாட்டை ஒட்டியவை./

மகாவம்சத்தில் நாகதீபம் என்று குறிப்பிடப்படும் வட இலங்கையில் நாகர்கோயில் புதூர், பொன்னலை, செம்பியன்பற்று, மருதடிச் சேனையூர் முதலிய இடங்களில் நாகர் வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. பாரத தேசத்தின் ஒரு பகுதிக்கும் இலங்கைக்கும் வட இலங்கைக்கும் வழங்கிய நாகதீபம் என்ற பெயர் மருவிப்போலும் இன்று நயினு தீவு என ஒரு தீவினைக்குறிக்கிறது. நயினு தீவிலுள்ள பிரசித்திபெற்ற நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நாகத்துக்கு வழிபாடாற்றப்படுகின்றது.

உதவிய நூல்கள் :

1. J. Ferguson, Tree and Serpent Worship, London, 1873
2. D. D. Kosambi, Myth and Reality, Bombay, 1962
3. V. Kanakasabhai, Tamils Eighteen Hundred Years Ago, Madras, 1904
4. K. Mammen. Kerala Culture, Trivandrum, 1942
5. Nathan Katz, Buddhist Images of Human Perfection, Delhi, 1982
6. Heinrich Zimmer, Myths and Symbols in Indian Art and Civilization, [Newyork, 1962
7. எஸ்.இராமகிருஷ்ணன் இந்தியப் பண்பாடும் தமிழரும் மதுரை, 1971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஒப்பியல் ஆய்வுக் கட்டுரை.

# சக்திதேவியும், சாக்த தேவியும், நாகபூஷணியும்

— புலவர் ஈழத்துச் சிவானந்தன்

கடவுள் வழிபாடு மனிதகுலத்தின் அறிவு முதிர்ச்சிக்கு, ஆன்ம ஈடேற்றத்திற்கு அடையாளமாய் விளங்குவது. நாளாந்த நடைமுறை வாழ்க்கையில் வழிபாடும் ஒன்ருய்க் கலந்ததாலேயே மக்கள் அன்பு செய்தும், அமைதி கண்டும், கொடுத்தும் வாங்கியும் கூடி மகிழ்ந்தும் துன்பத்தில் பங்கு கொண்டும் இன்பத்தில் நிறைவு கண்டும், வாழ்வாங்கு வாழ பழகிக் கொண்டார்கள். மனித மன உணர்வுகளைச் சமைத்துப் பக்குவப் படுத்தும் பணியில் சமய வாழ்க்கை வெற்றி கண்டது. கடவுளை நம்பினல் கெடுதிகள் இல்லை - நன்றேவரினும் பிழைவரினும் அவனே பொறுப்பாளி, என்னும் சரணுகதி நிலையும் நினைப்பும் மனித குலத்தை மண்ணில் நல்ல வண்ணம் வாழத் தூண்டியது.

கடவுள் நெறியில் சிவபெருமானை முழுமுதலாய் ஏற்றுக் கொண்ட சைவசமயம் பழமையையும் புதுமையையும் இணக்கி இயல்பாய் எல்லோரும் இன்புற்றிருக்க வழிசெய்தது. சைவசமயம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகெங்கும் பரவியிருந்ததென்பதை பல்வேறு இனவழி ஆய்வாளர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள். மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களிலே கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளும், புதைபொருள்களும் முன்னைப்பழம் பொருளான சிவப்பொருளை வாழ் முதலாகிய பொருளாக்கியுள்ளன. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதாகக் கருதப்படும் இந்துப் பள்ளத்தாக்கு நாகரிகம் சமயங்கள் எல்லாவற்றிற்கும் முந்தியது சைவ சமயமே என்றும் முழுமுதலானவன் முழுமுதலான சிவபெருமானே என்றும் காட்டியதையும் அறிஞர் பெருமக்கள் கண்டு விண்டுள்ளனர்.

சங்க கால இலக்கியச் செல்வங்களிலேயும் சிவபெருமானைப் பற்றிக் கூறப்படும் செய்திகள் பல உண்டு. அச் செய்திகளிலே சிவனை "முதுமுதல்வன்" என்று குறித்துள்ளார்கள். சிவபெருமானுடைய தோற்றத்தை அவர்கள் ஒரு கூட்டு வடிவமாகவே காட்டியிருக்கிருர்கள். சடையில் கங்கையும், பிறையும், கொன்றை மாலையும், முக்கண்ணும் தெரிந்த அவர்களுக்கு சிவனுடைய இடப்பாகத்து மங்கையும் தெரிந்தாள், மங்கைபங்கனுய் பெண்ணேர் பாகத்தனுய், அர்த்தநாரீஸ்வரனுய் விளங்கிய சிவபெருமானே யாவர்க்கும் தெய்வமானுன். சிவபெருமானை வழிபட்ட மக்கள் வாழ்க்கையோடும், இயற்கையோடும் இணைந்த நெறிமுறைகளை வகுத்துக் கொண்டு வாழ்ந்தார்கள். இதனுலேயே சைவசமயம் எல்லாராலும் விரும்பப்பட்ட சமயமாகி உலகநாடுகள் பலவற்றிலும் பரவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறி அன்பும் அருளுமாய் அறிவும் இயக்கமுமாய் சிவமும் சக்தி யுமாய் சிறந்து விளங்குவது. முழு முதலான முதுமுதல் முதுகோதை யோடு இணைந்து இயங்கியே இவ் வுலகத்தைப் படைத்தும் காத்தும் அழித்தும் விளையாடுகின்றான், சிவ னின் திருவிளையாடல்களில் சிவசக்தி யின் தொடர்பு நீங்கியது கிடை யாது. அவனுடைய விளையாட்டில் அவன் அறிவாய் அமைதியாய் ஆதா ரமாய் இருக்க; அம்மையின் ஆளுமை விஞ்சி வேகப்படுவதுமுண்டு. அடிப் படையாய் தான் நின்று கொண்டு அம்மையின் சக்தி இயக்கங்களுக்கு வழி செய்யும் அம்மையப்பனின் கருணை எண்ணி வணங்கத்தக்கது. அர்த்தநாரீஸ்வரனாய் விளங்கும் இறை - முறை பிறழாத - இயங்கிய லுக்கு அச்சாணியாகி; பராசக்தியை பாரொடு விண்ணாய் பரந்து விஞ் ஞான வித்தைகளுக்கும் மெய்ஞ் ஞான விளக்கங்களுக்கும் மகாசக்தி யாக்கி உயிரூட்டிக் கொண்டிருக்கி றார். மகாசக்தி சிவனோடு உறைந்த தேவி, ஆண் பாதி, பெண் பாதியாய் சிவனும் சிவையுமாய் ஒன்றாகிய வடி வமே சிவசக்தி வடிவம். சிவம் என் றதும் சக்தி சேர்ந்த வடிவமும், சக்தி தேவி என்றதும் சிவம் சேர்ந்த உரு வமும் சைவ சமயக் கொள்கையில் ஊறிய உறைந்த உணர்வுகளாகும்.

சிவகாமியாய், சிவக்கொழுந் தாய் உலகை இயக்கும் சக்தியை அனுபூதிச் செல்வர்கள் ஆதிசக்தி யாய் மூலசக்தியாய் போற்றினர். அவளுடைய பரந்துபட்ட ஆளுமை யையும், வீச்சையும் விதந்து பாராட்டி பதிகங்களும் பாமாலை களும் பாடினர். சிவனோடு சிவணிய சக்தி உலகைக் கவனிக்கும் காரிய வெளிப்பாடாய் அவர்களுக்கு காட்சி தந்தாள். அவளுடைய பேராற்றலும், பெருங்கருணையும் உலகை உந்தி இயக்குகின்றது. இத னாலேயே வழிபடும் மக்கள் சக்தி தேவிக்கு தனி மரியாதை செலுத்தி அவளுடைய வெளிப்பாடுகளை அவ ளின் தனித்தன்மைகளாக கருதினர். அவளுடைய தனித்தன்மை சிவனும் சேர்ந்த ஒரு கூட்டுப் பொதுத் தன் மையின் ஒரு கூறாய வேறே என்ப தனை நுனித்து ஆய்ந்து கண்டவர் களும் உண்டு. " அருளது சக்தியா கும் அரன் தனக்கு " என்னும் சிவ ஞான சித்தியார் பராசக்தி சிவபரம் பொருளுக்கு வேறானதல்ல, சிவம் சக்தி என இரண்டாகிய ஒன்றின் ஒருமைப் பரம்பொருளே என்பர்.

அறிவு வளர்ச்சி விஞ்ஞான விந்தைகளைக் கண்டது. எல்லாவற் றிற்குமே விஞ்ஞான விளக்கங்களை விரித்தது. அதன் விரிவு முடிவடைய வில்லை. நீண்டுகொண்டே போகின் றது. ஜடத்தை ஆராய்ந்த விஞ்ஞா னம் தொடர்ந்து உயிரை ஆராய்ந் தது, பின்பு மனத்தை ஆராய்ந்தது. முடிவு தெரியாமல் இப்போது ஆன் மாவை ஆராய்கிறது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு நமது அனுபூதி மான்களும் சித்தர்களும் கூறிய உண்மைகளை ஒப்புக் கொள்ளாத விஞ்ஞானிகள், தமது ஆய்விலே மெய்ஞ்ஞானிகளின் கூற்றுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்படுவதைக் கண்டு திகைக்கிறார்கள். சக்தியின் பேரதிசயத்தைக் கண்டு வியக்கிறார்கள். சித்தர்களின் விந்தைகள் விஞ்ஞான விந்தைகளையும் தோற்கடிப்பதை உணர்கிறார்கள். மனோசக்தியால் இரும்பை வளைக்கும் அற்புதமும் தொலை ஒலிகளால் தோற்றமாகும் அசைவுகளையும் கண்டு பேராற்றல் ஒன்றின் இயக்கத்தை அனுமானிக்கிறார்கள். தாம் புறக்கணித்த ஒன்றை தமது ஆய்வுப் போக்குகள் நோக்குவதைத் தெரிந்து அங்கலாய்க்கிறார்கள், பரந்துபட்ட விஞ்ஞான வளர்ச்சி பராசக்தியின் பேரியக்கத்தினைத் தொட்டு தொடர்வது கண்ணுக்கும் கருத்துக்கும் விளக்கமாகியுள்ளது.

அன்னை பராசக்தியின் வழிபாடு தாய்த் தெய்வ வழிபாடாக மக்களால் கொள்ளப்பட்டது. கருணையால், கவனிப்பால், காத்து நிற்கும் அருள்நோக்கால், துன்பம் போக்கும் அருட்செயலால் சக்திதேவி தாயாக எண்ணப்பட்டாள். குடும்ப வாழ்வில் தன்னலமற்ற தாயின் தியாகங்களையும் இயல்புகளையும் கண்டு அனுபவித்த மக்கள் அன்னை பராசக்தியை தாயினும் மேலான தாய்க்குத் தாயான புனித இடத்தில் வைத்துப் போற்றினர்கள். தனம், கல்வி, தளர்வறியா மனம், தெய்வவடிவம், வஞ்சமில்லா இனமும், நல்லன எல்லாமும் தருபவளை தாயிலும் மேலாக கருதியதில் வியப்பில்லை. இந்தப் போக்கின் ஒருநிலையே இறைவியை மட்டும் தனியே பிரித்து மதித்து—அவளை எல்லாமாக்கி வழிபடும் சாக்தமத வழிபாடு தோன்றக் காரணமாகியது. சாக்தமத வழிபாடு சக்தி வழிபாடேயாயினும் சிவசக்தி வழிபாடன்று. சிவசம்பந்தத்தை விலக்கிய வழிபாடாய் வாழ்வொடு பொருந்தாப் போக்குடையதாய் விளங்கியதால் சாக்தமதம் காலப் போக்கில் செல்வாக்கிழந்து மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாததாய்ப் போய்விட்டது. தாய்மை வழிபாட்டை மிகுதியும் வற்புறுத்திய ்ம்மதம் பெண்தத்துவம் ஆண் தத்துவத்தை முந்தியது. ஆண் தத்துவத்தை தன்னுள் அடக்கியது என்னும் கோட்பாடுகளாலும், பஞ்சமகார பூசையால் எழுந்த குழப்பங்களாலும் ஆசார விருப்பங்கொண்டவர்களால் இம்மதம் கைக்கொள்ள முடியாமல்போனது. சாக்த தந்திரங்கள் தாய்த் தெய்வமான சாக்ததேவி அரியணையை உயிர்ப்பற்ற ஐந்து சிவங்கள் தாங்கி நிற்பதாக உருவப்பட விளக்கமும் காட்டின. இதனுடன் பெண்ணுக்கு உரிமை கேட்கும் ஓரியக்கத்தினரின் வழிபாடாக சாக்த மதம் சிலரால் சந்தேகிக்கப்பட்டது. இத்தகைய காரணங்களே இம் மதத்தின் விபாபகத்திற்குத் தடைகளாகின.

குடும்ப வாழ்க்கையில் கணவன் மனைவியாய் ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் வாழ விரும்பிய மக்கள் சக்தியை தனியே பிரித்து வணங்க விரும்பவில்லை. இல்வாழ்க்கையில் வாழ்க்கைத் துணையாக வரும் பெண்ணுக்கு ஆணைவிட சில ஆற்றல்கள் அதிகமாக இருப்பதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை நிர்வகிப்பது முதலான கடமைகளை சிறப்பாக அவளால் செய்ய முடியும். இதனுல் அவள் இல்லாள், இல்லத்தரசி, வீட்டுக்காரி என்னும் பொருள் பொதிந்த வாக்கியங்களால் மதிக்கப்படுவது கவனத்திற்குரியது. இதனுல் அவளுடைய ஆளுமைக்கு கணவனே தேவையில்லையென்று கொள்ள முடியுமா? கணவனுடைய இணைப்பு இல்லாது போனுல் பெண்ணுக்கு என்ன திறமையிருந்தும் ஆற்றல் இருந்தும் பயனில்லை. அறிவு திறமை ஆற்றல் செயல்பட்டு ஆளுமையின் முழுப் பயன்பாட்டினைக் காண கணவன் என்னும் ஆதார சுருதி அல்லது அடிப்படை தேவையே. கணவனின் பெயரைச் சொல்லிச் சொல்லியே காரியம் செய்யும் மனைவியர்களும் உலகில் உண்டு. இத்தகைய முறைமையில் வாழ விரும்பிய மக்களுக்கு சக்தியை மட்டும் தனியே பிரித்து தாய்த் தெய்வமாக்கி அவளே எல்லாம் — தோற்றமும், இயக்கமும், ஒடுக்கமும் அவளாலேயே என்ற கோட்பாடு நடைமுறைக்குச் சாத்தியமாகாது என்பது தோன்றியது.

சாக்த தத்துவத்தை மறுக்கவோ, சாக்த சமயத்தை விலக்கவோ பெரிய கொள்கை விளக்கங்களும் தீர்மானங்களும், இயக்கங்களும் தேவைப்படவில்லை. இயங்கியலில் இயற்கையோடிணைந்த வாழ்க்கைப்போக்கே சாக்தத்தை விலக்கிச் சென்றது. சக்திதேவி என்ருல் சிவசக்தியே என்ற எண்ணம் வாழ்க்கைப் போக்கோடு பொருந்திய வடிவமாகியது. வாழ் முதலாகிய பொருளான சிவசக்தி பல பீடங்களில் எழுந்தருளி அனுக்கிரகம் செய்கின்ருள். ஈழத்துச் சக்தி பீடங்களில் மிகுந்த பிரகாசச் செறிவாய் விளகுகின்றவள் நயினை நாகபூஷணி அம்மை. இவள் நாகம் வழிபட்ட புறக்காரணத்தினுலும் நாகநாதனுகிய சிவபெருமானின் தேவி என்னும் அகக்காரணத்தினுலும் நாகபூஷணியாய்ப் பொலிந்தவள். நயினையம் பதியிலே நாகபூஷணி சிவலிங்கத்தை அணைத்தபடி அடியார்களுக்கு அருள்பாலிக்கின்ருள். இவளுடைய தாய்மைப் பண்பும், அன்பும், அருள் வெள்ளமும் கடல் வெள்ளத்தையும் கடந்து பாய்கின்றது. இந்த வெள்ளத்தில் மூழ்கித் திளைத்து மகிழவே குடா நாட்டினரும், பிற நாட்டினரும் இனமத வேறுபாடின்றி கூடுகின்றனர். கும்பிடுகின்றனர். வரலாற்றிலும், இலக்கியங்களிலும் நாகபூஷணி பேசப்பட்டு வணங்கப்பட்டிருக்கிருள்.

துன்பத்தையும், தோஷத்தையும் நீக்கி வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் அருள் கடாட்சம் நாகபூஷணியிடம் ஆழ்ந்தும் பரந்தும் இருப்பதனுலேயே அடியார்கள் நாளாந்தம் ஆழ்கடலையும் தாண்டி வணக்கத்துக்குச் செல்கிருர்கள். நாகபூஷணியாய் திருக்கோலங் காட்டி அருளார் அமுதம் வழங்கியதால் புடைசூழும் அடியார் நெஞ்சில் நம்பிக்கை நாயகியுமாய் இடம் பெற்றுள்ளாள்.

நயினையும், நாகபூஷணியும், நம்பிக்கையும் நாளும் நம்மை ஆளும் சிவசக்திப் பிரகாசங்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகேஸ்வரி வழிபாடு

— கலாநிதி சி. க. சிற்றம்பலம்
யாழ். பல்கலைக்கழகம்.

நம் நாட்டிற்கு பௌத்தம் கி. மு. 3ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கால் வைத்ததும், அதன்பின்னர் அது அரச ஆதரவுடன் வளர்ச்சி பெற்றதும் வரலாறு. இருந்தும் இம்மதம் இங்கு கால் கொள்ளமுன்பு நிலவிய மதம் இந்து மதமே என்பதும் வரலாறு. இத்தகைய கருத்தையொத்த நூல்களாகிய தீப வம்சம், மகாவம்சம், போன்ற நூல்களிலும், பௌத்த மதவரலாறு பற்றி எழுதிய அதிகாரம் (Adikaram. 1949) ராகுலா (Rahula 1956) போன்றோர் களது நுல்களிலும் காணலாம்; இந்துக்களில் பெரும்பான்மையோரே பௌத்தத்தை காலகதியில் தழுவியவர்களாகும். இருந்தும் இங்கு நிலவிய இந்துமதத்தில் தன்மைபற்றி மேற்கூறிய ஆசிரியர்களும் இதுபற்றி ஆராய்ந்த கெய்கர், பரணவித்தான (Paranavitana. 1929) சரச்சந்திரா (Sarachandra. 1966) போன்றோர் கொண்டிருந்த கருத்துக்களும் விசித்திரமானவை; இவர்கள் யாவரும் இத்தீவின் நாகரிகத்துக்கு வித்திட்ட ஆதிக்குடிகள். வட நாட்டிலிருந்து குடி பெயர்ந்து வந்த ஆரிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த, விஜயனும் அவன் கூட்டத்தினரும் என்ற கருத்தில் அசையாதநம்பிக்கை கொண்டிருந்தனர். இதனால் இவர்கள் நூல்களில் இந்நாட்டில் ஆதியில் நிலவிய இந்துமத நம்பிக்கைகள் பற்றி விளக்கமளிக்கையில் சிங்கள மக்களின் தாயகம் எனக்கருதப்படும் வடஇந்தியப் பின்னணியில்தான் கருத்தை வெளியிட்டனர். இதனால் நம்நாட்டுக்கு நேரெதிரேஉள்ள தென்னிந்திய - குறிப்பாகத் தமிழக நம்பிக்கைகளுக்கும் இவற்றுக்கு மிடையே உள்ள தொடர்பை பிற்பட்டகாலத்தில் ஏற்பட்ட வெறும் செல்வாக்குகள் எனவும் கூறத்தவறவில்லை.

அண்மைக்காலத்தில் இலங்கையின் ஆதிவரலாறு, தொல்லியல் போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள புதிய திருப்பங்கள் மேற்கூறிய அணுகுமுறையிலுள்ள பலவீனத்தைத் துலாம்பரப் படுத்தியுள்ளன. மென்டிஸ் என்ற புகழ்பூத்த வரலாற்று அறிஞர் விஜயன் கதை வெறும் கட்டுக்கதை எனக் கூறி இதிலிருந்து இத்தீவில் ஏற்பட்டதாகக் கருதப்படும் ஆரிய குடியேற்றத்திற்கு (சிங்கள குடியேற்றத்திற்கு) எதுவித தடையங்களையும் பெறமுடியாது எனக் கூற (Meinds 1965) செனரத்தின என்ற மானிட இயல் அறிஞர் விஜயன் பாண்டுக் காபயன் கதைகள் வெறும் கட்டுக்கதைகள் என்ற மென்டிசின் கருத்தை உறுதிப்படுத்தியதோடு இவை கூறும் சிங்களக்குடியேற்றத்தை உறுதிப்படுத்த எதுவித தொல்லியற் சான்றுகளும் கிட்டவில்லை என்றும் கூறியுள்ளார் (Senaratne S. P. F 1969) அண்மையில் கிடைத்துள்ள ஆதாரங்கள் ஈழத்தின் வரலாற்றுக்கால நாகரிகத்திற்கு வித்திட்டவர்கள் திராவிடர்களே என்பதும் தென்னகம், ஈழம் ஆகியவை பௌத்தம் கால் கொள்ளமுன்பு இம்மக்களின் பண்பாடாகிய பெருங்கற்காலப் பண்பாட்டில் ஒருமைப் பட்டிருந்தன என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளது. (Sitrampalam S. K. 1980) இதனால் பௌத்தம் ஈழத்தில் கால்கொள்ள முன்பு நிலவிய பண்பாடும் தென்னிந்தியப் பண்பாடும் ஒரே ரகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைச் சேர்ந்திருந்தன என்பது பெறப்படும். இத்தகைய பண்பாடுதான் தமிழகச் சங்ககாலத்திற்கும் ஈழத்து வரலாற்றுக் காலத்து நாகரிகத்திற்கும் வித்திட்டது. இதனால் ஈழத்து இந்துமத நம்பிக்கைகளும் தமிழகத்து இந்துமத நம்பிக்கைகளை ஒத்துக் காணப்பட்டன எனக்கூறலாம். இதைமனதிற் கொண்டு தான் பேராசிரியர் கே. கே. பிள்ளை அவர்கள் தமிழ்நாட்டுச் சமய நம்பிக்கைகள் ஈழத்தின் வடபகுதியில் வாழ்ந்த நாகரின் நம்பிக்கைகளோடு ஒத்துக் காணப்பட்டன என்று கூறி சங்ககாலத்தில் சிவன், முருகன், மாயோன், கொற்றவை வழிபாடுகள் சிறப்புப் பெற்றிருந்தன என்றும், ஈழத்தின் வடபகுதியில், (யாழ் மாவட்டத்தில்) மேற்கூறிய கடவுளருக்குச் சில கோயில்களாவது இருந்திருத்தல் வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். (Pillai K. K. 1963)

துர் அதிஷ்டவசமாக ஈழத்தின் ஆதி இந்துமதம் பற்றி அறிந்து கொள்வதற்கு விரிவான தடயங்கள் இல்லை இலங்கை வரலாற்றைக் கூறும் தீபவம்சம், மகாவம்சம் போன்ற நூல்கள் பௌத்த கண்ணோட்டத்தில் எழுதப் பெற்றதால் பௌத்தமல்லாத சமயம் பற்றி விரிவான தகவல்களைத் தரவில்லை. அத்துடன் ஆதியில் கட்டப்பட்ட இந்துக் கோயில்களும் அழியும் பொருட்களால் கட்டப்பட்டதால் இவை எவ்வாறு எங்கு அமைக்கப்பட்டன போன்ற தகவல்களைப் பெற முடியவில்லை. இருந்தும் தீப வம்சம், மகாவம்சம் போன்ற நூல்களில் அங்கும் இங்குமாகச் சிதறிக்கிடக்கும் சில தகவல்களை ஆதிக் கல்வெட்டுக்களான பிராமி மொழிக் கல்வெட்டுக்களில் வரும் செய்திகளோடு இணைத்தும், தற்காலத்தில் சிங்கள மக்கள் பௌத்தர்களாக மாறியும் கூட அவர்கள் மத்தியில் நாட்டார் நம்பிக்கைகளாக (Folk Religion) வாழும் சமய நம்பிக்கைகளோடும் தமிழ் மக்கள் நம்பிக்கைகளோடும் ஒப்பிட்டு சங்ககால தமிழகப் பின்னணியில் ஆராயும்போது ஓரளவு ஆதி இந்துமதம் பற்றிய தகவல்களைப் பெறலாம்.

ஈழத்தில் நிலவிய சிவ வழிபாடு பற்றி வரலாற்றுக் காலத்திற்கு முந்தியகாலக் கதையாகிய பண்டுக்காபயன் கதையில் சான்றுகள் உண்டு. இதில் வரும் "சிவிகசாலா", "சோதிசாலா" போன்ற குறிப்புக்கள், சிவ, லிங்க வழிபாட்டோடு தொடர்புடைய கட்டிடங்களே என அறிஞர் கருதுகின்றனர். (Paranavitane 1929) மன்னர் வரிசையிற்கூட 'சிவ' என்ற பெயர் கொண்ட மன்னர்கள் காணப்படுகின்றனர். பிராமிக் கல்வெட்டுக்களிலும் 'சிவ' எனப் பெயர் கொண்டோர் குறிப்பிடப்படுவதோடு. சிவநகர, கைலாச, நந்தி, போன்ற பெயர்களும் காணப்படுவது வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இவ்வணக்கம் ஈழத்தில் நிலவி வந்தது என்பது புரிகிறது. இதை மனதிற் கொண்டுதான் யாழ்ப்பாண வைபவ மாலையில் விஜயன் காலமென நம்பப்படும் கி. மு. 6-ம் நூற்றாண்டில் ஈழத்தின் வடபால் திருத்தம்பலேஸ்வரன், திருத்தம்பலேஸ்வரி, கதிரமலை ஆண்டார் போன்ற கோயில்களும், வடமேற்கில் பழுதடைந்த நிலையில் மாதோட்டமும், தென் முனையில் சந்திர சேகரீஸ்வரமும் கிழக்கில் கோணேஸ்வரமும் அமைந்திருந்தன என்ற குறிப்பு வருகிறது. (குலசபாநாதன் - 1953)

மாயோனும் ஈழத்தில் வழிபடப்பட்ட தெய்வங்களில் பழமையான கடவுளாகும். இதனாற்றான் விஜயன் கதையில்கூட விஜயன் இந்நாட்டிற்குக் கால் வைத்த போது அவனைப் பாதுகாக்கும் பொறுப்பை புத்தர் சக்கனிடம் (இந்திரனிடம்) கையளித்ததாகவும் அவன் உப்புலவனிடம் இப்பொறுப்பை அளிக்க, உப்புலவன் விஜயனைப் பாதுகாத்ததாகவும் குறிப்புண்டு. (M. V : vii) உப்புல

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வன் என்றால், பாளி மொழியில் ''நீலத் தாமரை நிறத்தோன்'' எனப் பொருள் படும். இன்றும் சிங்கள மக்களின் முதற் கடவுளாக இக்கடவுளே வழிபடப்படுகி றது. நீலத்தாமரை நிறத்தோன் உண்மை யில் சங்க இலக்கியங்கள் விளிக்கும் மாயனே என்பதை இவ் வழிபாட்டம்சங் கள் எடுத்துக் காட்டுகின்றன. தென் இலங்கையில் அமைந்த தேவிநுவர ஆதி காலந் தொட்டு இவ் வழிபாட்டில் முன் னணியில் நின்றது. இதே போன்று வட பகுதியிலும் இவ் வழிபாடு நிலைத்திருந்த தற்குச் சான்றுகள் உள. பொன்னாலை, வல்லிபுரம் ஆகிய தலங்களில் உள்ள மாயோனை பிற்பட்ட சிங்கள மொழியி லமைந்த தூது இலக்கியங்களாகிய சந் தேஸ இலக்கியங்கள் குறிக்கின்றன. இருந்தும் தொல்லியற் சான்றுகளைத் துருவி ஆராயும்போது இவ்விரு இடங் களும் கிறிஸ்தவ சகாப்தத்திலே முக்கி யம் பெற்ற இடங்களாய் விட்டன என் பது புரிகிறது. (சிற்றம்பலம் சி. க. 1982) அத்துடன் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டு களில் 'ஆயர்' பற்றிய குறிப்புண்டு. சங்க இலக்கியங்களில் இது ஒரு குழுவை யும், இடையர் வகுப்பையும் குறித்தது. மாயோன் ஆயர்கள் தெய்வம் எனவும் பேசப்படுகிறான். எனவே ஈழத்திலும் ஆயர் வாழ்ந்ததற்கு வரும் குறிப்பு நிச்ச யமாக இவர்களின் தெய்வமும் வழி பட்டதை எடுத்துக் காட்டுகின்றது. இத் தகைய பழைய வழிபாடு தமிழ் மக்கள் மத்தியில் பிற்கால விஷ்ணு வழிபாட் டோடு சங்கமித்துக் காணப்பட, பௌத் தர்கள் மத்தியிலும் மேற்கூறிய சங்கமிப் போடு, பௌத்த செல்வாக்குப் பெற் றுக் காணப்பட்டாலும் கூட, நாட்டார் வழக்கில் – பௌத்தத்தால் அழிக்க முடி யாத வழிபாட்டில் அது பெறும் முக்கி யம் அதன் தொன்மைக்குச் சிறந்த உரை-கல்லாகும்.

சிவன், மாயோன் வழிபாடு போன்று முருக வழிபாடும் மிகத் தொன்மையா னது. இந்துக்கள் மத்தியில் செல்வாக் குள்ள கடவுளாக வழிபடப்படும் முரு கனை சிங்கள மக்கள் கதிர்காமக் கட வுள் எனப் பேணி மாயோனாகிய உப்புல வனுக்கு அடுத்த முக்கிய கடவுளாக வழி படுகின்றனர். கிறிஸ்தவ சகாப்தத்திற் குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே ஈழத் தில் இது நிலைத்துவிட்டது என்பதை புத்தள மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு என்ற தாழிக்காட்டில் கண்டெடுக்கப் பட்ட 'வேல்' சான்று பகருகின்றது. முருகனது வேலை ஒத்த உருவம் ஈழத் தின் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கலாச்சாரமாகிய பெருங் கற்காலக் கலாச்சார மட்பாண்டங்களிலும் காணப் படுகின்றது. அத்துடன் பிராமிக் கல் வெட்டுகளிலும் குறியீடாகவும் இது விளங்குகிறது. இதே கல்வெட்டுகளில் வரும் 'வேல' என்ற சொல் இவ் வணக் கத்தில் ஈடுபட்டவர்களை அல்லது இவ் வணக்கத்தில் முக்கிய பங்கினை வகித்த, சங்க இலக்கியங்கள் பேசும் 'வேலன்' என அழைக்கப்பட்ட பூசாரிகளைக் குறித்து நின்றது எனலாம். ஈழத்தின் தென் கோடியிலுள்ள கதிர்காமம், கிழக் கிலுள்ள மண்டூர், வடக்கிலுள்ள செல்லச் சந்நிதி ஆகிய தலங்களில் இன்றும் நடை பெறும் வழிபாட்டு முறைகள் பழைய வேட்டுவ வழிபாட்டின் தொடர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது. வட இந்திய ஆரிய பிராமணச் செல்வாக்கற்ற, உள் ளூர் குருமாரால் இயற்றப்பட்ட வழி பாடே இஃதாகும். முருகன் ஒளிக்கட வுளே. கதிர்காமம் என்றால் ஒளிபடர் கிராமம் என்பது பொருள். எல்லம் என்றா லும் ஒளி. சந்நிதி என்றால் இடம். இவ் எல்லம்தான் காலகதியில் செல்லச் சந்நி தியாக மருவியது எனலாம். கதிர்காமம் போன்று ஒளிபடர் பிரதேசமாக விளங்கி ஒளிக்கடவுள் வழிபாட்டு ஸ்தலமாக வளர்ச்சி பெற்றது. ஏன் யாழ்ப்பாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவமாலை குறிக்கும் கதிரமலை ஆண் டார் உண்மையில் முருகன் கோயிலா என்றுகூட எண்ணத் தூண்டுகின்றது.

மேற்கூறிய சான்றுகள் ஈழத்தில் சங்கத் தமிழகத்தைப் போல் சிவன், மாயோன், முருகன் வழிபாடுகள் நிலைத்திருந்ததை உறுதி செய்கின்றன. இவற்றோடு நெருங்கிய வழிபாடாகவே கொற்றவை (தாய்) வழிபாடு விளங்கியது. உண்மையில் இது ஒரு அன்னை வழிபாடாகும். இவள் வெவ்வேறு வடிவில் கொற்றவை, துர்க்கை, அம்பாள் போன்றவாறு காலகதியில் வளர்ச்சி பெற்றது வரலாறு. முருகன்கூடக் கொற்றவைச் சிறுவனல்லவா! ஈழத்தில் முருக வழிபாட்டிற்கான சான்றுகள் நிச்சயம் கொற்றவை வழிபாடும் இங்கும் நிலைத்திருந்ததை உறுதி செய்கின்றன. இத்தகைய வழிபாட்டின் படர்ச்சிதான் இன்று தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் அப்பாள், துர்க்கை, காளி, நாச்சிமார், பிடாரி போன்ற தெய்வங்களின் வழிபாடாகவும், சிங்கள மக்கள் நாட்டார் இலக்கியங்களில் சிறப்புடன் விளிக்கப்படும் 'பத்தினி' வழிபாடாகும். வரலாற்று ரீதியில் நோக்கும்போது தாய் வழிபாட்டுடன் பிற்பட்டுவந்த பத்தினி வழிபாடு சங்கமித்தது எனக் கொள்வதே பொருத்தமானதாகும். சிங்களவர் முருகன் மாயோன் போன்று பத்தினித் தெய்வத்தைப் பெரிதாகப் பேணுகின்றனர். இவ்வாறே தமிழ் மக்களும் 'அம்பாள்' வழிபாட்டில் அதிக அளவு ஈடுபாடு கொண்டு காணப்படுகின்றனர். இத்தகைய வழிபாடு அநாதியானது என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் ஈழத்தின் பல பகுதிகளிலும் சுடுமண்ணிலமைந்த பெண் உருவங்கள் கணப்படுகின்றன (Sitrampalam S. K. 1980)

யாழ்ப்பாண வைபவமாலை குறிக்கும் திருத்தம்பலேஸ்வரி கோயில் கீரிமலைப் பகுதியில் அமைந்திருந்த அம்பாள் ஆலயம் என்பர் அறிஞர். எவ்வாறுயினும் இத்தகைய சான்று சிவ வணக்கத்தைப் போன்று ஸ்வரி வணக்கமும் வடபகுதியில் மிகப்பழைய வணக்கம் என்பதை உறுதிப் படுத்துகின்றது. இருந்தும் நகுலேஸ்வர ஆலயம் இன்றும் இப்பகுதியில் சிவ ஸ்தலத்தின் பெருமையை மட்டுமே எடுத்துக் கூறிநிற்பது ஈண்டு நினைவு கூரற்பாலது எவ்வாறுயினும் நயினையில் இன்று செல்வாக்குடன் விளங்கும் 'நாகேஸ்வரி' ஆலயம், ஈழத்தின் வடபாலமைந்த சிவவழிபாட்டு ஸ்தலங்களில் கீரிமலை போன்றும், மாயோன் வழிபாட்டு ஸ்தலங்களாகிய பொன்னாலை வல்லிபுரம் போன்றும், முருகவழிபாட்டு ஸ்தலமாக விளங்கிய செல்வச் சந்நிதி போன்றும், ஆதிகாலத்தில் ஈஸ்வரி வழிபாட்டில் மேம்பட்ட ஸ்தலமாக விளங்கியிருந்திருக்கலாம் என்றுகொளல் பொருத்தமாகும். கீரிமலையில் திருத்தம் பலேஸ்வரன், திருத்தம்பலேஸ்வரி வழிபாடுகளில் ஆரம்பத்தில் முக்கியம் பெற்றது போன்று நயினையில்கூட ஈஸ்வரிவழிபாட்டுடன் 'ஸ்வரன்' வழிபாடும் சிறப்புற்றிருந்திருக்கலாம். எவ்வாறு காலகதியில் கீரிமலை ஸ்வர வழிபாட்டில் முன்னிலை பெற்றதோ அதுபோன்று நயினையும் ஸ்வரி வழிபாட்டில் முன்னிலை பெற்றது என்று கூடச் சொல்லிவிடலாம். ஏனெனில் சமய வழிபாட்டு வளர்ச்சியில் சிற்சில கடவுளர் ஏனைய கடவுளர் வழிபாட்டை விட காலகதியில் செல்வாக்குப் பெறுவதும் சாதாரண நிகழ்ச்சியாகும் இவ்வாறே கீரிமலையிலும் சிவ வழிபாடும், நயினையில் ஈஸ்வரி வழிபாடும் சிறப்புப் பெற்றன எனக் கூறினால் பிழையாகாது. சர்வவல்லமை கொண்ட பொருள் அடியார் கண்களில் ஈஸ்வரனாகவும் (தகப்பனாகவும்) ஸ்வரியாகவும் (தாயாகவும்) காட்சி கொடுக்கிறது. இத்தகைய ஈஸ்வரிதான் நயினையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகேஸ்வரியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும் காசியில் விசாலாட்சியாகவும் விளங்கி அடியார்களுக்கு அருள் பாலிக்கிறாள் எனக் கூறின் மிகையாகாது.

மேற்கூறிய வழிபாடுகள்பற்றி அறிந்தோம். ஆனால் இவ்வழிபாட்டு ஸ்தலங்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்பது பற்றிய சான்றுகள் எமக்குக்கிட்டவில்லை, காரணம் இப்பழைய காலத்தில் கட்டப்பட்ட இந்துக் கோயில்கள் யாவும் உருவத்தில் சிறியனவாக இருந்ததோடு அழியும் பொருட்களாலும் கட்டப்பட்டன. இதனால் இவைபற்றிய சான்றுகள் எமக்குக்கிட்டவில்லை. கி. பி. 3ம் நூற்றுண்டில் பௌத்த வெறியனாகிய மகாசேன மன்னன் பல சிவ வழிபாட்டு ஸ்தலங்களை அழித்ததாக மகாவம்சம் கூறுகிறது. இவ்வாறும் பல இந்து ஸ்தலங்கள் அழிக்கப்பட்டிருக்கலாம் என்று கூறினாலும் பிழையாகாது. எவ்வாறாயினும் தற்போதைய நிலையில் மேற்கூறிய வழிபாட்டு ஸ்தலங்களின் அமைப்பும் பற்றிவிரிவான தகவல்கள் எமக்குக்கிட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது இதனால் பண்டைய நாகபூஷணி ஆலய அமைப்புப் பற்றி தகுந்த அகழ்வாராய்ச்சி இன்றி எந்த முடிபுக்கும் வர முடியாத நிலையில்உள்ளோம்.

இருந்தும் நயினை நாகபூஷணி வழிபாடு ஈழத்தில் நிலவிய இரு வேறு வழிபாடுகளின் சங்கமிப்பை எடுத்துக் காட்டுகின்றது. இவற்றுள் ஒன்று நாகவழிபாடு, மற்றது ஈஸ்வரி (தாய்) வழிபாடு இரண்டும் காலத்தால் உலகவரலாற்றில் மிகப்பழைய பாரம் பரியத்தை உடையவை. மிருகங்கள், பறவைகள், பாம்புகள் ஆகியனவற்றுக்கு தெய்வ அம்சம் கொடுத்தும், காலகதியில் அவற்றைத் தெய்வங்களாக வழிபடப்பட்டதும் பல்வேறு சமயங்களில் காணககூடியதாக இருக்கிறது. இந்துமதத்தில் எருது. பாம்பு மகரம் போன்றவை தனித் தனியே வழிபடப்பட்டவை. காலகதியில் பல்வேறு கடவுளரின் வாகனங்களின், அணிகலங்களாக இவை தெய்வீகத் தன்மை பெற்றதும் வரலாறு. இவ்வாறு தாய் வழிபாடும் அநாதியானது. இருந்தும் இதுதான் பெற்ற செல்வாக்கினால் நாகவழிபாட்டை தன்வசப்படுத்தியது. இவ்விதம் தனித்தனி வழிபாடுகள் சங்கமித்து செல்வாக்குள்ள வழிபாட்டில் அமிழ்வது சமய வரலாற்றில் நாம் காணக்கூடிய ஒரு அம்சமாகும்.

நாகவழிபாடும் உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளில் செல்வாக்குடன் விளங்கிய வழிபாடாகும். பண்டைய அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா, சீனா, எகிப்திய, ரோமநாகரிகங்கள் ஆகியவை இவற்றுட் சில நாடுகளாகும். பேர்கசன் என்ற அறிஞர் இவ்வழிபாடு யூபிற்றிஸ்ரைகிறிஸ் நதிதீரத்தில் தான் முதவில் தோன்றி வளர்ந்து காலகதியில் உலகம் முழுவதும் வியாபித்தது எனக் கருதுகிறார் (Fergusson 1971). அத்துடன் இது ஆரியருக்கு முந்திய வழிபாடு என்பதும் இவரது கருத்தாகும். எலியற் சிமித்தோ எனில் இவ்வழிபாடு ஆதியில் எகிப்தில்தான் தோன்றி உலகின் பல்வேறு பகுதிகளை அடைந்தது எனக் கூறி இந்தியாவுக்கும் ஏனைய இடங்களைப் போன்று பொனீசியரே இதனை எடுத்து வந்தனர் என அபிப்பிராயப்படுகிறார். (Smith Elliot 1916)

பண்டைய நாகரிகங்களை நோக்குகின்றபோது இவ்வழிபாடு பெற்ற முக்கியத்துவத்தைக் காணமுடிகிறது. எகிப்திய நாகரிகத்தில் நாக வழிபாடு ஒரு முக்கிய இடத்தைப்பெற்றது. இங்கு வணங்கப்பட்ட சூரியக் கடவுளது கிரீடத்தை அலங்கரித்தது. சூரியன் அல்லது ஒளிக்கடவுளர் வழிபாட்டோடு தொடர்புடையதாக அமைந்ததோடு, செழிப்பைத்தரும் தாய்த்தெய்வமாகிய ரன்னட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நெப்திஸ்' போன்றவற்ருேடும் சேர்த்து வழிபடப்பட்டது. உயிருள்ள பாம்புகள் தனியான இடங்களில் வீடுகளில் வளர்க்கப்பட்டன. இறந்தபோது இவற்றைப் புனிதப் பொருள்களாகக் கருதி அடக்கமும் செய்யப்பட்டது. திசைகள் கூட இப்பாம்புகளால் பாதுகாக்கப்படுகின்றன என்ற ஐதீகமும் பண்டைய எகிப்தியரிடையே காணப்பட்டது. ஏன் மன்னர்கள் கிரீடங்களில் கூட நாகபாம்பின் உருவம் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

எகிப்தைப்போன்று மத்தித்தரைக் கடலில் செழித்த ''கிறீற்'' நாகரிகமும் பழையது. இதன் காலம் கி மு. 3000 ஆண்டுகட்குப் பழையது. அறிஞர் திராவிடப் பண்பாட்டின் அம்சங்கள் இந்த நாகரிகத்திலே உண்டு என்பர். இங்கே கண்டெடுக்கப்பட்ட சிலைகளில் விசேடமாகப் பெண் தெய்வங்களின் சிலைகளில் இவர்களின் உடல், தலை என்பனவற்றை நாகம் அலங்கரிப்பது ஒரு சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது. சில சமயங்களில் பெண் தெய்வச் சிலைகளுக்கு முன்பாகப் படமெடுக்கும் நாக உருவங்களும் காணப்படுகின்றன. இவ்வாறு கிறீற்றிலும் ''நாகேஸ்வரியாக'' அம்மை வழிபடப்பட்டாள் என்பது புலனுகின்றது.

தென்னுசியாவைப் பொறுத்தமட்டில் குறிப்பாக இந்தியா, ஈழம் ஆகிய நாடுகளில் பண்டைக் காலத்திலிருந்தே இது ஒரு செல்வாக்குள்ள வழிபாடாக வளர்ச்சி பெற்றது. வேறு எந்த நாட்டையும் விட இன்னும் வாழும் வழிபாடாக இந்நாடுகளில் இருப்பது இதன் பழமைக்கும் பாரம் பரியத்திற்கும் அசைக்க முடியாத சான்ருகும். சிந்துவெளி நாகரிகத்தில் செல்வாக்குள்ள வழிபாடாக இது காணப்படாவிட்டாலும் கூட அங்குள்ள முத்திரை ஒன்றில் ஒரு கடவுளின் பின்னுல் படமெடுக்கும் நாகமும், இரு பக்கங்களில் பக்தர்களும் சித்தரிக்கப்பட்டுக் காணப்படுவது இக்காலத்தில் நாக வணக்கமும் இவர்கள் வழிபாட்டம்சமாக விளங்கியது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இருக்குவேதகாலத்திலும் இது வழிபாட்டுப் பொருளாக விளங்கியது (Hopkin E. W. 1902) இவ்வாறு பிட்பட்ட வேதங்கள், பிராமணங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றில் வரும் சான்றுகள் ஆரியருக்கு முந்திய வழிபாடாகிய நாகவழிபாடு காலகதியில் ஆரியவழி பாட்டுடன் சங்கமித்தது தெளிவாகின்றது. பௌத்த இலக்கியம், ஜாதகக்கதைகள், கலை ஆகியவற்றில் இவ்வழிபாடு பெற்றிருந்த சிறப்புப் பேசப்படுகின்றது.

ஈழவரலாற்று நூலாகிய மகாவம்சத்திலும் நாகர் பற்றிய குறிப்புகள் புத்தர் இந்நாட்டிற்கு மேற்கொண்ட விஜயங்களை குறிப்பிடும் போது காணப்படுகின்றது. (M. V. 1) புத்தர் தமது இரண்டாவது விஜத்தின்போது நாக தீபத்தில் நாக அரசர்களாகிய மகோதர சூளோதர ஆகியோரது சண்டையை நிறுத்தி பலகோடி நாகர்களைத் தமது மதத்திற்கு மாற்றியதாகக் குறிப்புண்டு. புத்தர் இந்நாட்டிற்கு மேற்கொண்ட மூன்ருவது விஜயமும் களனிப்பகுதியில் ஆண்ட நாக அரசனின் அழைப்பின் பேரிலேயே மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படுகிறது. இவ்வாறு இப் பௌத்த இலக்கியங்கள் விளிக்கும் 'நாக தீப' என்ற பிராந்தியம் இன்று 'நயினை தீவை'க் குறித்து ஒரு சிறு பிராந்தியமாகக் காணப்பட்டாலும் ஆதியில் தற்கால வடமாகாணம், அநுராதபுர மாவட்டத்தின் வடபகுதி, புத்தளமாவட்டம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. இப்பிராந்தியத்தில் வாழ்ந்தவர்களாக நாகர்கள் குறிப்பிடப்பட்டாலும், மகாவம்சம் இவர்களை 'அமானுஷ்யர்கள் — மனிதரல்லாதவர்கள் என விளித்துள்ளது. இதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. மகாவம்ச ஆசிரியர் கருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்படி இந்நாட்டுக்கு முதல் கால்வைத்த மனிதர்கள் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியரே என்பதே. இதனுல் ஏனையோர் இவர்களுக்கு முன்பு இங்கு வாழவில்லை என்பது இவரது விளக்கமாகும். இருந்தும் அண்மைக் காலத்தொல்லியல் ஆய்வுகள் மகாவம்ச ஆசிரியரின் கருத்து பொருத்தமற்றது என்பதனை எடுத்துக் காட்டியுள்ளன. ஆரியர் குடியேற்றத்துக்கு எதுவித தொல்லியல் ஆதாரங்களும் காணப்படவில்லை. (Sitrampalam S. K. 1980) அத்தோடு நாகதீபத்தில் வாழ்ந்த மக்கள் அமானுஷர்கள் அல்ல: உண்மையில் மனிஷர்களே என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் இப்பிராந்தியத்திலடங்கும் புத்தளமாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு, மன்னுர் மாவட்டத்திலுள்ள மாந்தை, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் அமைகின்றன. சிற்றம்பலம் சி. க. 1982). இதனுல் ஈழத்தில் வாழ்ந்த மக்களே நாகர் என்பது புலப்படும், நாக வணக்கத்தில் ஈடுபட்டதால் இவர்கள் நாகர் என அழைக்கப்பட்டிருக்கலாம். ஈழத்து ஆதி பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் பெயர்ப்பட்டியலில் நாக இளவரசர்கள், நாகர்கள் பௌத்தத்தைத் தழுவியது குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோன்று மகாவம்சம் தரும் மன்னர்களின் பெயர்ப்பட்டியலும் பலர் நாகர் எனப் பெயர் பெற்றிருந்ததும் காணப்படுகிறது. இவ்வாறு நோக்கும் போது இவர்கள் இங்கு வாழ்ந்த திராவிட மக்களே என்பது புரிகிறது. அண்மைப் பிராந்தியமாகிய தமிழ்நாடு. பண்டைய சேர நாடாகிய தற்கால கேரளம் ஆகியவற்றில் நாக வணக்கம் செல்வாக்குப் பெற்றுக் காணப்பட்டது. ரொலமி என்ற அறிஞர் இங்கு நிலவிய இவ்வணக்கத்தை அய்ஓய் என்ற நாமம் கொடுத்து அழைக்கிருர். இவ் "Aioi" உண்மையில் அகி (பாம்பு) என்ற பதத்திலிருந்து விரவி வந்தது என்பர் அறிஞர். கேரள நாட்டில் இன்றும் ஒவ்வொரு வீட்டில் தென்மேற்கு மூலையிலும் பழைய எகிப்திய நாகரிகத்தில் இருந்தது போன்று பாம்புகள் வாழ்வதற்கு இடமளிக்கப் பட்டுக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பாம்பைக் கொல்லமாட்டார்கள்.

தமிழ்நாட்டில் காவிரிப்பூம் பட்டினம் முன்பொருகால் நாகர்கள் தலைநகர் பட்டினமாக இருந்தது என்ற மரபுண்டு. மணிமேகலையில் நாகர்கள் பற்றிய செய்தி காணப்படுகிறது, நெடுங்கிள்ளி என்ற இளவரசன் நாககன்னி மீது கொண்ட காதல் பற்றிய செய்தி, சாதுவன் என்ற வணிகன் நாகநாடு அடைந்தது பற்றிய செய்தி, பத்துப்பாட்டில் திரையர் என்பவர் நாக – சோழ வழித்தோன்றல் போன்றவை நாகநாடு, நாகர் ஆகியோர் நாக வழிபாட்டில் ஈடுபட்ட மக்கள் கூட்டம் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. நாகபுலவர்கள் பற்றிச் சங்க நூல்கள் பேசுகின்றன. இவற்றுள் ஈழத்துப் பூதந்தேவனுர், போன்ருேர் நம் நாட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நோக்கும் போது ஆதித் தமிழகம் – ஈழம் ஆகிய பகுதிகள் நாக வழிபாட்டில் ஒருகால் திளைத்திருந்தது புலனுகிறது. ஈழத்தில் மன்னர்கள் பெயர்ப் பட்டியலில் நாக என விகுதி கொண்ட மன்னர்கள் இருந்தது போன்று தென்னிந்தியாவிலும் இத்தகைய மரபு இருந்தது. சாதவாகன, மூவேந்தர், பல்லவ வம்சங்கள் இத்தகைய தொடர்புகள் காணப்படுவது இரு பிராந்தியங்களிலும் வேரூன்றியிருந்த நாக வழிபாட்டின் சிறப்பைக் காட்டுகின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இவ் வணக்கம் இந்தியாவிலும் மிகப் பழைய வணக்கமாகும். பௌத்தத்தின் எழுச்சியோடு நாக வணக்கம், அம் மதத்துடன் சங்கமமாகியது. நாகர்கள், புத்தருக்குப் பல உதவிகளைப் புரிந்தவர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். வட இந்தியாவிலுள்ள பௌத்த மதத்தின் ஆரம்பகாலக் கலைக்கூடங்களாகிய பாறூற், சாஞ்சி ஆகிய இடங்களில் நாக உருவங்கள், பாம்பு வடிவிலும், மனித வடிவிலும் இவற்றை அலங்கரிப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. தென்னிந்திய அமராவதிக் கட்டிடக்கலையிலும் இவ்வாறு சித்தரிக்கப்படுவதோடு நாகர்கள் வாயிற் காவலர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு நோக்கும் போது பௌத்தமதம் நாக வழிபாட்டை வென்ற நிலையில் இச்சிற்பங்கள் அமைகின்றன. பொதுவாக ஒரு மதம் இன்னொரு மத்தை வெல்லும்போது வெல்லப்படும் மதத்தை அழித்தல் அல்லது அதனைத் தன்வயப்படுத்தல் நியதி. இவ்வாறே பௌத்தமும் நாக வழிபாட்டை, நாக வழிபாட்டிலீடுபட்டோரைத் தன் வயப்படுத்தி மதம்மாற்ற அவர்கள் ஈற்றில் தனித்துவத்தை இழந்தனர். இத்தகையதொரு நிலையை இந்தியாவில் மட்டுமன்றி ஈழத்திலும் காணலாம். ஈழத்திலுள்ள ஆரம்பகால பௌத்த கட்டிடங்களிலே நாகர்கள் துவாரபாலகர்களாகக் காணப்படுவதோடு, மனித உருவில் ஐந்து தலை, மூன்று தலை நாகம் தலைக்குப் பின்னால் படமெடுக்கும் நிலையிலும் காணபடுகிறது. இத்தகைய வடிவங்களை அனுராதபுரத்திலுள்ள சேதவனராக, தூபராம போன்ற கட்டிடங்களில் மட்டுமன்றி பொலநறுவையிலுள்ள வட்டடாகே, திருகோணமலைக்குக் கிட்ட உள்ள திரியாய் போன்ற இடங்களிலும் காணலாம்.

பௌத்தத்தைப் போன்று, பௌத்தத்திற்கு முந்திய இந்து மதத்திலும் நாக வழிபாடு சங்கமித்தது. சிவனின் அணிகலமாக நாகபாம்பு விளங்குகிறது. விஷ்ணு அறிதுயில் கொள்வது ஆதிசேஷன் மேலல்லவா? இவ்வாறுதான் நயினையிலும் வழக்கிலிருந்த நாகவழிபாடு ஈஸ்வரி (தாய்) வழிபாட்டுடன் சங்கமித்தது எனலாம். நயினையைப் போன்று வடபால் உள்ள நாகர் கோயிலிலும் நாகவழிபாடு, ஈஸ்வரன் (சிவ) வழிபாட்டுடன் சங்கமித்ததைக் காண முடிகிறது. எந்த ஒரு மதத்திலும் குறிப்பிட்ட இடங்களில் ஒரு குறிப்பிட்ட வழிபாடு முக்கியத்துவம், முன்னணி நிலையெய்த ஏனைய வழிபாட்டம்சங்கள் அவற்றுடன் சங்கமிப்பது நியதி என்ற வரலாற்று உண்மைக்கேற்ப நாகதீபத்தின் பண்டைய வழிபாட்டின் எச்ச சொச்சங்கள் யாவும் சிவ, ஈஸ்வரி வழிபாட்டுடன் சங்கமமாயின எனக் கொண்டால் பிழையாகாது. இத்தகையதொருநிலை வடபகுதியில் ஈழத்தின் வரலாற்றின் ஆரம்ப காலத்திலேயே நடந்திருக்கலாம்.

ஈழத்தின் வட பகுதியும் நாட்டின் ஏனைய பகுதிகள் போன்று நாகரிகம் படைத்த பகுதியாக விளங்கியது வரலாற்று உண்மை. இதன் மையப் பிரதேசமாக வழுக்கை ஆறு விளங்கியது: இதிலமைந்த கந்தரோடை நாகரிகம் கி. மு. 6-ம் நூற்றுண்டுக்குக் குறையாமல் இப்பிரதேசத்தில் வேரூன்றி விட்டது என்பதை அண்மைக்காலத் தொல்லியற் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. வழுக்கை ஆற்றின் களிமுகத்திலமைந்த ஆனைக்கோட்டையில் கிடைத்த மனித எலும்புக் கூடும், வெண்கல முத்திரையும் இந்நாகரிகத்தை உருவாக்கியவர்கள் திராவிடர்கள் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. (சிற்றம்பலம் சி, க. 1982) இதே காலத்தில் தீவுப்பகுதிகளும் வணிபத்துறையில் முக்கியம் பெற்றிருந்தன. விசேடமாகச் சங்குக் குளிப்பு இப்பகுதிகளில் நடை பெற்றிருக்கலாம். சுகித்த ஜாதக என்ற நூலில் காவிரிப்பூம் பட்டினத்திற்கும் காரைநகருக்குமிடையே இருந்த தொடர்பு பேசப்படுகிறது. கரைநகரிலுள்ள களபூமியில் கிடைத்த சான்றுகள் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்பே தீவுப்பகுதிகள் முக்கியம் பெற்றிருந்தன என்பதும், இவற்றுள் இன்றும் வணிபத்துறையில் இம்மக்கள் பெயர் பெற்றுக் காணப்படுவது போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் சிறப்புற்றிருந்தனர் என்பதும் தெளிவாகிறது. பிற்பட்ட காலத்தில் அல்லைப்பிட்டியில் கிடைத்த சீனமட்பாண்டங்கள், நயினையில் கிடைத்த முதலாம் பராக்கிரமபாகுவின் தமிழ்க் கல்வெட்டும் வாணிபத்துறையில் இப் பிராந்தியம் பெற்ற செல்வாக்குக்கு அசைக்க முடியாத சான்றுகளாகும். சங்க நூலாகிய பட்டினப்பாலை ஈழத்துணவும் காழகத் தாக்கமும் எனப் பேசுகிறது. இக் குறிப்பு ஈழத்திலிருந்து காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்த உணவுப் பொருட்களையே குறித்து நின்றது. கிறிஸ்தவ சகாப்தத்திற்குப் பல நூற்றுண்டுகட்கு முன்பே ஈழத்தின் வடமேற்றிசையில் அமைந்த மாந்தைத் துறைமுகம் சிறப்புப் பெற்றது. முத்துக் குளிப்புக்குப் பேர் பெற்ற இடமாதலால் தமிழக மக்கள் பலர் நம் நாட்டை நாடிவரத் தயங்கவில்லை. இவ்வாறே வடபகுதியில் ஜம்புகோளப் பட்டினமும் முக்கிய துறைமுகமாக விளங்கியது. இவ்வாறு வட, வடமேற்கு பகுதிகள் வியாபாரத்தில் முக்கிய நிலையங்களாக வரலாற்றின் ஆரம்பகாலத்திலேயே எழுச்சிபெற்று விட்டன எனலாம். இவ்வர்த்தகத்தில் தமிழ் வணிகர் பங்கும் கணிசமானது. வவுனியாவிலுள்ள எறப்பொத்தாளு என்ற இடத்திலுள்ள கி. மு. 2-ம் நூற்றுண்டைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுக்கள் இரண்டில் தமிழ் வணிகன் விசாகன் பற்றிய குறிப்பு வருகிறது இதே காலத்தில் அனுராதபுர நகரத்தில் தமிழ் வணிகர்கள் நிலைபெற்றிருந்ததைப் பிராமிக் கல்வெட்டொன்று பேசுகிறது. மகாவம்சம் கூட கி. மு 3-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் சேனன், குட்டிகன் என்ற தமிழ்க் குதிரை வியாபாரிகள் அனுராதபுரத்திலுள்ள ஆட்சியாளரைக் கலைத்து 22 வருடம் ஆட்சி செய்தனர் எனக் குறிப்பிடுகிறது. அடுத்த நூற்றுண்டில் எல்லாளன் என்ற தமிழ் மன்னன் 44 வருடம் இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டான் எனவும் மகாவம்சம் குறிப்பிடுகிறது. இந்துவாகிய இவன் பௌத்த மதத்தையும் பேணினுன் எனவும் இந்நூல் குறிக்கிறது. எனவே தமிழ் மக்கள் வணிகத்துறையில் பெற்ற செல்வாக்கு இந்து மன்னர் ஆதரவு கிறிஸ்தவ சகாப்தத்திற்கு பல நூற்றுண்டுகட்கு முன்பே வடபகுதியில் பிரதான இந்து ஆலயங்கள் அமைக்க வழி வகுத்தது எனக் கூறினல் பிழையாகாது.

இத்தகைய பின்னணியில் தான் யாழ்ப்பாண வைபவமாலையில் வரும் செய்தி ஒரு கட்டுக்கதை அல்ல, ஆனல் பழைய இந்து ஆலயங்கள் இப்பகுதியில் சிறந்து விளங்கிய ஒரு மரபையே குறிக்கின்றது என எண்ணத் தூண்டுகின்றது. வடபகுதியில் சிவன், மாயோன், முருக வழிபாட்டிற்குரிய ஆதாரங்கள் காணப்படுவதால் நிச்சயமாக தாய் (ஸ்வரி) வழிபாடும் இப்பகுதியில் நிலைத்திருக்க வேண்டும் என்பது தர்க்க ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மை. இத்தகைய ஸ்வரிவழிபாட்டிடங்களில் யாழ்ப்பாணவைபவமாலை 'திருத்தம்பலேஸ்வரி' ஆலயம் ஒன்றை மட்டுமே குறித்தது. இதனல் ஏனைய ஸ்வரி ஆலயங்கள் இங்கு இல்லை என்பது பொருளல்ல. சங்கத் தமிழர் சமய நெறியில் தாய் வழிபாடும் முக்கியம் பெற்றிருந்தது. இன்றும் மறைந்தும் மறையாமலும் தீவுப்பகுதிகளில் விசேடமாக வழக்கிலிருக்கும் சங்கத் தமிழ்ச் சொற்கள் பண்டைய காலத்தில் ஈழம் - தமிழகம் ஆகியவை கலாச்சார ரீதியில் நெருங்கி உறவாடியதை எடுத்தியம்புகின்றன. இவ்வாறு வணிக, சமயச் சான்றுகள் தீவுப்பகுதிகளும் வரலாற்றின் ஆரம்பகாலத்தில் அதாவது பௌத்தம் இங்கு கால்கொண்ட போது முக்கியம் பெற்றிருந்ததை எடுத்துக் காட்டுகின்றன. மணிமேகலையில் நாகநாடு பற்றியும் நாகநாட்டு இளவரசிகள் பற்றியும் வரும் செய்திகளும் இப்பிராந்தியத்தைக் குறித்திருக்கலாம். மணிமேகலை குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிபல்லவம்கூட இப்பிராந்தியத்திலே தான் உண்டென்பர் சிலர்.

(நயினை நாகேஸ்வரி ஆலயத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடும் ஐதீகங்களில் சிலப்பதிகாரத்தில் வரும் 'மாநாய்கன்' குறிப்பிடப்படுவது ஆழச் சிந்திக்கத்தக்கது. இதை வெறும் ஐதீகம் எனச் சில அறிஞர் உதறித் தள்ளினு லும் கூட, இக் கோயில் வணிகரால் ஸ்தாபிக்கப்பட்டது என்ற மரபை இது பிரதிபலிக்கின்றது என்ற வரலாற்று உண்மையை நாம் மறைக்க முடியாது.) ஏற்கனவே கிறிஸ்தவ சகாப்தத்திற்குப் பல நூற்றுண்டுகட்கு முன்பே இப் பிராந்தியம் வணிபத்துறையில் பெற்ற சிறப்புப் பற்றியும், இதில் தமிழ் வணிகர் பங்கு பற்றியும் இங்கு வேரூன்றிய இந்து மரபு பற்றியும் கண்டோம். இத்தகைய பெருமக்களில் சிலரால் கிறிஸ்து பிறப்பதற்குச் சில நூற்றுண்டுகட்கு முன்பாவது இக் கோயில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கலாம் என்ற கருத்து தர்க்க ரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகும். துர் அதிஷ்டவசமாக அக்காலக் கோயில்கள் மிக எளிய முறையில் அமைக்கப் பெற்றிருந்ததாலும், அழியும் பொருட்களால் அமைக்கப்பட்டதாலும் இவை பற்றி நாம் அறியமுடியவில்லை. பலமுறை இக் கோயில் இடிக்கப்பட்டிருக்கலாம்; திருத்தப்பட்டிருக்கலாம் எனினும் மத வெறியர்களாகிய போத்துக்கேயர் ஈழத்தின் மிகமிக பிரதான கோயில்களை இடித்தது வரலாற்றுச் செய்தி. இவற்றுள் திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம் ஆகியன அடங்கும். இப்பட்டியலில் நயினை நாகபூஷணி அம்மனும் அடங்குவது மேற்கூறிய கோயில்களைப் போன்று இக்கோயிலும் வரலாற்றுப் பெருமை பெற்றிருந்ததற்காகவே போத்துக்கேயர் இவ்வாறு இடித்தனர் எனக் கருத இடமுண்டு.

ஈழத்தின் வரலாற்றின் ஆரம்ப காலத்தில் பௌத்தம் இங்கு கால் வைத்தது, இக்காலம் கி. மு. 3-ம் நூற்றுண்டின் நடுப்பகுதியாகும். இக் காலத்தில் ஈழத்தை ஆண்ட மன்னன் தேவநம்பிய தீசனே. இவனுக்கு முன்பிருந்த மன்னன் முடசிவன். இவன் தேவநம்பிய தீசனின் தந்தை. முடசிவன் காலத்தில் மகிந்தன் பௌத்தத்தை ஈழத்திற்குக் கொண்டுவர எண்ணியும்கூட. அவன் காலச் சூழ்நிலை பௌத்தம் கால்கொள்ள வசதியாக அமையாததால் தனது பயணத்தை தேவநம்பியதீசன் அரசுகட்டிலேறு மட்டும் பின் போட்டான் என மகாவம்ச ஆசிரியர் குறிப்பிடுகிருர். (M,V. xiii) மகாவம்ச ஆசிரியர் குறிப்பிடும் சூழ்நிலை என்ன? சிவ வணக்கத்தில் திளைத்த முடசிவன் காலத்தில் இந்துமதம் இங்கு செல்வாக்குற்றிருந்த தென்பதே. இத்தகைய சூழ்நிலையில் வடபகுதியிலும் இந்து ஆலயங்கள் சிறப்புப்பெற்றிருந்தன, எனக் கொண்டால் பிழையாகாது. இவற்றின் வளர்ச்சிக்கு வணிகப்பெருமக்கள் தாராளமாக உதவி இருக்கலாம். இதனுல் ஸ்வரி (தாய்) வழிபாடும் ஏனைய சிவன் மாயோன், முருகன் வழிபாடுகள் போன்று இப்பகுதியில் பௌத்தம் கால் கொள்ளும் காலத்திலேயே சிறந்து விளங்கி விட்டது எனக் கொண்டால் பிழையாது.

எவ்வாருயினும் பண்டைய நாகதீபத்தின் - எச்சசொச்சமாக மட்டும் விளங்குவதால் நயினுதீவு முக்கியம் பெறவில்லை. பண்டைய நாக வழிபாட்டின் எச்சமாக மட்டுமன்றி, நாக, ஸ்வரி வழிபாட்டின் சங்கமத்தின் சின்னமாக விளங்குவது இதன் பழமைக்கும் பாரம்பரியத்திற்கும் அசைக்கமுடியாத சான்று. இத்தகைய சான்றுகள் கி. மு. 3000 ஆண்டளவில் கிறீற் நாகரிகத்தில் – மத்தித்தரைக் கடலில் - திளைத்திருந்த நாகத்தை சூடியிருக்கும் பெண் – தெய்வ வழிபாட்டை நாகபூஷணி வழிபாட்டை எம் மனக் கண்ணே நிறுத்துகிறது. நாகதீவு மகாவம்சத்தில் மட்டும் குறிப்பிடப்படவில்லை. மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற காவியங்களிலும் பேசப்படுவதோடு சங்கத் தமிழ்ச் சொல் வழக்கைப் பேணிய பிராந்தியமாகவும் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சிவசக்தி

# எங்கள் குலதெய்வம்

**கந்தசாமி கனகசபாபதி** பொருளாளர், அறங்காவலர் சபை

ஈழத் திருநாட்டின் வடபால் அமைந்து, மணித்தீவு என்னும் பெயர் பெற்றது பணிபல்லவம். அலைகடலின் நடுவான் உள்ள மணித்தீவினிலே கோயில் கொண்டு எழுந்தருளி அங்கு வாழும் அடியவர்களின் குறைபோக்கி அருள்பாலித்துக் கொண்டு இருக்கின்றாள் அன்னை நாகபூஷணி.

உலகின் பல பாகங்களிலும் சக்தி வழிபாடு காணப்படுகிறது. அத்தகைய சக்தி வழிபாட்டுக்குரிய ஸ்தலங்கள் பல ஈழத்திலும் உள்ளன. ஈழத்திலுள்ள புராதன சக்தி வழிபாட்டுத் தலங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது நயினையின் கண் உள்ள தலமே. இது அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் ஒன்றான புவனேஸ்வரி பீடமாக விளங்குகிறது. புண்ணிய ஸ்தலமாக விளங்கும் இந் நயினாதீவு மூர்த்தி, தலம், தீர்த்தம் என அத்தனையும் அமையப்பெற்ற ஓர் அற்புதத் திருத்தலமாகும்.

மண்ணினின்றும் தான்தோன்றியாகத் தோன்றிய அம்பிகையின் திருப்படிமத்தை இந்தியாவிலிருந்து வந்த அந்தணர் பூசித்து வந்தனரென்றும், அக்காலத்தில் இத்தீவினுக்கு அருகிலுள்ள புளியந்தீவில் இருந்து நாகமொன்று கடல் கடந்து அம்பாளைத் தரிசிக்க தினந்தோறும் வருவதென்றும், ஒருநாள் நாகம் பூவினை எடுத்துக்கொண்டு கடலில் நீந்தி வருவதை பறந்து வந்த கருடனென்று கண்டதென்றும், கருடனைக் கண்ட நாகம் கடலினுள் நீரின் மேல் ஓங்கி வளர்ந்த கற்பாறை மேல் அமர்ந்திருந்தது என்றும் கருடனுக்கும் நாகத்துக்கும் இடையே பெருஞ்சண்டை மூண்டதென்றும் அவ்வேளையில் அவ்வழியால் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து வாணிப நோக்கமாக கப்பலில் இலங்கை வந்த மாநாய்க்கன் என்னும் வணிகன் அவற்றின் பூசலைக்கண்டு போரைத் தவிர்த்து நாகத்தைக் காப்பாற்ற எண்ணினான் என்றும், நாகம் விபரம் கூற வணிகன் அதனைக் கொல்லாது விடுமாறு வேண்டினான் என்றும், அப்போது கருடன் வணிகனை நோக்கி, "ஐயா பெரு வணிகரே அம்பாள் மீது உமக்கு பக்தி இருக்குமெனில் கப்பலில் உள்ள பொருள் அனைத்தையும் அம்பாள் ஆலயத்துக்களிப்பீரா; அவ்வாறு செய்யின் நானும் இதனைக் கொல்லாது விடுகின்றேன்" என்றது. வணிகனும் தனது கப்பலில் இருந்த திரவியம் முழுவதையும் அம்பாள் ஆலயத்துக்கே வழங்கினான் என்றும், அவ்வணிகன் வழங்கிய பொருளே அம்பாள் ஆலயம் முதன்முதலில் சிறப்புற அமைப்பதற்கு பேருதவியாக இருந்தது என்பதற்கும் சான்றுகள் பலவுள.

இவ்வாறு அமைக்கப்பெற்ற ஆலயமானது ஒல்லாந்தர் காலத்தில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. பின்னர் அவ்வூர் அம்பாள் அடியவர்களின் பக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டினுல் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டு புனருத்தாரணம் செய்யப்பட்டது.

ஒரு கோவிலைப் புதிதாக கட்டுவதிலும் பார்க்க அமைக்கப்பட்ட கோவிலைத் திருத்தி புனருத்தாரண வேலைகளை மேற்கொண்டு குடமுழுக்கு செய்வதே மேலானது. அவ்விதிக்கமைய எமது ஆலயமும் புனருத்தாரண வேலைகளை மேற்கொண்டு இன்று (28-8 83 ஞாயிற்றுக்கிழமை) குடமுழுக்கினை மேற்கொள்கிறது.

இலங்காபுரியின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் பன் நூற்றுக் கணக்கில் நாடோறும் அம்பாளைத் தரிசிக்க வந்த வண்ணமே இருக்கின்றனர். மீனுனது தனது முட்டைகளை முத்துக்களைகோர்த்த வண்ணம் போல் அழகாக இடும். தாய் மீன் தன் கண்களால் முட்டைகளைப் பார்க்கும் மீனின் கண்களிலிருந்து ஒளி முட்டைகள் மீது பட்டவுடன் முட்டைகள் வெடித்து குஞ்சுகள் வெளிப்படும். அதேபோல அன்னையானவள் தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு தனது ஞானக் கண்களால் அருள் பாலித்த வண்ணமே இருக்கிறுள்.

(வருடந்தோறும் ஆனி மாதத்தில் வரும் மகோற்சவ காலங்களில் அன்னையை தரிசித்து அருள் பெற்று உய்ய பல்லாயிரக்கணக்கான அடியார்கள் வருகை தந்த வண்ணம் இருக்கின்றனர். அடியவர்கள் தம் குறை கூறி நேர்த்திக் கடன் செய்து அம்பாளை வழிபட அன்னை அடியவர் குறை களைந்து அருள் பாலித்த வண்ணமே இருக்கிறுள். நேர்த்திக்கடன் பொருள்களில் மிகவும் சிறப்புவாய்ந்தது தொட்டிலும் பிள்ளையும். பாம்புமாம். இவ்வாறு இலங்கை மக்கள் மட்டுமன்றி இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, கனடா, இலண்டன், ஜேர்மனி, பிரான்ஸ் தேசத்து மக்களும் அம்பிகைக்கு நேர்த்திக் கடன் செய்த வண்ணமே இருக்கின்றனர்.)

இவ்வாறு அடியவர்களின் குறைகளையும் அன்னையின் பெருமை அளப்பரிது. அபிராமிப் பட்டரும்,

ஆத்தாளை யெங்க ளபிராம
வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்தாளைப்
புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங்குசமுங்
கரும்பு மங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழு
வார்க்கொரு தீங்கில்லையே.

எனமிகவும் அழகாகக் கூறியுள்ளார். எனவே நாமும் எங்கள் குலதெய்வமாகிய அன்னையை வணங்கி இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வோமாக.

ஓம் சத்தி சத்தி யென்று சொல்லு
கெட்டசஞ்சலங்கள் யாவினையும் வெல்லு.

வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# மஹாயாக மண்டபம்

— பிரதிஷ்டா கிரியாகலாபமணி சிவஸ்ரீ. மு. பரமசாமிக்குரு —
(நயினை நாகபூஷணம்பிகை தேவஸ்தான பிரதம குரு, கோவையாதீனம்)

யாக மண்டபம் பஞ்சபூத ஸொரூபமாயிருக்கும். எவ்வாறெனில் மகாரம் - பூமி, ணகாரம் – அப்பு, டகாரம் - அக்நி, பகாரம் வாயு மகாரம் – ஆகாசம் இவ்வாறு மண்டபமென்பதற்கு பொருள்.

மண்டபமெங்கும் சாந்தியாதீத கலாஸ்ஸொரூபம். - பந்தக்கால்கள் பதாத்வா - மண்டபத்தின் நடு, வர்ணாத்வா - கும்பங்கள் - மந்திராத்வா ஓமத் திரவியங்கள் - தத்வாத்வா, மண்டபம் அமைந்திருக்குமிடம் புவனாத்வா, மண்டபத்திலுள்ள நான்கு வாயில்களும் நிவிர்த்தி முதல் சாந்தி வரையுள்ள கலாத்வா இவ்வாறு மண்டபம் ஆறத்வாவின் சொரூபமென்றறிந்து கொள்க.

ஆறத்வாக்களாவன:- மந்திராத்வா, பதாத்வா, வர்ணாத்வா, புவனாத்வா, தத்துவாத்வா, கலாத்வா என்பனவாம்.

அவற்றுள் மந்திரங்கள் பதினொன்று. பதங்கள் எண்பத்தொன்று. வர்ணங்கள் ஐம்பத்தொன்று. புவனங்கள் இருநூற்றிருபத்து நான்கு, தத்துவங்கள் முப்பத்தாறு கலை என்றறிந்து கொள்க. இவ்வாறு சைவபூஷணம் செப்புகின்றது.

தத்துவங்கள் முப்பத்தாறாகும். அவை பூதங்கள் ஐந்து தன்மாத்திரைகள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, அகங்காரம் புத்தி மனமென்னும் அந்தக்கரணங்கள் மூன்று, குண தத்துவம் ஒன்று வித்தியாதத்துவம் ஏழு, சிவதத்துவம் ஐந்து. இருநூற்றிருபத்து நாலு புவனங்களும் ஈஸ்வரனுக்கு உரோம ரூபமாயிருக்கின்றன.

வர்ணங்கள் ஈஸ்வரனுடைய தோல் ரூபமாக இருக்கின்றன. மந்திராத்வாவானது ஈஸ்வரனுக்கு இரத்த ரூபமாக இருக்கின்றது. பதாத்வானது ஈஸ்வரனுக்கு நரம்பாயும் ஊனுயுமிருக்கின்றது. முப்பத்தாறு தத்துவங்களே ஈஸ்வரனுக்கு சுக்கிலம் மச்சை எலும்புகளின் ரூபமாக விருக்கின்றது. இவ்வாறு கூறினமையால் ஈஸ்வரனுடைய சரீரம் - இரத்தம் எலும்பு முதலியவற்றால் செய்யப்பட்டதெனக் கருதக்கூடாது. ஈஸ்வரனுடைய தேகத்தில் எலும்பு – இரத்தம் ஊன்கள் சிறிதும் கிடையா. கண்ணாடியில் பிரதிபிம்பம் போலும் ஆகாசத்தில் இந்திரதனுஸ் போலும் ஈஸ்வரனுடைய சரீரமிருக்கின்றது. ஈஸ்வரனுடைய சரீரமானது ஜோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்வொரூபமாகச் சித்தித்துள்ளது. ஆயினும் இவ்வாறு கூறியது கலை களின் உள்ளடங்கிய அத்வாக்களின் கற்பனையாகும். கற்பனை தியானத் தின் பொருட்டுக் கொள்ளப்பட்ட தடித்த வடிவம்.

குடத்தைச் சுத்தமாக்கிச் சப்த தாதுக்களும் ஜீவன் உண்டாக்குவ தற்காகக் கும்பத்தின் அடியில் ஆன்மதத்துவத்தையும், அதிபதி பிரம்மாவையும் கும்ப நடுவில் வித் தியா தத்துவத்தையும் அதிபதி விஷ் ணுவையும் கும்பநுனியில் சிவதத்து வத்தையும் அதிபதி ருத்திரனையும் கும்பத்தில் வாமை முதலிய ஒன்பது சக்திகளையும் மூவினை நூலிற் சரஸ் வதி, இலக்குமி, ரௌத்திரி, ஆகி யோரையும், தூபத்தில் அர்ச்சினி சக்தியையும் தீர்த்தத்தில் கங்கை முதலிய புண்ணிய நதிகளையும் மத் தியில் வருணனையும், ரத்தினங்களில் வாமை முதலிய நவசக்திகளையும், தங்கத் தாமரைப் பூவில் பார்வதி பரமேஸ்வரரையும் வாசனை திரவி யங்களிற் சப்த மாத்ருக்களையும் அந்தக் கூர்ச்சத்தில் சரஸ்வதி - பார் வதி சகல தீர்த்தங்களையும் மாவிலை யில் கங்கையையும் தேங்காயில் ருத்திரனையும், வஸ்திரத்தில் கவசத் தையும் யக்ஞோபவீதத்தில் பஞ்சப் பிரம மந்திரங்களையும் பகிர் அலங் கார கூர்ச்சத்தில் முச்சக்திகளையும், சந்தணத்தில் சக்தியையும், சுகந்த மாலைகளில் திரியம்பகரரையும் பூஜிப்பதால் கும்பமானது ஸர்வ தேவ தாஸ்வரூபமாகிறது என்று ஆகமங்கள் கூறுகின்றன.

## கும்பம்

கும்பத்தின் சொரூபமாவது, கும்பத்தில் அர்ச்சிக்கப்படும் தேவ னுக்கு கும்பத்திலுள்ள மண் அனைத் தும் மாம்சமாகும். கும்பத்தின் மேல் பூசியிருக்கும் மண் ரத்தமா கும், உள்ளிருக்கும் தண்ணீர் மேதஸ் ஆகும். சுற்றியிருக்கும் நூல் எழு பத்தீராயிரம் நாடிகளாகவும் உள்ளே போடப்பட்ட இரத்தினங் கள் முதலியன சுக்கிலமாகவும் வஸ்திரம் தோலாகவும், மாவிலை சடையாகவும், தேங்காய் சிரசாக வும் கூர்ச்சம் சிகையாகவும், யக் ஞோபவீதம் பஞ்சப்பிரம மந்திரமா கவும் செபிக்கும் மந்திரம் பிராண னாகவும் அமைந்துள்ளன.

## ஆசனம்

யாக கும்பத்திலே ஆவாகிக்கப் படும் மூர்த்திக்கு உபவேதிகை அநந் தாசனமும் மஹாவேதிகை சிம்மா சனமும் நெல் யோகாசனமும் அரிசி பத்மாசனமும் எள் விமலாசனமும் நென் மலர் பிரணவாசனமுமாகும். பிருதுவி முதல் குடிலையீறாகிய முப் பத்தாறு தத்துவங்களும் பஞ்சாசன மாக அமைந்துள்ளன. நெல் தாமரை நாளத்தின் முட்களாகவும் அரிசி தாமரைப்பூ இதழ்களாகவும் பயறு தாமரைப் பொகுட்டாகவும் உழுந்து பீஜமாகவும் எள் கேசரங் களாகவும் பாவனை செய்யப்படுகின் றன.

## சிவாசனம்

பிருதுவி தத்துவ முதல் குடிலா சக்தியந்தமான முப்பத்தாறு தத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்களேயும் இருநூற்றிருபத்து நான்கு புவனங்களேயும் உறுப்புக்களாக உள்ளதும் - அநந்தாசனம், சிம்மாசனம் யோகாசனம் பதுமாசனம் விமலாசனம் என்னும் பஞ்சாசனங்களேயுடையதும் ஆகிய பெருமை வாய்ந்தது சிவமூர்த்திக்கு ஆசனமாகும்.

சிம்மாசனமாவது நாலு கோணத்தோடும் (சதுரஸ்ரம்) மாகவும் அநந்தாசனம் முக்கோணமாகவும் (த்ர்ச்யசிரம்) பத்மாசனம் வட்டவடிவமாகவும், விமலாசனம் அறுகோணமாகவும், யோகாசனம் எட்டு கோணமாகவும் அமைந்துள்ளது. வேதிகை விஸ்தாரத்திற்கு சம உயரம் பிரதிஷ்டையிலும் விஸ்தாரத்தின்பாதி உயரம் தீக்ஷை உத்ஸவங்களிலும் பிராயச்சித்தம் வாஸ்து சாந்தி முதலிய காரியங்களில் ஒரு முள உயரம் வேதிகையே போடத்தக்கது. மூலபீடம் எந்த ஆகிருதியாயிருக்கிறதோ அந்தப்படி வேதிகை கற்பித்தல் விசேஷம்.

கீழ்ப்பட்டிகையில் ஆமை வடிவாகவும் தாரிகாதிகளே நடுப்பட்டிகையிலும் இதற்குமேல் சுத்தமாயா ஸ்வரூபமாகிய எட்டிதழ்க் கமலமும் இதற்கு மேல் எட்டு நாகங்களும் இதற்குமேல் எட்டு சிங்கங்களும் தர்மம் முதலியவைகள் கண்டத்தின் கம்பத்திலும் யுகங்கள் ஊர்த்துவ பட்டிகையிலும் இதற்குமேல் மூன்று விதங்களும் இதில் தாமரை இதழும் இந்தத் தாமரைப் பூவில் நடுவில் சிவாசனமும் சொல்லப்படுகிறது. வேதிகை ஊர்த்துவ பட்டிகை அதோபட்டிகையோடு கூடியதாய் இருத்தல் வேண்டும்.

### யாகசாலேப் பூஜை

யாகசாலா என்னும் சொல்லுக்கு பொருள் - யாகசாலா என்பது யகாரம் - யாகத்தையும் ககாரம் செல்லுதலேயும், சகாரம் சுகத்தையும் லகாரம் லயத்தையும் குறிப்பதால் யாகசாலே என்ற சொல்லுக்கு ஞானயாகத்தால் லயஸ்தானத்தில் சுகத்தின் பொருட்டுச் செல்வது என்று பொருளாகும். எனவே ஞான யாகம் செய்தற்குரிய ஸ்தானம் யாகசாலேயாகும். யாகசாலே கலாமயமாக விளங்குகிறது. நிவிர்த்தி முதலிய நான்கு கலசமும் இவைகளுக்கு இரு புறங்களிலும் நந்தி முதலிய எண்மர் வாயில் காப்பாளராகவும் கிழக்கு முதல் எட்டுத் திக்குகள் கீழ் - மேல் ஆகிய பத்துத் திக்குகளில் இந்திரன் முதல் பிரமன் விஷ்ணு ஈறுக தெசலோக பாலகர்களும் அக்கினிக்கு வடக்கில் சிவ சூர்யனும் நிருதிக்கு கிழக்கில் யாக பலனேத்தரும் பிரமனும் வாயுவுக்கு தெற்கில் மஹாலட்சுமியும் வாயுவின் வலப்புறத்தில் யாகத்தில ஏற்படும் விக்னங்களே நீக்கும் விநாயகரும் ஈசானத்திற்கு மேற்கில் எதையும் உத்தரவு கேட்டுச் செய்ய சதாசிவம் முதல் (சப்த) ஏழு குருமூர்த்திகளேயும் பூஜிப்பதற்கு இருபத்தேழு கலசங்கள் வைத்து ஞானவாள் ஏந்தியபடி யாகேஸ்வரன் - யாகேஸ்வரியையும் கலசத்தில் அமைத்து ஒன்பது குண்டங்களோடு விளங்குகின்றமையால் யாகசாலே கலாமயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவாகனம்

ஆவாகனமாவது பூஜையின் பொருட்டுச் சிவபெருமானை லிங்கம் முதலியவற்றில் வரவழைத்து அபிமுகமாகச் செய்வதென்னும் பாவனையாகும். எங்கும் வியாபித்திருக்கும் கடவுளை ஆவாகனம் செய்வது எங்ஙனமெனில்: விறகு முழுவதும் நிறைந்திருக்கும் நெருப்பைக் கோலினாற் கடைய அது ஓரிடத்தில் பிரகாசித்தல் போல எங்கும் நிறைந்திருக்கும் கடவுளைச் சிரத்தையுடன் ஓரிடத்தில் அழைத்து அபிமுகமாகச் செய்வதென்க.

## ஆவாகன முறை

இன்ன விதமாயிருப்பவரென்று மனத்தால் அனுமானஞ் செய்வதற்கு முடியாதவராயும் இன்னவிதமாயிருப்பவரென்று நிச்சயிக்க முடியாதவராயும் சமானமில்லாதவராயும் நோயற்றவராயும் சூக்குமராயும் எல்லாவற்றிலும் நிறைந்தவராயும் நித்தியராயும் சலனமற்றவராயும் குறைவற்றவராயும் பிரபுவாயும் இருக்கும் உம்மை, உம்மால் ஆணை செய்யப்பட்டவனாய் மந்திரத்தால் நமஸ்கரிக்கிறேனென்று தெரிவித்துக் கொண்டு சரீரத்தை நிமிர்ந்ததாக வைத்து - மனம் கண் என்னுமிவற்றின் வியாபாரத்தைத் தடுத்து இடையென்னும் நாடியால் வாயுவைப் பூரகஞ் செய்து கும்பித்து இருதயத்தில் புஷ்பங்களால் 'நிரம்பப் பெற்ற கைகளால் அஞ்சலி செய்து திடமாக ஆவாகன முத்திரை செய்து தன்னுடைய சரீரத்துள் மூலாதாரத்திலிருக்கும் மந்திரமயமான பரமசிவனுடையஜோதியை ஆகர்ஷணஞ் செய்து மூலாதாரம் முதற் கொண்டு விளங்கும். ஹகாரத்தைக் கடந்து இருதயம் வரை கொண்டுபோய், இருதயம் கழுத்து தாலு முதலிய தானங்களிலிருக்கும் பிருதுவி முதலிய பாசக் கூட்டங்களையும் பிரமன் முதலிய காரணேச்வரர்களுடன் கூடின ஔகாரம் முதலிய பன்னிரு கலைகளையும் முறையே அவ்வவற்றின் அநுசந்தானத்தால் கடந்து துவாதசாந்தம் வரையுச்சரித்துக் கொண்டு புஷ்பாஞ்சலியையும், துவாதசாந்தம் வரை கொண்டுபோய் மந்திர ரூபமான ஜோதியை துவாதசாந்தத்திலிருக்கும் பரமசிவனுடன் சேர்த்து இடைவிடாது அமிர்தத்தைப் பெருக்கும் பிந்து ரூபமான ஜோதியை அங்கிருந்து கொண்டு வந்து புருவ மத்தியிலிருக்கும் சிவமண்டபத்தில் சிரமபரிகாரஞ் செய்ததாகப் பாவித்து ஆயிரஞ்சரற்கால சந்திரன் போலும் பாவித்து இருதயத்தில் அஞ்சலியைத் தரித்துக் கொண்டு பிங்கலை நாடியால் வாயுவை ரேசகஞ்செய்து வாயுவுடன் பரமசிவனுடைய ஜோதியை புஷ்பாஞ்சலியின் நடுவேயடைந்ததாகப் பாவனை செய்து ஹாம், ஹௌம் சிவாயநம என்று சொல்லிக் கொண்டு சதாசிவருடைய பிரமரந்திரத்தில் அந்தப் புஷ்பாஞ்சலியைச் சேர்க்க வேண்டும்.

## ஆவாகனம் இருவகைத்து

பிரதிஷ்டா காலத்திலே சர்வசங்கார காலமளவாக சிவலிங்கத்திலே சாந்நித்திய மாதற்காகச் செய்யப்படும் ஆவாகனம் சிற்பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசாவாகனம் எனவும் தினந்தோறும் பூஜா காலத்தில் சிவலிங்கத்தில் எழுந்தருளியிருக்கும் சதாசிவ மூர்த்தியினுடைய நான்கு முகங்களிலும் வியாபித்திருக்கும் ஈசானமுகம் தன்னைப் பார்க்கும்படி செய்வது அபிமுகீகரண ஆவாகனம் எனவும் ஆவாகனமிருவகைப்படும். மூலமந்திரத்தினுல் தரிசிக்கப்பட்ட பரிபூரணத்தை ஆன்மாவானது சிவப்பிரகாசமாகிய அருளினுல் அறிந்து அதில் அழுந்துதலே இதன் உண்மையாகும்.

## நவகுண்டம்

இறைவனுடைய இருவகைப் பட்ட நிலைகள் சொரூபம் தடத்தம் எனப்படும். சொரூபமென்பது மனம் வாக்குக் காயங்களுக்கு அப்பாற் பட்ட நிலையாகும். தடத்தம் என்பது மனம் வாக்குக் காயங்களுக்கு உட்பட்டவனுக இறைவன் நின்று அருள்புரியும் நிலை — இந்த உலகம் நிலம் நீர் நெருப்பு காற்று நீள் விசும்பு நிலா பகலோன் இயமானன் என்னும் எண்வகைப் பொருள்களிலும் கலந்து இறைவனை எண்வகை உருவில் வைத்து வணங்க வேண்டுமென்பது.

நாவுக்கரசர் திருத்தாண்டகம்

இருநிலனுய்த் தீயாகி நீருமாகி
இயமானனு யெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறுகி
யாகாச மாயட்ட மூர்த்தியாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும்
பிறஉருவுந் தம்முருவுந் தாமேயாகி
நெருநலையா யின்றுகி நாளையாகி
நிமிர்புன் சடையடிக ணின்றவாறே.

எனவும்

மணிவாசகர் திருவாசகம்

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு
நிலரப்பக லோன்
புலனுய மைந்தனே டெண்வகையாய்ப்
புணர்ந்து நின்முன்
உலகேழெனத் திசை பத்தெனத்
தாளுெரு வனுமே
பலவாகி நின்றவாதோ ணேக்க
மாடா மோ.

எனவும்

காரைக்காலம்மையார்

அவனே யிருசுடர் தீயாகாசமாவா
னவனே புவி புனல் காற்றுவா — னவனே
யியமான னுயட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனுகி நின்றுனும் வந்து.

பட்டினத்தடிகள்

எண்வகை மூர்த்தியென்பதில் வுலகினி
லுண்மையானென வுணர்த்திய வாறே.

எனவும் கண்டு கொள்க.

நிலம் என்பது பிருதுவியாகும். இது சதுரமான வடிவம். அதைக் குறிப்பது கிழக்குத் திக்கில் அமைந்த நாற்கோண வடிவமான குண்டம் யாவற்றையும் வசியப்படுத்தும்.

நீர் என்பது - அப்பு இதன் வடிவம் பாதிச் சந்திரனுன பிறை வடிவம், இது தெற்கில் உள்ள அர்த்த சந்திர குண்டம், இது வித்வேஷணத்தைச் செய்யும்.

நெருப்பு என்பது தேயு. இதன் வடிவம் முக்கோண வடிவம். இது தென்மேற்கு மூலையில் உள்ள திரிகோண குண்டம். இது மாரணத்தைச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயு இது அறுகோண வடிவம். இது வட மேற்கு மூலையில் அமைந்திருக்கும். இது உச்சாடனம்.

ஆகாயம் இது வட்டவடிவினது. மேற்குத் திக்கில் உள்ள குண்டம். இது ஸ்தம்பனம்.

சூர்யன் இது தாமரைப்பூ வடிவம், இது வடக்குத் திக்கில் உள்ள குண்டம், இது ஆகர்ஷணம்.

சந்திரன் இது எண்கோண வடிவினது. இது வடகிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது, இது பேதனம்.

இயமானன் என்னும் ஆன்மா மாயா தத்துவத்தைக் குறித்து அரசிலை வடிவாய் தென்கிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது. இது மோகனத்தைச் செய்யும்.

இவை எட்டுத்திக்கிலும் அமைய ஈசானத்திற்கு கிழக்கிற்கும் நடுவில் வட்ட வடிவமான பிரதான குண்டத்தில் ஸ்வயம் பிரகாச மூர்த்தியாய் அமைந்துள்ளது. இவ்வடிவம் இறைவன் மேலே குறித்த எட்டு வடிவமாகிய உலகில் கலந்து இருக்கிறுன். ஆகவே இறைவனை இந்த எட்டு வகையான குண்டத்தில் வைத்துப் பூஜித்து ஆகுதிகள் செய்து வணங்குகின்ருேம். சித்ஸ்சொரூபமான பிரதான குண்டமென்பது எல்லா ஐஸ்வர்யங்களையும் போக மோக்ஷங்களையும் அபீஷ்ட சித்திகளையும் கொடுக்கத்தக்கது.

சதுரச்சிரமம் - விர்த்தம் – எண்கோணம் – அறுகோணம் இந்த நான்கு குண்டங்களும் புல்லிங்கமெனக் கூறப்படும். பத்மம் யோனி குண்டம் இந்த இரண்டும் ஸ்திரீ லிங்கமெனக் கூறப்படும்.

திரிகோணம் - அர்த்த சந்திர குண்டம் இவை இரண்டும் நபும்ஸகமெனக் கூறப்படும்.

## குண்ட அங்கம்

சிவபெருமானுக்கு வியாப்பிய வியாபக ஹேதுவாயுள்ள பிருதுவி முதல் யஜமானனிறுதியாக உள்ள எட்டு அங்கங்களாகும்.

சதுரஸ்ர குண்டம் பிருதுவி, அர்த்த சந்திரகுண்டம் அப்பு, திரிகோண குண்டம் அக்னி. ஷட்கோண குண்டம் வாயுவும், விருத்த குண்டம் ஆகாசமும், பத்மகுண்டம் சூர்யனும், எண்கோணகுண்டம் சந்திரனும் யோனி யஜமானனும் ஆக எட்டுக் குண்டங்க்ளும் இறைவனுக்கு எண்வகைச் சரீரமாகும்.

## ஆகுதி

யாகசாலையிலுள்ள சிவாக்கினியில் ஆகுதி செய்தல் ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அனுபவத்துக்கு வரவொட்டாது சுத்தமாக்கும் பாவனையாகும்.

சிந்தனை செய்ய மனமமைத்தேன் செப்பநாவமைத்தேன் வந்தனைசெய்ய
தலையமைத்தேன் கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கன்பமைத்தேன் மெய்யரும்பவைத்தேன் வந்தருள்
குப்பாபிஷேகந் தரிசிக்க நல்ல கண்களைப் பெற்றேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஸ்ரீ நாகபூஷணி அந்தாதிமாலை

— நயினை உயர்திரு முத்துச்சுவாமிகள் —

## விநாயகர் துதி

முத்திநா யகனேபோற்றி மூலநா யகனேபோற்றி
சித்திநா யகனேபோற்றி தேவநா யகனேபோற்றி
சத்திநா யகனுர்தந்த தனிப்பெரு முதலே வீர
கத்திநா யகனே எங்கள் கடவுளே போற்றி போற்றி

கற்பகக் கன்றைக் கடம்பனைத்தந்த கனகவரை
யற்புதமோன வருணகந் தாங்கு மமிர்தவல்லி
தற்பரன் வாமந் தழைத்தேசகல வுயிர்களுக்கும்
நற்பதி யேயெனைப் பெற்றச தானந்த நாகம்மையே. (1)

பெற்றதாய்பார்க்கப் பிள்ளைதான் வருந்திப்பிறப்பெனுஞ் சாகரத்தாழ
நற்றவமில்லா வென்னை நீ விட்டால் நியாயமோ நல்லுரையாகச்
சொற்றவக் கரையி லேறியானுய்யத் துணையுநீயன்றியா ருளர் சொல்
கற்றவர்க் இனியாய் நயினையம்பதிவாழ் கண்மணிநாகபூ ஷணியே. (2)

கற்றவர்க்கினியாய் நயினையம்பதிவாழ் காரணி நாரணன்றங்காய்
மற்றவரறியா மரகதவரையின் வாமமே வளர்பசுங்கொடியே
நற்றவரோடு சேயெனையிருத்தி நாதநா தாந்தமுங்காட்டி
முற்றுமாய்நிறைந்த பூரணனந்த முத்திதா நாகபூஷணியே. (3)

முத்தியாங்கரையைப் பற்றியேயுய்யும் முன்னதாய் முரணலைமோதி
வற்றிடாமாய வாரிதிமத்தி மயங்கியா ழுந்திடாவாறு
சத்தியாய்ச்சிவமாய்த் தனிப்பரந்தானே தானுமாய் நின்றதற்பரையே
சித்தெலாம்வல்லாய் சேயெனைக்காத்தாள் திருமணிநாகபூஷணியே. (4)

காத்தெனையாழுங் கனகமாவரையே கமலையுங்காயையும் மருங்கே
நீத்தவரமரர் கருடர்கந்திருவர் நின்பணிபுரிபவ ரன்னே
வேர்த்தவராய்நின் றுயிர்த்திரளாட்டு வினையெலாம்பற்றி நீருகப்
பார்த்தருள் விழியைப்பரப்புதி யீன்றபார்ப்பதிநாக பூஷணியே. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதியேக பதியரன்பங்கி பங்கயச்சிருட்டி யாமுயிர்க்குக்
கார்ப்பதிபதியாய்க் கதிதருங்கங்கா நங்கையே கருணைமாகடலே
சீர்ப்பதியாகித் தெளிவுறவீன்ற சேயெனையுணர்த்தி யீததுவன்
குர்ப்பரித்துழலா தாண்டருள்வாயென் னம்பிகை நாகபூஷணியே. (6)

அம்பிகையமல வரியயற்கெட்டா வாரணி பூரணி கவுரி
நம்பினார்க்கின்பந் தருமனோன்மணியே நற்றவரோ டுறவாக
வெம்பியேவாடு மென்றெனைச்சேர்த்து விடுவதுன்கடன் வினைநீக்கித்
தம்பிரான் மௌன சற்குருபோகந் தந்தருள்நாகபூ ஷணியே. (7)

தந்தருள்ஞான சாதனஞ் சத்தியந் தவறிலா நெறி தயவன்பு
பந்தமேபற்று மேதுருவறிவு பகலிர வுன்னரவிந்த
வந்தமேயில்லா வடியிணைமாறு தருள்புணர்ந்தோங்கு நற்றியானஞ்
சிந்தையாய்மௌன தேசிகன் றிருத்தாள் சேர்த்தருள் நாகபூஷணியே. (8)

சேர்த்தருளன்னே தீவினைகழியச் செனனமு மரணமுமொழியக்
காத்தருளென்னை நின்னடிபணிந்தேன் கருணையே பொழிவிழிபரப்பிப்
பார்த்தருளீன்ற பகவதியாகிப் பங்கயத் தாழ்முடிசூட்டி
நீத்தருள் பாவ நிலையறமௌன நிலையருள்நாக பூஷணியே. (9)

பாவமேவிளையும் பாழ்வினையேது பற்றிடாதிருக்க நின்பாலே
தாகமேமறவா தோர்நிலைப்பத்தி தண்ணளி வளரருள்ஞான
யோகமேயுதவி யுலகெலாமீன்ற உத்தமவுயிர்க் குயிராகிப்
பாகமேநீங்காப் பராபரானந்த பதமருள்நாக பூஷணியே. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராலியூர்

திரு. முத்துக்குமாருப் புலவர் அவர்கள் பாடிய

# நயினாதீவு நாகேஸ்வரியம்மை பதிகம்

கருத்துரை : பண்டிதர் நா கந்தசாமி அவர்கள்
நயினாதீவு.

## காப்பு

வேக மாநெறி சேரும் வினைகளும்
தாக பேரகம் விடாத தளர்ச்சியும்
சோக வாரிதி யால்வரு துன்பமும்
போக யானை முகத்தனைப் போற்றுவாம்.

## ஆசிரிய விருத்தம்

1. சந்திரபூ ரணரத்ன தங்ககோ டக்கிரிட
தண்ணின்ற தவள வட்டத்
தனபதியை நிகர்மன்ன ரடிதொழச் சதுரங்க
தானைவெள் ளங்கள் சூழச்
சிந்துரப் பகைபிடர்ப் பீடிகை யிருந்தெண்
திசாமுகமு மேயி றைஞ்சத்
தேவேந்திர சுகமுற் றிருப்பவர்க ளுன்பாத
சேவைபுரி பவர்க ளன்றோ
மந்ரகா ரணரூப ரூபாரூ பாதிசிவ
மகாமாயி புவன நேசி
வாலசுந் தரிகௌரி நயினைமா நகர்மேவி
வைகியருள் செய்யுமொரு தாய்
நந்துறு கரன்பிரமன் அங்கமணி கங்களொடு
நஞ்சணி பிறங்கு களமே
நாகமணி யும்பரமர் பாகமுறும் ஏகசிவ
நாகயீஸ் வரியம் மையே.

கருத்துரை : பூரணசந்திரனைப்போல் பிரகாசிக்கும் இரத்தினக்கற்கள் பதிக்கப் பெற்ற தங்கத்தினாலாய கிரீடத்தையும், குளிர்ந்த சந்திர வட்டக் குடையையும் உடைய குபேரனை ஒத்த, பகைமன்னர்கள் தமது பாதங்களைத் தொழுது நிற்பவும் நால்வகைச் சேனைகள் வெள்ளம்போல் சூழ்ந்து நிற்கவும், எட்டுத்திசையிலுமுள்ள மக்கள் இறைஞ்சி நிற்பவும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து; தெய்வேந்திரனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் அரசபோகங்களை அனுபவித்து வாழும் பெருமன்னர்களும், உனது திருவடிகளைச் சேவிப்பவர்களேயாவர். வேதமந்திரங்களுக் கெல்லாம் காரணமானவளே. உருவாயும் அருவாயும் இருப்பவளே, சிவசத்தியே, புவனங்களை நேசிப்பவளே, இளமையும் அழகும் பொருந்தியவளே, வெண்மை நிறம் உடையவளே நீ நயினை மா நகரிலே வீற்றிருந்து. அருள் செய்யும் ஒப்பற்ற அன்னை ஆவாய் (பாஞ்ச சந்நியம் என்னும்) சங்கைக் கையிலே கொண்ட திருமாலையும், பிரமனையும். என்புகளை அணிகலன்களாகக் கொண்ட நஞ்சை அணிந்த உருத்திரனையும் உனது சக்திக்குள் அடக்கியவளே. பாம்பினை அணியும் பரமனின் இடப்பாகத்தில் உறையும் ஒப்பற்ற சிவசத்தியாகிய நாகயீஸ்வரி அம்மையே.

நாகயீஸ்வரி அம்மையே. நீ நயினைமா நகர்மேவி, வைகி, அருள்செய்யும் தாய். தெய்வேந்திர சுகமுற்று இருப்பவர்கள். உன்பாத சேவை புரிபவர்கள் எனக் கொண்டு கூட்டுக.

'' அம்பிகையுள் மும்மூர்த்திகளும் அடங்குவர் '' என்பதனை '' த்ரயாணும் தேவாணும்'' என்று தொடங்கும் ஸௌந்தர்ய லஹரீ சுலோகத்தாலும் அறியலாம்.

2. சோடுற்ற நவரத்ன குப்பியும் மேலிட்ட
தொங்கலும் அகி லளாவிச்
சொருகிட்ட கொண்டையும் சுட்டியு மலர்க்கையால்
தொட்டிட்ட சிந்தூரமும்
தோடுற்ற கொந்தளக மரகதக் கொப்புமார்
துணைவிழியி லெழுது மையும்
துகளற்ற வெண்டரள முருகுநற் பவளவாய்த்
துவரு மொளிர் நளினமுகமும்
தேடுற்ற செங்கமல பொற்பதமும் அழகான
திருவுருவும் அறிவி னூலே
தெரிசிக்க அருள்தந்து நீடா யுளும்பெருஞ்
செல்வமும் தரவேண்டும் நீ
நாடுற்ற பலவளமும் நிறையுமருள் நயினை
நகர்க்கண் மருவுங் கௌரியே
நாகம் அணியும்பரமர் பாகமுறும் ஏகசிவ
நாகயீஸ் வரியம் மையே.

**கருத்துரை :** பொருத்தமான நவரத்தினங்கள் வைத்து இழைக்கப்பட்ட கொண்டைச்சிமிழும் அதன்மேல் இட்ட மாலையும், அகிற்புகை ஊட்டிச் சொருகப்பட்ட கொண்டையும். நெற்றிப் பொட்டும் மலர்போன்ற கையினால் இடப்பட்ட திலகமும். சிலிர்த்த அளகபாரத்தைப் பின்னணியாகக் கொண்டதோடும் மரகதமணி பதிக்கப்பெற்ற கொப்பும் குற்றமற்ற வெண்மையான முத்துப் பொருத்தப் பெற்ற முருகும், அஞ்சனம் எழுதப்பட்ட இரு விழிகளும், நல்ல செம்மை நிறம் பொருந்திய திருவாய் அதரங்களும், விளங்குகின்ற தாமரைபோன்ற திருமுகமும் அடியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் விரும்பித்தேடும் செந்தாமரைபோன்ற அழகிய பாதங்களும் கொண்ட அழகான உனது திருவுருவை எனது ஞானக்கண்களால் எந்நாளும் தரிசனம் செய்ய அருள்வதோடு நீண்ட ஆயுளையும் பெரிய செல்வங்களையும் எனக்கு நல்குவாய். ஒவ்வோர் நாட்டிற் சிற்சில வாய் விளங்கும் வளங்கள் அனைத்தும் ஒன்று சேர மிளிரும் அருள் விளங்கும் நயினை நகர்க்கண் எழுந்தருளும் கௌரியே பாம்பினை அணியும் பரமனின் இடப்பாகத்தில் உறையும் ஒப்பற்ற சிவசத்தியாகிய நாகயீஸ்வரி அம்மையே.

கௌரியே, அம்மையே, நீ தெரிசிக்க அருள்தந்து, நீடாயுளும் பெருஞ் செல்வமும் தரவேண்டும் எனக் கொண்டு கூட்டுக.

தோடு, கொப்பு, முருகு என்பன காதணி விசேடங்கள்

3. ஆரணத் துபநிடத அக்கரத் தொனியாகி
ஆகாய வட்ட மாகி
அறுகோண மிருகோண முக்கோண நாற்கோண
ஆகிநிற மைந்து மாகிக்
காரணத் துருவாகி யருவாகி யாவுமாய்க்
காக்குமுன் பெருமை எளிதோ
கருணைப்பிர வாகஞா னைந்த வெள்ளங்
கசிந்தூறு பேராழியே
ஏரணைத் திடுமருத வேலிசூழ் நயினை
வெனும்பதி சிறந்து மேவும்
யாமள சௌந்தரீ கோமளசொரூப சிவ
ராசபர மேசு வரியே
நாரணற் கொருசகோ தரியென்ன வந்தருளு
நாகபூ ஷணிநா ரணீ
நாகம் அணியும்பரமர் பாகமுறும் ஏகசிவ
நாகயீஸ் வரியம் மையே.

கருத்துரை: வேதங்களிலும் உபநிடதங்களிலும் வரும் ஐம்பத்திரண்டு அட்சரங்களின் உட்பொருளாகி ஆகாய வட்டமாகி, அறுகோணம், இருகோணம், முக்கோணம், நாற்கோணம் என்னும் யந்திர வடிவாகி, பஞ்சபூதங்களுக்குரிய ஐவகை நிறங்களாகி. யாவற்றுக்கும் காரணமாகி, உருவும் அருவும் ஆகி; காக்கின்ற உனது பெருமை அரிய தொன்றாகும். அருள்பிரவாகிக்கும், அறிவும் ஆனந்தமுமாகிய வெள்ளம் கசிந்து ஊறும் பெரிய சமுத்திரம் போன்றவளே, கலப்பைகளால் உழப்படுகின்ற மருத நிலஞ் சூழ்ந்த, நயினை என்னும் பதிக்கண் சிறப்பாக எழுந்தருளும், பச்சைநிறங் கொண்ட சுந்தரியே, அழகே வடிவான சிவ ராசபரமேஸ்வரியே திருமாலுக்குச் சகோதரியாக வந்துதித்த நாகபூஷணியே. அதனால் நாரணி என்னும் திருநாமம் பூண்டவளே பாம்பினை அணியும் பரமனின் இடப்பாகத்தில் உறையும் ஒப்பற்ற சிவசத்தியாகிய நாகயீஸ்வரி அம்மையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராழியே, நயினுவெனுர்பதி சிறந்துமேவும் சௌந்தரீ, பரமேஸ்வரி, நாரணி நாகயீஸ்வரி அம்மையே, யாவுமாய்க் காக்கும் உன் பெருமை எளிதோ? எனக் டுக.

நிறம் ஐந்து; வெண்மை, கருமை, பசுமை, செம்மை, பொன்மை (மஞ்சள்) ஏரணைத்திடும் என்பதற்கு - அழகு பொருந்திய என்றும் பொருள் கொள்ளலாம்.

4. சத்திபயி ரவிகௌரி அக்கணியும் முக்கணீ
சடாட்சரி சடாட்சரத்தீ
சங்கரி சுமங்கலி மதங்கியரு ளம்பிகை
சவுந்தரீ சண்ட சண்டி
உத்தமி பராபரை மனேன்மணி சிவானந்தி
உமையிமயம் உதவு மங்கை
உலகுதவும் அன்னையா மளைபொன்னின் அம்பலவர்
வுடனிடம் மகிழ்ந்து மேவும்
நித்தியகல் யாணிசாம் பவிபுவனை கௌமாரி
நிமலைமக மாயி என்றே
நெஞ்சில்நித முந்நினைவு தந்துனை வணங்கி வரும்
நின்னடிய ருக்கருளு வாய்
நத்துதவு சுத்தமணி மெத்துநயி னுநகரில்
நாளுமுறை யாழின் மொழியே
நாகம்அணி யும்பரமர் பாகமுறும் ஏகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

**கருத்துரை.** சத்தி தொடக்கம் மகமாயி ஈருக வருகின்ற உனது திருநாமங்களை எப்பொழுதும் நெஞ்சில் நினைந்து வணங்கி வருகின்ற உனது மெய்யடியார்களுக்கு திருவருளைப் பாலிப்பாயாக. சங்கு தருகின்ற நல்ல முத்துக்கள் மலியும் நயினைமா நகரிலே எப்பொழுதும் உறைகின்ற யாழிசைபோன்ற இனிய சொல்லை உடைய வளே, பாம்பினை அணியும் பரமனது இடப்பாகத்தில் உறையும் ஒப்பற்ற சிவசத்தி யாகிய நாகயீஸ்வரி அம்மையே.

நாகயீஸ்வரி அம்மையே சத்தி மகமாயி என்று நினைவுதந்து வணங்கிவரும் அடியவர்களுக்கு (நீ) அருளுவாய் என்று கொண்டுகூட்டுக.

5. ஆகமது கூனித் தளர்ந்துரோ மம்வெளுத்
தைம்புல னடங்கி மேலாம்
அறிவழிந் தைமே லெழுந்ததீ தத்தினுயி
ரணுகுமக் காலை தனிலே
வேகவெங் கடமைபிடர் நெளியவரு யமனெற்கு
விடுகயிறு முடுகி யடுமுன்
வினையேனை யஞ்சலென் றுனதுநா யகருடன்
வெள்ளை விடை மீதிவர்ந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகமுற வந்துநின் றடிமைகொண் டினிதினி
பாதுகாத் தருள வேண்டும்
பைங்குலைத் தெங்கிளஞ் சோலைசெறி நயினைநகர்
பண்பு கொண்டுறை செல்வியே
நாகமடர் தாருவன மேவுமுனி வோர்கள்விட
நாடிவரு கோப விடமார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாக ஈஸ்வரி யம்மையே.

**கருத்துரை :** உடல் தளர்ந்து கூனி உரோமம் வெளுத்து ஐந்து புலன்களின் உணர்வுகளும் குறைந்து, மேலான அறிவும் அழிந்து சேடம் மேலெழுந்து உயிர் துரியாதீதத்தை அடைகின்ற மரணாவஸ்தை வேளையிலே, வேகமும் மூர்க்கமுங் கொண்ட எருமைக்கடாவின் முதுகு நெளிய அதன்மேல் ஏறிவருகின்ற யமனின் பாசக்கயிறு என்மீது விழுமுன் தீவினையேனாகிய என்னைப்பார்த்து நீ அஞ்சாதே எனக்கூறி உனது நாயகருடன் வெள்ளை எருதேறி சமீபத்தில் வந்து என்னை அடிமை கொண்டு பாதுகாக்க வேண்டும் பசிய குலைகளைத் தாங்கி நிற்கும் இளந்தென்னஞ்சோலைகள் சூழ்ந்துள்ள நயினைநகரிலே சகல கல்யாண குணங்களுடன் வீற்றிருக்கும் செல்வியே சுரபுன்னை மரங்கள் அடர்ந்த தாருவனத்தில் வதியும் முனிவர்களால் ஏவி விடப்பட்ட கோபங்கொண்ட விடம்பொருந்திய நாகத்தை எடுத்து ஆபரணமாக அணிந்து கொண்ட பரமனின் இடப்பாகத்தில் உறையும் ஒப்பற்ற சிவசத்தியாகிய நாகஈஸ்வரி அம்மையே.

நயினை நகர் உறை செல்வியே, நாகபீஸ்வரி அம்மையே, நமன் விடுகயிறு முடுகி அடுமுன், வெள்ளைவிடை மீது இவர்ந்து, அஞ்சலென்று அடிமை கொண்டு பாதுகாத்தருள வேண்டும் என்று கொண்டுகூட்டுக.

6. மாற்றிற் சிறந்தபொற் குவையென்ன வளர்சாலி
வயலிற் கிடந்த நத்தம்
மடையிற் றவழ்ந்தேறி மதகிற் புகுந்துழவர்
மனைமுன்றி லீனு முத்தை
ஆற்றிற் சிறந்திடத் தண்டுலங் களையுநீர்
அள்ளிப் புறத்தின் மேவி
அருகுற்ற சோலையினு மிகுதுற்ற வாவியினு
மரவிந்த வோடைக ளினும்
காற்றிற் சிறந்துலவு கால்கொண்டு வீசக்
கயற்கண்ணி வந்து மோதக்
கதலியில் வருக்கையிற் கமுகினிற் றெங்கினிற்
கனியு மடலுஞ் சிதறியே
நாற்றிக்கு மேகமழ மதுமாரி சொரியுநயி
னைநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாகஈஸ் வரியம் மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துரை : பத்தரை மாற்றுத் தங்கக் குவியலைப்போன்ற தானிய மணிகளைத் தரும், செழித்து வளர்ந்த நெற்பயிர்கள் நிறைந்த வயிலிற் கிடந்த சங்கு, வாய்க் கால் மடையில் தவழ்ந்து மதகினூடாகப் புகுந்து உழவர் வீட்டு முற்றத்தில் ஈன்ற முத்துக்களை உழத்தியர் அரிசி களையும் நீரானது, ஆற்றுநீரினும் பார்க்க மிகுதி ஆகி, வாரிப் புறத்தே தள்ளும். அருகிலே உள்ள சோலைகளிலும் மிகுதி யாகக் காணப்படும் தடாகங்களிலும், தாமரை மலர் நிறைந்த ஓடைகளிலும், காற்றிற் சிறந்ததாகிய மந்தமாருதம் வீச, வாழை, பலா, கமுகு, தெங்கு ஆகிய வற்றிலிருந்து. கனியும், மடலும் சிதறும் (ஓடைகளிலும், தடாகங்களிலும் உலா வும்) கயல் மீன்கள் துள்ளிப்பாய்ந்து மோத. (மேகத்திரை கிழிந்து) நான்குதிசை களிலும் மழையாகிய மாரி பொழியும். (இத்தகைய வனம் பொருந்திய) நயினை நகரை விரும்பி வந்து உறையும் உமையம்மையே பாம்பினை ஆபரணமாக அணிந்த பரமனது இடப்பாகத்தில் உறையும் ஒப்பற்ற சிவசத்தியாகியநாகயீஸ்வரி அம் மையே. (நீ எனக்கு அருள் செய்வாயாக)

நத்தம் ஈனும் முத்தைக் கழுநீர் ஒதுக்கும். கால் கொண்டு வீசக் கனி யும் மடலும் சிதறிடும். கயற்கண் நிவந்து மோத, மேகம் மழைமாரி சொரியும். (இத்தகைய வளம் பொருந்திய) நயினை நகர் நண்ணும் உமையே, நாகயீஸ்வரியே நீ எனக்கு அருள் செய்வாயாகுக எனக்கொண்டு கூட்டுக.

7. வன்கய மருப்பென நிமிர்ந்தடி பருத்திறுகி
மணிவா ரறுத்து விம்மி
வட்டமிட் டெழுகும்ப முலைமுகங் காட்டியிரு
மகர விழிவலை வீசியே
மின்கய மதப்போரி துள்ள மதலைத்துள
வெறுக்கையைப் பற்றி யேற்கும்
வேசியர் தனக்கடிமை செய்விக்கு மென்முன்னை
வினைநூறி யருளு தவுவாய்
பொங்கிய நெடுந்திரைப் புணரிநாற் றிசையும்
பொருந்தநடு மேவி யுலகிற்
புகழ்பெருகு நயினைமா நகரினி லிருந்துமிகு
புதுமைதரு புனித தாயே
நன்கிய விளம்பிறையொ டொன்ற வேண்டிச்சடில
நண்புகொண் டிடுநஞ்சு மார்
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகவசிவ
நாகஈஸ் வரியம் மையே.

கருத்துரை : வலிய யானைத் தந்தங்கள் போல நிமிர்ந்து, அடிப்பாகம் பருத்து, இறுக்கமடைந்து, புடைத்து. வட்டவடிவமாகி, அழகிய மார்புக்கச்சையைக் கிழித்து, மேல் எழும் கும்பம் போன்ற தனங்களையும், அவற்றின் கூர்மையையும் காட்டி, மீன்போன்ற கண்களாகிய வலையைவீசி, கலவியில் உள்ளத்தை அலைத்து கையிலுள்ள செல்வங்களைப் பறித்துக் கொள்ளும் பரத்தையர்க்கு அடிமைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தும் எனது முன்செய்த தீவினைகளை நீக்கி உனது திருவருளை நல்க வேண்டும். பொங்கி எழும் அலைகொண்ட கடலானது நான்கு பக்கமும் சூழ அதன் நடுவே பொருந்தி உலகெங்கும் தனது புகழைப் பரப்பும் நயினை நகர்க்கண் வீற்றிருந்து பல புதுமைகளைப் புரிகின்ற பரிசுத்தமான அன்னையே, நல்ல இளம்பிறையுடன் சேரவிரும்பி சடாமுடியுடன் நட்புக்கொண்ட நஞ்சு பொருந்திய பாம்பினை ஆபரணமாக அணிந்துகொண்ட பரமனின் இடப்பாகத்தில் உறையும் ஒப்பற்ற நாகயீஸ்வரியம்மையே.

புனித தாயே, நாகயீஸ்வரி அம்மையே வேசியர்க்கு அடிமை செய்விக்கும் எனது முன்னைவினை நூற்றி அருளுதவுவாய் எனக் கொண்டு கூட்டுக.

8. சம்புசிவ சங்கர திகம்பர நடம்புரி
சமர்த்தாதி யாதி யாய
தற்பர மதிச்சடில முக்குண சதுர்ப்புய
சதாசிவ மகேசுராய
எம்பரம வென்றுபதி னெண்கணமு மிம்பரு
மிறைஞ்சிவரு கணவ ருடனே
இங்கித முடன்கயிலை தங்கியுறை யம்பிகையி
னின்புக ழியம்ப வெளிதோ
அம்புய மடந்தைய ரரம்பையர் வயந்தழுவு
மரியநவ சக்தி களௌலா
மன்பினோடு தொண்டுசெயு முந்தனர விந்தபத
வம்பொன்நிழல் தந்தரு ளுவாய்
நம்பிவரு தொண்டர்பெற மங்கல மிகுந்த நயி
னுநகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாகஈஸ் வரியம் மையே.

கருத்துரை: சம்பு, சிவ, சங்கர, நடம்புரி சமர்த்த, ஆதிக்கும் ஆதியாய தற்பர மதிச்சடில, முக்குண, சதுர்ப்புய, சதாசிவ, மகேசுராய, எம்பரம என்று தனது திருநாமங்களை பதினெண் பூதகணங்களும் இவ்வுலகத்தவர்களும் சொல்லி வணங்கி வருகின்ற உனது பதியாகிய சிவபிரானோடு அழகு பொருந்தக் கயிலையங்கிரியில் தங்கி உறைகின்ற உனது இனிய புகழை என்னால் சொல்ல முடியுமோ? (முடியாது என்றபடி) தாமரையில் வீற்றிருக்கும் திருமகளும் கலைமகளும், தேவமாதரும், வீரம் பொருந்திய நவசத்திகளும் அன்பினோடு தொண்டு செய்யும் உனது தாமரை மலர் போன்ற திருப்பாதங்களின் நிழலை, உன்னை நம்பி வருகின்ற அடியவர்க்கு அருளுவாய், அழகு மிகுந்த நயினை நகரில் எழுந்தருளி வந்து உறையும் உமையம்மையே பாம்பினை ஆபரணமாக அணிந்து கொண்ட பரமனின் இடப்பாகத்தில் வதியும் ஒப்பற்ற சிவசக்தியாகிய நாகயீஸ்வரி அம்மையே.

கணவருடனே தங்கியுறை அம்பிகை நின் இன் புகழ் இயம்ப எளிதோ? நயினை நகரில் நண்ணும் உமையே. நாகயீஸ்வரி அம்மையே உன்பத அம்பொன் நிழலைத் தொண்டர்பெற அருளுவாய் எனக்கொண்டு கூட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கந்தான தொசியச் சினக்கும் கடாதடக்

கைம்மலை முகத்த வுணனைக்

கால்கொண் டுதைத்துவன் ருேலுரித் துப்போர்த்த

காத லனைமன் ருடியே

முந்தாத ரத்திேைடு மிருநாழி நெற்பெற்று

முடிவிலா துயிர்க ளுய்ய

முப்பத் திரண்டறந் தன்னையுத வியவன்னை

முதுலகில் நீயா கையால்

சிந்தா குலங்கொண்டு திரியநான் முறையோ

தினந்தி னம்சொல வேண்டுமோ

திருவுள மிரங்கியே சற்றுன் கடைக்கண்

திருப்பினுல் வெகு பாரமோ

நந்தாத வரமுதவு நங்கையே நயினு

நகர்க்கண் மருவும் கௌரியே

நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ

நாகஈஸ் வரியம் மையே.

**கருத்துரை:** கட்டுத் தறியானது முறியக் கோபங் கொள்ளும் மதம் பொருந்திய நீண்ட துதிக்கையை உடைய யானை முகங்கொண்ட கஜமுகாசுரனை, தனது கால்களால் உதைத்து அவனது தோலினை உரித்துப் போர்த்த உனது காதலனுகிய சிவபிரானிடம் இரந்து விருப்போடு இரண்டுகொத்து நெல்லினைப் பெற்று எண்ணுதற்கரிய பலகோடி உயிர்கள் உய்யும் வண்ணம் முப்பத்திரண்டு அறங்களையும் செய்து முடித்த தாய்போன்ற கருணை உள்ளங் கொண்டவள் இப்பழைய உலகில் நீ ஒருத்தியே அன்ருே. ஆகையால் (உன் குழந்தையாகிய) நான் மனத்துயர் கொண்டு அலைந்து திரிதல் நீதியாகுமோ? எனது குறைகளை ஒவ்வொரு நாளுமா உன்னிடம் சொல்ல வேண்டும்? உனது திருவுளம் இரங்கி உனது கடைக்கண் பார்வையைச் சிறிது என் பக்கம் திருப்புவது உனக்கு ஒரு கஷ்டமான காரியமா? குறையாத வரங்களைக் கொடுக்கும் பெண்ணிற் சிறந்தவளே, நயினை நகர்க்கண் வீற்றிருக்கும் கௌரியம்மையே பாம்பை ஆபரணமாக அணிந்து கொண்ட பரமனின் இடப்பாகத்தில் உறையும் ஒப்பற்ற சிவசக்தியாகிய நாகயீஸ்வரியம்மையே.

வரமுதவு நங்கையே கௌரியே. நாகயீஸ்வரி அம்மையே. காதலனை மன்ருடி நெற்பெற்று முப்பத்திரண்டறம் உதவிய அன்னை நீ. ஆகையால் யான் திரிதல் நீதியோ, கடைக்கண் திருப்பினுல் (அது உனக்கு) வெகுபாரமோ? எனக் கொண்டு கூட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சீர்தங்கு தண்களை யெனத்தாசர் மனத்திற்
றிளைத்துக் குழைத் தரும்பும்
செஞ்சரண கஞ்சமலர் தஞ்சமென மென்புன்
சிரக்கஞ்ச மீதில் வைத்தே
ஏர்தங்கு நல்லருட் பேறுதவி நெஞ்சத்
திடுக்கண தகற்றி அஞ்சேல்
என்றுமுன் நின்றெமக் கீடேற்ற முதவுவார்
யாருன்னை யன்றி யம்மா
பேர்தங்கு மகிலாண்ட கோடிகளு முறுபொருட்
பிரிவும் மூ வகையதாகும்
பேருயிர்க ளுந்தந்து பாதுகாத் தருளுமுன்
பெருமையாம் பேச வெளிதோ
நார்தங்கு நற்குணத் தொண்டருய வென்றுநயி
னனகரி னண்ணு முமையே
நாகமணி யும்பரமர் பாகமுறு மேகசிவ
நாகஈஸ் வரியம் மையே.

கருத்துரை : அடியார்களின் மனமாகிய சிறப்புப் பொருந்திய தடாகத்தில் திளைத்து வளர்ந்து மலரும் நினது சிவந்த தாமரை மலராகிய பாதங்களை எனது சிரமாகிய தாமரைமலர்மேல் வைத்து பெருமை பொருந்திய நல்ல அருட்பேற்றை அருளி உள்ளத்திலுள்ள துன்பங்களை அகற்றி என்முன்னின்று "அஞ்சாதே" எனக் கூறி எனக்கு ஆன்ம ஈடேற்றத்தைத் தருபவர் அன்னையாகிய நீயன்றி வேறு யார்? பரந்த அகிலாண்டங்களையும், அதில் நிலைபெற்றுள்ள பொருள்களையும், சரம் அசரம் என்னும் உயிர்வகைகளையும் படைத்து அவற்றைப் பாதுகாத்து அருளும் உனது பெருமையைச் சிறியேனாகிய என்னால் பேசமுடியுமோ? அன்பு பொருந்திய தொண்டர்களுக்கு உய்யும்வழியை நல்குவதற்கென்றே நயினை நகர்க்கண் எழுந்தருளி இருக்கும் உமையம்மையே, பாம்பினை ஆபரணமாக அணிந்த பரம சிவனது இடப்பாகத்தில் உறையும் ஒப்பற்ற சிவசக்தியாகிய நாகபூஷணியே.

உமையே, நாகபூஷணியே உனது செஞ்சரணகஞ்சமலர் என் சிரக்கஞ்ச மீது வைத்து நல்லருட்பேறுதவி இடுக்கண்ணகற்றி அஞ்சேல் என்று ஈடேற்ற முதவுவார் உன்னையன்றி (வேறு) யாரம்மா? அகிலமும், பொருளும், உயிர்களும் தந்து பாதுகாத்து அருளும் உன்பெருமைபேச எளிதோ எனக்கொண்டு கூட்டுக

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை மான்மியம்

## கடவுள் வணக்கம்

### பராசக்தி

வாலறிவோ ருணரமுத மத்தியிற்கற் பகஞ்சூழ்ந்த மணித்தீ பத்தின்
ஏலுறுநற் கடம்பமர்கொல் லையிற்சிந்தா மணிப்பீடத் திருந்த தோற்ற
மாலறுமெய் யடியவர்கண் டின்புறுவா னயினைதனின் மணிப்பீ டத்தில்
ஓலிடுகற் பனைகடந்தே யமர்நாக பூடணியென் னுளத்த ளாமால்.

### மாணிக்கவாசக சுவாமி

எரியேறுந் திருநுதற்கண் ணிறையேறும் பசுநிறுவி யிலங்கு வேதப்
பரியேறும் தொழில்படைத்துப் பகையேறு மீனவன்றன் பதிக ளெல்லாம்
நரியேறுந் தொனிபரப்பி நதியேறும் சடைதனிலோர் நங்கைக் காமன்
பரியேறும் படிவமுறக் கிடைத்தமணி வாசகர்தம் பொற்றுள் போற்றி

### அவையடக்கம்

எண்ணெ ழுத்தியல் யாப்பிலக்கணங்
கண்ண கத்தினுங் கண்டறி யேனிவட்
பண்ணு மிக்கவி பார்த்திடு மேலையோர்
திண்ண மிக்கண் செய்வர்நற் சிந்தையால்.

## ஈழமண்டலச் சருக்கம்

கேட்போர்தஞ் செவியரித்துப் பெரிதாக்கிக் கிலேசத்தால்
ஆட்போய வுளப்பிணித்தே யறிவூட்டு மமுதன்ன
சேட்போய வருணகிரி திருப்புகழ் மாலையினேத்துங்
காட்போய வேலனிருங் கதிரையுமுற் றுளதீழம்,

## ஸ்தல விசேடச் சருக்கம்

குலந்திகழ் வுறுமேழ் வரைகளும் மருங்கிற் குலவுற
நாப்பணெவ் வுயிருங்
கலந்திடு முமையோர் பங்கர் வீற்றிருக்கும் கயிலைமால்
வரையது கடுப்ப
வலந்தரு மனலை யெழுவையே காரை மண்டை
வேலணையொடு புன்கை
பொலந்தரு நெடுவாஞ் சத்த தீவங்கள் புடைவுறப்
பொலிவது நயினை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவக்கடற் கிடைவீழ்ந் தலமருவோரைப் பாதுகாத்
தின்பமே பயக்கும்
சிவத்திடைப் படரும் பச்சிளங் கொடிதன்
திருப்பதத்துணை மலரெனவே
உவப்புறத் தனைச்சூ ழாழிமேல் நாவாயொழி
தரமறலி நோயுற்றுத்
தவிப்பவர் யாகைக் குறுபுணைமா னத்தங்
குமந்த யினையாந் தலமே.

## வேளாளர் வருணனை

வித்தினிற் பயிர்செய்த ளித்தவை வளர்த்தும்விளை
விளையறிந்துபின் ஞெழித்தும்
இத்தொழில் மூன்றெவ் வொருவரும் புரிந்தேயில்ல
யென்றுரைப்பவை நிரப்பி
மெத்திய நாவாய் வயினெலாம் நிரப்பிவிண்ண
வராமென வாழ்வார்
முத்தொழில் புரியும் மூவரோ ஈழத்துழவரோ
முறையினுன் முதியோர்

# மூர்த்தி விசேடச் சருக்கம்

எழுதருமறையுங் கடந்த நாயகி நன்றிருந்தருள் செய்யுமத்தலத்திற்
பழுதறுஞ்சைவ தந்திரமுறையாற் பத்தியோடவ ளடிபரசி
யழுதகண்ணெடு மெய்யரும்ப நாத்தழும்ப வகங்குழைந்தென் பெலாமுருகத்
தொழுதகையொடு நின்றனுதினம் போற்றுந் தொண்டர்தம் பெருமையார்சொல்வார்.

ஈர்த்த வேளருங்கைச் சிலையலர் கூம்ப
ஈன்றிடுங் கருப்பைகள் கூம்பப்
போர்த்ததீ நிரையக் குழிகள்வாய் கூம்பப்
புறச்சமயா ஈந்தகங் கூம்ப
மூர்த்த மாயிருந்த கௌரி யாலயத்து
முன்புநின் றன்பொடு தலைமேற்
கூர்த்த நீடுரக் கைஇவைய ளுதுயர்த்
திக்கூப்புவார் கைகளே கைகள்.

பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும் பேணலாலன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய வனைத்து முதவலாலன்னை யெக்கலையுஞ்
சொற்றதாலன்னை யுலகொடுவானுந் தொழுதலாலன்னை யென்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலாலன்னை பராபரை நாகபூடணியால்.

வீரகவி, க நாகமணிப் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# நயினை ஊஞ்சல்

— ஸ்ரீலஸ்ரீ ம. அமரசிங்கப்புலவர் —

## காப்பு

சீர்பூத்த தென்னிலங்கை தன்னின் மேவும்
திரைபூத்த கடனயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசு வரியைப் போற்றி
இசைபூத்த செந்தமிழா லூஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலி யரனு ரீன்ற
அருள்பூத்த வறிபிச்சை தொழிலென் றேதுக்
கார்பூத்த மும்மைமத களிற்றின் பாதம்
கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வாம்.

பலனேங்கு செப்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்ட மாக
குலனேங்கு வெண்டரளங் கயிற தாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனேங்கு மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
நலனேங்கு திருநயினை நகரில் வாழும்
நாக பரமேஸ்வரியே யாடீ ரூஞ்சல். (1)

உவகையொடு மலரயன்மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங் காட்ட
தாழ்ந்துகண நாதர்புகழ் மாலை சூட்ட
அவிரிடப துவசமகல் வாணந் தூர்ப்ப
அனந்தன்முத லுரகர்செய செயவென் றூர்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல் (2)

கொம்பினொடு துடிமுரசு முழவ மோங்க
குடைகளுட னலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர்வேத கீதம் பாட
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபரமேஸ்வரியே யாடீ ரூஞ்சல் (3)

அன்னநடை யயிராணி களிகை தாங்க
அயிலைநிகர் விழியரம்பை களாசி யேந்த
வன்னமுலை யுருவசிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிகமண் டலங்கைக் கொள்ள
மின்னிடைமே னகைவெளிலை பாகுநல்க
வியந்துதிலோத் தமைஎகித நடனஞ் செய்ய
நன்னயஞ்சேர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். (4)

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ
மயிலைநிகர் சுகேசைமல ரடிக ணிவ
விதிமுறைமங் கலைமுதலோ ராலஞ் சுற்ற
வேதியர்தம் மகளிர்சுப வசனஞ் சாற்ற
அதிவினய மொகிமனை யாடி காட்ட
அன்பினறிந் திதைசுகந்த வருக்க நீட்ட
நதியுலவு நயினை நகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். (5)

கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனங் கதமு மாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாட
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுக மெனவிளங்கு நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். (6)

முந்துதவ மாதர்துதி கூறி யாட
முகமனெடு புனன் மாதர் முன்னின் றுட
வந்தனையோ டுரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வணங்கி யாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
நந்துதவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல் (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரணியே அம்பிகையே யாடீ ரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீ ரூஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீ ரூஞ்சல்
புராதனியே புராந்தகியே யாடீ ரூஞ்சல்
காரணியே காருணியே யாடீ ரூஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீ ரூஞ்சல்
நாரணியே நாயகியே யாடீ ரூஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். (8)

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமற மெண்ணான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில்பல சக்திவடி வானாய் போற்றி
இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்குந் தாயாகி இருந்தாய் போற்றி
நனிகுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். (9)

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா கமமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசமய முமறமுந் தழைத்து வாழி
பாவார்வெண் ணீறுபஞ்சாட் சரமும் வாழு
பாடியவூஞ் சற்றமிழும்பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியும் வாழி வாழி. (10)

# நயினை யாத்திரை விளக்கம்

## விருத்தம்

திருவருள் சுரந்திந் நாளிற் றேசத்தோர் தம்மைக் காக்கு
மருமைசேர் நயினுர் திவி லரவபூ ஷணிபா தத்தை
யுரிமையோ டிறைஞ்சி வாழ்த்தி யுய்ந்திட மனத்திட மனத்திலெண்ணிக்
குருவரு ளாலே யாத்திரை செய்திடக் குறிப்புற் றேனே.

## கண்ணிகள்

மங்கள நயினுர்திவில் — வாழும் — மாதா நாகபூஷணி தன் மலர்ப்பதத்தை — யிங்கென் மனத் திருத்தினேன் — எனக்கேற்ற யாத்திரைக்கு நல்லவரந் தாவென்றேன்.

நல்லவரம் பெற்று மகிழ்ந்தேன் — வெளிப்பட்டு — நானும் வந்த வழியிற் சாந்தயர் மடத் திற் — சொல்லும் பிள்ளையாரைத் தொழுதேன் — அந்தத் தும்பிமுகன் பாதஞ்சிரஞ் சூடிக் கொண்டேன்.

ஆறுமுக நாவலர்முன் — னமைத்திட்ட — வருட் சைவப் பிரகாச வித்தியாசாலையில் — கூறுமலங் காரமுங் கண்டேன் — வயிரவக் — கோலச்சாமியைக் கும்பிட்டுக் — குறை தீரென்றேன்.

வணங்கி யெழுந்து நடந்து — வண்ணை — வாழும் வயித்தீஸ்வரனை வாழ்த்திக் கும்பிட் டேன் — இணங்குந் தையல் நாயகியாம் — என்னை — யீன்றெடுத்தமாதா பாத மிறைஞ் சிக் கொண்டேன்.

தந்த வரம்பெற்றுத் திரும்பிக் — கதிரேச — சாமிநாதன் கோயிலொன்றைத்தான் றரிசித்தேன் — எந்தவரமுங் கொடுத்தார் — அய்யனை — யேத்திக் கொண்டு கடைத் தெருவாலே நடந்தேன்.

கடையிற் பிள்ளையார் கோயிலை — நானுங் — கண்டு மனங் களித்துக் கும்பிட்டுக் கொண் டேன் — தடையில்லா வரங் கொடுத்தார் — அந்தத் — தந்தி முகன்றந்த வரம்தான் பெற்றுக்கொண்டேன்.

பெரிய கடையைக் கண்டேன் — நல்ல — பிடுறும் யாபாரங்கள் விற்பனவுங் கண்டேன் — தெரிய நடந்து சென்றேன் — அந்தச் — சித்திரஞ் சேர்முத்த வெளிச் சிறப்புங் கண்டேன்.

கோட்டையலங் காரமுங் கண்டேன் — முனியப்பர் — கோயில் முன்னுய் நின்றிருகை கூப்பித் தொழுதேன் — நீட்டுவரந்தான் கொடுத்தார் — வாங்கிக் கொண்டு நேரே யலுப்பாந்திக்கரிக் கோப்புக்கு வந்தேன்.

வத்தை யொன்றிலே யேறினேன் — பாய் தூக்கி — வரும்போது காக்கைதிவு வந்தது கண்டேன் — மெத்துமிடுக்காறையுங் கண்டேன் — அராலித்துறை விட்டு விருட்டி முனையும் மேவக் கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறையில் வந்தேன் — ஆங்கதி — லுற்றிருந்தே யூர்வளப்ப முள்ளதைக் கேட்டேன் — பேர் கரம்பன் நாரந்தனை — வேலணை — பேசு மல்லப்பிட்டி மண்கும்பா னுண்டென்றார்.

கேட்டறிந்து போகும் வழியில் — பெருங்கடல் — கோட்டையைக் கண்டேனதைக் கேள்விப் பட்டேன் — காட்டுமெழுவை தீவை — யப்பால் — கண்டேனனல தீவு தன்னையுங் கண் டேன்

பருத்தித் தீவையுங் கண்டேன் — அங்கே — படுத்த வேழாற்றுப் பிரிவையுங் கண்டேன், திருத்த நயினார்தீவுங் — கண்ணுக்குத் — தெரிந்தது கண்டு கொண்டு செல்லும்போது.

பாம்பு சுற்றிய கல்லும் — அதை யுண்ணப் — பார்த்திருந்த கருடன் வீற்றிருந்த கல்லுந் — தேம்புந் திரைவந்தடிக்க — நன்றாய்த் — தெரிந்து கொண்டேனதை யறிந்து கொண்டேன்.

வந்து கரை சேர்ந்தவுடனே — நயினார்தீவில் வத்தையை விட்டிறங்கினேன் மனம் பூரித் தேன் — முந்து நாகபூஷணி வாழும் — ஆலயத்தை — முழுச் சந்தோஷமாய்க் கண்டு முன் வணங்கினேன்

சுற்றுமதிற் சிறப்பைக் கண்டேன் — அதிலுள்ள — சு ந் த ர த் தை யென்னென்று நான் தொகுத்துச் சொல்வேன் — பற்று கோபுரத்தையுங் கண்டேன் — சித்திரத்தைப் — பார்த தெப்படி வாயாற் சொல்லிப் பாடித் துதிப்பேன்.

கொடித்தம்பத் தழகுங் கண்டேன் — அன்னதுதான் கொண்ட கோலமென்னென்று நான் குப்பிட்டுச் சொல்வேன் — தடித்தபலி பீடங் கண்டேன் — அன்னதின் - சா டை யை நானென் னென்றுதான் சரியாய்ச் சொல்வேன்.

நந்திகுந்து பாவனை கண்டேன் — அதின் பெருமை நானெப்படி யின்னதென்று நாவினாற் சொல்வேன் — முந்து வசந்த மண்டபத்தை நானும் முழுதுங் கண்டேனதைத் தொழுதுங் கொண்டேன்.

மகா மண்டபத்தைக் கண்டேன் — அப்பால் — வாய்த்த வத்த மண்டபத்தை மகிழ்வாய்க் கண்டேன் — புகாதே கெற்பக் கிரகத்தைக் - கண்டு — பூசித்துக் கொண்டேன், மிக நேசித்துக் கொண்டேன்.

மூலத்தானத் தழகுங் கண்டேன் — அந்த — மூர்த்திகரத்தை யென்னென்று முழுதுஞ் சொல்வேன் — கோல நாகபூஷணித் தாயார் — நன்மைகள் — கூட்டி வைக்க வந்துகுடி கொண்டருளினார்.

அபய வரதச் சிறப்பும் — கருணைசேர் — அருட்கண் படைத்த நெடுங் கடைக் கண் பார்வை யும் — உபய பாதத்தினழகும் — பாடகம் — உற்ற தண்டை கொலுசு சிலம்பழகும்.

பத்து விரல் மோதிரமும் — நல்ல — பருத்த வொட்டியாணத்தின் பளபளப்பும் — முத்து மூக் குத்தியினழகும் — நேராம் — மேபகனகமாலை பிலாக்குற்றவழகும்.

கங்கணங்கள் கம்மலழகும் — காதணி — கபப்பும் வளையலணிந்த காட்சியழகும் பொங்கு மங்கலியத் தழகும் — நல்ல — பொற் பட்டாடை யழகத்தின் பொலிவழகும்.

கண்டேன் கண்டதிசயித்தேன் — என்னைக் காப்பாற்றிக்கொள் தாயேயென்று காலில் விழுந் தேன் — கொண்டேன் பரவசமாய் — மெய்யாய்க் — குதுகலித்தேனின்று கூத்தாடினேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திமுக மைந்தனோர் புறம் — கந்தசாமினுத பாலனுமோர் சார்புறவே — வந்து தாயி ருந்த கோலத்தை — நாணும் — வாயாற் சொல்ல என்று லொருக்காலும் வாராதே.

விழாத் தெரிசனமுங் கண்டேன் — அந்த — வீதியில் ரதமிழுக்கும் வேடிக்கை கண்டேன்— எழாத்திர்த்த வரிசை கண்டேன் — என்னை ஈடேற்றிவை தாயேயென்றே யிறைஞ்சி நின் றேன்,

பெற்ற தாய் போலென் முன்னே வந்து — கனவினில் பேரருள் செய்தென்னைப் பார்த்துப் பிணக டீர்த்தே — மற்றொன்றுக்கும் பயப்படாதே யெல்லாம் — மனம்போல் வருமென் றெருவாக் குரைத்தாள்.

திருவாக்குக் கெதிர்வாக் குண்டோ — என்றன் — தீவினை டீர்த்திங் கென்னைச் சீர்திருத் தினள் — குருவாக்குமிது போலாக்கும் — இந்தக் குறிப்பறிந்த பேரெல்லாங் குணமாவாரே.

உற்ற நயினார் தீவிலே — ஆலயத்திற் கொருமுறை புறங் கடற்கரை யோரத்திலே — பற்றி யுற்றெழுந்ததோர் தீர்த்தம் — புதியதாய்ப் — பாய்குதே யதைப் பார்த்தோர் சொன்னாரே.

தீர்த்த விசேஷமு மிதுதான் — இனிமேல் — தேடி வாருங்க ளென்றே தெரிவிக்கின்றாளே மூர்த்திகர மிதைப்போலுண்டோ — இனிமேல் — முத்தி வளிக்கு மிதுவே முதலாகுமே.

மங்களம் மங்களம் மங்களம் — என்றைக்கும் மாதா நாகபூஷணிக்கு மாமங்களம்
தங்கு நயினார்தீவில் வாழும் — எம்மைப் பெற்ற தாயாருக்கு மங்களம் மங்களமே.

அச்சுப்பதிப்பு : விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குடமுழுக்கு மலர் பாகம் — I

## வழிபடுநர் மகாசபை உறுப்பினர் பட்டியல்

## 1983 / 84

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| நாகமணி கந்தையா | நயினாதீவு — 1 |
| சண்முகம் மாரிமுத்து | ,, — 5 ஏ |
| முருகேசு நவரெத்தினம் | ,, — 8 |
| சரவணமுத்து தர்மராஜா | ,, — 6 |
| பொன்னம்பலம் சோமசுந்தரம் | ,, — 5 |
| வேலுப்பிள்ளை குகதாசன் | அனலைதீவு — 2 |
| கந்தசாமி காமாட்சிசுந்தரம் | நயினாதீவு — 2 |
| கந்தசாமி குகதாசன் | ,, — 5 |
| நற்குணசிங்கம் தர்மகுலசிங்கம் | V. S. S. K. ஹோட்டல் K. K. S. வீதி, யாழ்ப்பாணம் |
| பாலசுப்பிரமணியம் சாரதாதேவி | நயினாதீவு — 1 |
| தில்லையம்பலம் அரியரெத்தினம் | ,, — 5 |
| கந்தையா சிவக்கொழுந்து | ,, — 1 |
| கனகரெத்தினம் துரைமணி | ,, — 1 |
| அருமைநாயகம் விவேகானந்தன் | ,, — 8 |
| ப. கந்தசாமி மகாதேவா | 17, காரைநகர் வீதி, யாழ். |
| நாகேசு பிரமநாதன் | C/o சி. நாகராசா, நயினாதீவு - 7 |
| நாகமுத்து யோகநாதன் | நயினாதீவு — 8 |
| சி. நாகமுத்து மதியாபரணம் | ,, — 8 |
| நடராசா நமசிவாயம் | ,, — 5 |
| பரராசசிங்கம் நவசக்திதேவி | ,, — 5 |
| கனகசபை பரராசசிங்கம் | ,, — 5 |
| நா. கிருஷ்ணன் | ,, — 8 |
| அருளம்பலம் பேரின்பநாயகன் | ,, — 5 ஏ |
| ச. பரம்சோதி | ,, — 6 |
| கனகசிங்கம் ஜெகதீஸ்வரன் | ,, — 1 |
| சுப்பிரமணியம் சோதிலிங்கம் | ,, — 8 |
| இரத்தினசபாபதி கருணாநிதி | ,, — 7 |
| செல்லையா தியாகராசா | ,, — 7 |
| கனகசபை விஜயரெத்தினம் | 639, மானிப்பாய் வீதி ஒட்டுமடம், யாழ்ப்பாணம் |
| கந்தசாமி நவரெத்தினம் | நயினாதீவு — 1 |
| கந்தசாமி கனகசபாபதி | 44/16, மணல்தரைலேன் கந்தர்மடம், யாழ்ப்பாணம் |
| தில்லையம்பலம் நாகரெத்தினம் | நயினாதீவு — 5 ஏ |
| சுந்தரம்பிள்ளை விஜயராமலிங்கம் | ,, — 5 |
| கந்தையா தில்லையம்பலம் | ,, — 5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| சாம்பசிவம் இராசபூரணி | நயினாதீவு — 5 |
| சிவசம்பு பரமானந்தம் | வளலாய் மேற்கு, அச்சுவேலி |
| கதிரேசு கந்தசாமி | நயினாதீவு — 7 |
| கணபதிப்பிள்ளை வீரவாகு | ,, — 4 |
| வீரவாகு கேதீஸ்வரி | ,, — 4 |
| நாகமணி சிவலிங்கம் | ,, — 5 |
| கிருஷ்ணசாமி செல்லம்மா | ,, — 5 ஏ |
| கதிரன் கந்தையா | ,, — 1 |
| விசயராமலிங்கம் கமலேஸ்வரி | ,, — 5 |
| சுப்பிரமணியம் தவகுகதாசலிங்கம் | ,, — 3 |
| இராமலிங்கம் பொன்னையா | ,, — 2 |
| வீரகத்தி இராசலிங்கம் | ,, — 4 |
| நாகநாதி செல்வநாயகி | ,, — 8 |
| பொன்னையா அன்னலட்சுமி | ,, — 7 |
| நாகநாதி மங்கையற்கரசி | ,, — 8 |
| விசுவலிங்கம் இராசநாயகம் | ,, 5 |
| கந்தசாமி கணநாதன் | ,, — 2 |
| விசுவலிங்கம் சபாநாதன் | ,, — 5 ஏ |
| இராமநாதன் நடேசன் | 353/2, நாவலர் றேட், நல்லூர் யாழ்ப்பாணம் |
| ஆறுமுகம் ஸ்ரீராமமூர்த்தி | நயினாதீவு — 2 |
| செல்லையா சதாசிவம் | நீர்வேலி தெற்கு, நீர்வேலி. |
| நாகநாதர் கணபதிப்பிள்ளை | நயினாதீவு — 3 |
| நல்லதம்பி கமலாம்பிகை | ,, — 5 |
| இளையதம்பி தட்சணாமூர்த்தி | பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ். |
| நாகமுத்து காராளபிள்ளை | நயினாதீவு — 5 |
| வே. க. கு. கோபாலபிள்ளை | ,, — 1 |
| வேலுப்பிள்ளை சண்முகநாதன் | ,, — 5 ஏ |
| இராசலிங்கம் மணிமேகலை | ,, — 1 |
| ஆ. சி. பழனிவேலு | 105, காரைநகர் வீதி, யாழ். |
| பொன்னம்பலம் இராசலிங்கம் | நயினாதீவு — 1 |
| கதிரேசு ஞானம்மா | ,, — 6 |
| இராமநாதன் பரமலிங்கம் | ,, — 6 |
| மயில்வாகனம் மகாலிங்கம் | ,, — 7 |
| கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை | 101, 2ம் குறுக்கு தெரு. யாழ். |
| கணபதிப்பிள்ளை பாலசிங்கம் | நயினாதீவு — 1 |
| Dr. தியாகர் திருநாவுக்கரசு | ,, — 2 |
| நல்லையா இரகுப்பிள்ளை | ,, — 5 ஏ |
| நாகலிங்கம் கந்தசாமி | ,, — 3 |
| சண்முகநாதன் சுலோசனாதேவி | ,, — 5 |
| கிருஷ்ணபிள்ளை குருகுலராணி | ,, — 5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| மதுரையாண்டி கிருஷ்ணசாமி | நயினாதீவு — 5 ஏ |
| அம்பிகாபதி தவேஸ்வரன் | ,, — 5 |
| அருளம்பலம் பரமலிங்கம் | வர்ணமகால், ஊரிக்காடு வல்வெட்டி |
| வீரவாகு கந்தசாமி | நயினாதீவு — 5 |
| ஆ. கிருஷ்ணசாமி | ,, — 8 |
| முத்தையா தனப்பிரபாலன் | 23, வைரவர் கோவில் வீதி, கொட்டடி யாழ். |
| வ. க. கந்தசாமி | நயினாதீவு — 2 |
| ஏகநாயகிவல்லி சிவராசசிங்கம் | ,, — 2 |
| சாந்தலிங்கம் மகாதேவா | ,, — 7 |
| சின்னராசா பொன்னம்மா | ,, — 2 |
| கா. இராமலிங்கம் சண்முகலிங்கம் | ,, — 5 |
| இ. சண்முகலிங்கம் கலைவாணி | ,, — 5 |
| ம. புவனேஸ்வரி, | 22, புகையிரத நிலையவீதி கொக்குவில் |
| லலிதாம்பாள் கணேசு, | கலைமணி ஒழுங்கை, கட்டப்பிராய் யாழ். |
| கனகசபை கிருபாசீலன் | 18, மணல்தரை லேன் கந்தர்மடம் யாழ் |
| சுந்தரம்பிள்ளை கமலாதேவி | நயினாதீவு — 1 |
| பரமநாதி யோகராசா | அஞ்சல் அலுவலகம் யாழ். |
| கனகசபாபதி கோகிலாம்பாள், | 44/16, மணல்தரைலேன் கந்தர்மடம் யாழ். |
| பாலசிங்கம் ஜெகானந்தராசா | 20, பிரப்பங்குளம் ரோட், யாழ்ப்பாணம் |
| கந்தசாமி இராசரெத்தினம், | 63/3 கே. கே. எஸ். வீதி கொக்குவில் |
| பரமலிங்கம் கமலாதேவி | கந்தகோட்டம் 63/1 K. K. S. வீதி ,, |
| மேனகா கனகசபாபதி, | 44/16 மணல்தரைலேன் கந்தர்மடம் யாழ் |
| கந்தசாமி பரமலிங்கம், | கந்தகோட்டம் 63/1 K. K. S. வீதி கொக்குவில் |
| தியாகராசா பாலேந்திரன் | 126, அரசடி ரோட் கந்தர்மடம் யாழ். |
| பொன்னையா கிருஷ்ணபிள்ளை | நயினாதீவு — 2 |
| மதிவதனு கனகசபாபதி, | 44/16, மணல்தரைலேன் கந்தர்மடம் யாழ். |
| தம்பையா ஸ்ரீபதி | 20, பழம்ரோட், கந்தர்மடம் யாழ். |
| முருகேசு இளையதம்பி | நயினாதீவு — 1 |
| நா, தியாகராசா | 126, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| கணபதிப்பிள்ளை குலசிந்தாமணி | அஞ்சலக விடுதி, நயினாதீவு. |
| கு. ஸ்ரீகாந்தராசா | மக்மிலன் புத்தகசாலை, 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம், |
| சோமசுந்தரம் சிவகலா | நயினாதீவு — 5 |
| பொன்னையா சின்னத்துரை | ,, — 1 |
| குற்றாலம் லெட்சுமி | ,, — 2 |
| ஞானஸ்வரன் கனகராணி | ,, — 5 |
| லோகநாதன் நாகேஸ்வரி | ,, — 5 |
| நவரெத்தினம் செல்லம்மா | ,, — 5 ஏ |
| நடராசா தவஈஸ்வரிதேவி | ,, — 5 ஏ |
| கந்தையா மாணிக்கம் | ,, — 1 |
| தவேஸ்வரன் சிவகாமசுந்தரி | ,, — 5 ஏ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| நாகமணி செல்லம்மா | நயினாதீவு — 5 ஏ |
| கனகசபை நடராசா | ,, — 5 ஏ |
| இராசரெத்தினம் யோகநாதன் | ,, — 7 |
| தில்லையம்பலம் புஸ்பராணி | ,, — 8 |
| க. நற்குணசிங்கம் | ,, — 5 |
| வீரகத்தி கோபாலபிள்ளை | ,, — 3 |
| நாகமணி இரஞ்சனாதேவி | ,, — 5 ஏ |
| பெரியதம்பி நாகமணி | ,, — 5 ஏ |
| வைத்திலிங்கம் நாராணபிள்ளை | ,, — 7 |
| பொன்னர் இராசரெத்தினம் | ,, — 6 |
| சின்னத்துரை கோவிந்தபிள்ளை | ,, — 5 ஏ |
| கனகரெத்தினம் மகேஸ்வரி | ,, — 5 ஏ |
| இன்பநாதன் அன்னம்மா | ,, — 5 ஏ |
| நாகமணி கோபாலகிருஷ்ணன் | 300, காரைநகர் வீதி நாவாந்துறை யாழ். |
| தம்பாபிள்ளை இராசேஸ்வரி | நயினாதீவு — 5 |
| கோவிந்தபிள்ளை நித்தியபாக்கியம் | ,, — 5 |
| நாகப்பர் நடராசா | ,, — 2 |
| பொன்னம்பலம் திருநாவுக்கரசு | 121 ஏ பருத்தித்துறை வீதி நல்லூர் யாழ்ப்பாணம் |
| கோவிந்தபிள்ளை தனலட்சுமி | நயினாதீவு — 5 |
| முருகேசபிள்ளை பரமேஸ்வரி | ,, — 5 ஏ |
| முத்தையா ரெங்கநாதன் | ,, — 1 |
| சச்சிதானந்தன் யசோதராதேவி | ,, — 6 |
| கா. சி. செல்லப்பா முத்துக்குமாரு | 121, 1-ம் கு. தெரு யாழ். |
| கனகசபை சச்சிதானந்தன் | நயினாதீவு — 6 |
| கார்த்திகேசு பரமலிங்கம் | ,, — 8 |
| கந்தையா ஆறுமுகம் | ,, — 5 |
| கறுத்தான் ஐயன் | ,, — 4 |
| ஐயன் நாகம்மா | ,, — 4 |
| அருளம்பலம் சபாநாதன் | ,, — 5 ஏ |
| தம்பையா தில்லைநாதன் | ,, — 5 |
| கிருஷ்ணபிள்ளை வரதலெட்சுமி | ,, — 5 |
| வைத்திலிங்கம் இராசரெத்தினம் | ,, — 5 ஏ |
| ஆறுமுகம் செல்வராசா | ,, — 7 |
| பரமேஸ்வரன் நித்தியலட்சுமி | ,, — 5 ஏ |
| குமாரு வைத்திலிங்கம் முத்தையா | 53/2 பொற்பதி வீதி கொக்குவில் |
| அருளம்பலம் கந்தையா | நயினாதீவு — 1 |
| கனகசபை சின்னம்மா | ,, — 5 |
| கனகசபாபதி அன்னபூரணி | நயினாதீவு — 5 ஏ |
| கந்தையா பாலசுப்பிரமணியம் | ,, — 7 |
| அருளம்பலம் சண்முகநாதன் | ,, — 5 |
| கோபாலகிருஷ்ணன் கோகிலாதேவி | ,, — 5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| நாகமணி நற்குணலிங்கம் | நயினாதீவு — 5 |
| தியாகராசக் குருக்கள் சண்முகரத்தினக் குருக்கள் | ,, — 7 |
| நடராசா சிவக்கொழுந்து | ,, — 7 |
| சின்னத்தம்பி கிருஷ்ணசாமி | ,, — 7 |
| சுந்தரம்பிள்ளை திருவிளங்கம் | ,, — 5 ஏ |
| நாகமுத்து கணேசு | ,, — 7 |
| நல்லையா ஜெகநாதன் | ,, — 5 ஏ |
| அம்பலவாணர் நல்லையா | ,, — 5 ஏ |
| நாகேசு ஞானேஸ்வரன் | ,, — 7 |
| கதிரேசு இரத்தினசபாபதி | ,, — 7 |
| மகாலிங்கம் லலிதாம்பாள் | ,, — 5 ஏ |
| தியாகர் வைத்திலிங்கம் | ,, — 7 |
| இராமச்சந்திரன் பேரின்பநாதன் | ,, — 6 |
| முத்துக்குமாரு பாலசுந்தரம் | 125/1, 2-ம் குறுக்குத்தெரு யாழ். |
| வேலாயுதபிள்ளை கார்த்திகேசு | கலைமணி வீதி கட்டப்பராய் யாழ். |
| க வேலாயுதம் பரமலிங்கம் | 49, இராசாவின் தோட்ட வீதி, யாழ். |
| நாகமுத்து சண்முகநாதன் | 488, மணிக்கூட்டு வீதி யாழ் |
| சண்முகநாதன் பரமேஸ்வரன் ,, | ,, ,, ,, |
| வே. க. த. தம்பிமுத்து | நயினாதீவு — 6 |
| வைத்திலிங்கம் நல்லதம்பி | ,, — 5 |
| நல்லையா லோகநாதன் | ,, — 5 |
| நாகமுத்து நடராசா | ,, — 8 |
| இராமநாதன் சிவநாதன், | குமரபவனம், சுருவில் ஊர்காவற்றுறை |
| சின்னத்துரை சிவசுப்பிரமணியம் | நயினாதீவு — 7 |
| இராமநாதர் கனகசபை | ,, — 6 |
| நாகநாதி கந்தசாமி | ,, — 8 |
| சின்னத்துரை சிவராசா | ,, — 8 |
| முருகேசு பொன்னுத்துரை | ,, — 8 |
| கார்த்திகேசு சண்முகலிங்கம் | ,, — 8 |
| ஆறுமுகம் சதுர்மதேவா | ,, — 8 |
| பாலகிருஷ்ணன் தனரத்னபூபதி | ,, — 5 |
| தங்கரெத்தினம் தங்கராசா | 81/6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| தம்பு சண்முகரெத்தினம் | நயினாதீவு — 5 |
| முருகேசபிள்ளை நகுலேஸ்வரி | ,, — 5 ஏ |
| இராசரெத்தினம் புவனேஸ்வரி | ,, — 5 |
| கிருஷ்ணபிள்ளை லோகராணி | ,, — 5 |
| கோபாலபிள்ளை அம்பிகைபாலன் | ,, — 7 |
| அச்சலிங்கம் ஜெயலெட்சுமி | ,, — 5 |
| மாரிமுத்து இருஷ்ணபிள்ளை | ,, — 5 |
| வேலாயுதம் பிரமநாதன் | ,, — 5 ஏ |
| தில்லையம்பலம் தம்பிராசா | ,, — 5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| ஆறுமுகம் நாகநாதமூர்த்தி | நயினாதீவு — 5 |
| இளையதம்பி பாலகிருஷ்ணன் | ,, — 5 |
| சதாசிவம் ஜெயபாலராசா | ,, — 3 |
| நாகமுத்தன் விசுவலிங்கம் | ,, — 5 ஏ |
| முருகேசு கந்தசாமி | ,, — 7 |
| நா. கனகரெத்தினம் கார்த்திகேசு, அருளமுதம், | 56/21 ஆத்திசூடிவீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம் |
| மு இ. கந்தப்பு | நயினாதீவு — 5 |
| சுப்பிரமணியம் யோகேஸ்வரி | ,, — 5 ஏ |
| வைத்திலிங்கம் சுப்பிரமணியம் | ,, — 5 ஏ |
| வீ இராசலிங்கம் | ,, — 1 |
| சுப்பையா கதிரேசு | ,, — 5 |
| சி. கணபதிப்பிள்ளை | ,, — 7 |
| வேலாயுதம் நாகேசு | புங்குடுதீவு-5 நாகபூஷணி கானம். |
| வை கணபதிப்பிள்ளை | நயினாதீவு — 2 |
| சி. கணபதிப்பிள்ளை பொன்னையா | ,, — 7 |
| சரவணமுத்து இலங்கைநாயகம் | 465/5 K. K. S. வீதி யாழ்ப்பாணம் |
| கந்தசாமி இராஜசூரியர் | 141, மலிபன் வீதி கொழும்பு-11 |
| ஆறுமுகம் தியாகராசா | நயினாதீவு — 5 ஏ |
| தி. க. மகாலிங்கசிவம் | 33, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம் |
| சோமசுந்தரம் ஞானேஸ்வரன் | நயினாதீவு — 5 |
| கிருஷ்ணபிள்ளை தெய்வகலா | ,, — 2 |
| சோமசுந்தரம் செல்வரெத்தினம் | ,, — 6 |
| தில்லையம்பலம் கோபாலராஜன் | ,, — 5 ஏ |
| சோமசுந்தரம் சுந்தரலிங்கம் | ,, — 6 |
| இளையவன் கிருஷ்ணன் | ,, — 1 |
| வ. தம்பிமுத்து பாலசிங்கம் | ,, — 4 |
| குமாரசாமி பரராசசிங்கம் | 37 டச்சு வீதி, உடுவில் சுன்னாகம் |
| வயிரமுத்து சபாரத்தினம் | நயினாதீவு — 5 |
| வீரகத்தி கந்தசாமி | ,, — 2 |
| முத்துக்குமாரு புனிதநாதன் | ,, — 2 |
| கணபதிப்பிள்ளை சவுந்தரம் | ,, — 5 |
| ஐ. சின்னம்மா | ,, — 1 |
| சின்னத்தம்பி பொன்னம்பலம் | ,, — 1 |
| கணேசு தில்லையம்பலம் | ,, — 1 |
| கணபதிப்பிள்ளை குலசிங்கம் | ,, — 5 |
| க ஜிவகாருணியம் | 187, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் |
| நாகேசு சிவராசசிங்கம் | நயினாதீவு — 2 |
| கனகசபை உருத்திரகுமாரன் | ,, — 6 |
| தம்பையாபிள்ளை அமிர்தலிங்கம் | ,, — 5 |
| தில்லையம்பலம் இராசேஸ்வரி | ,, — 1 |
| நா கணபதிப்பிள்ளை குமாரசூரியர் | ,, — 2 |
| விசாலாட்சி சோமசுந்தரம் | ,, — 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| முழுப் பெயர் | முகவரி |
|---|---|
| மகேஸ்வரி ஸ்ரீராமமூர்த்தி | நயினாதீவு — 2 |
| செ. நல்லதம்பி துரைராசசிங்கம் | ,, "துவாரகா" |
| நாகலிங்கம் தவமணி | ,, — 2 |
| முத்தையா இராமலிங்கம் | ,, — 3 |
| சுந்தரம்பிள்ளை பரராசசேகரம் | ,, — 3 |
| முருகேசபிள்ளை பரமானந்தம் | ,, — 6 |
| செல்வரெத்தினம் அன்னலட்சுமி | ,, — 6 |
| க. பரமேஸ்வரி | ,, — 1 |
| அகிலாண்டநாயகி பரராசசேகரம் | ,, — 3 |
| கோபாலபிள்ளை வாமதாசன் | ,, — 7 |
| இரகுநாதன் சிவபாதசேகரம் | ,, — 3 |
| சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு | ,, — 3 |
| தியாகர் கந்தையா | ,, — 5 |
| நடராசா நீலாம்பிகை | ,, — 6 |
| கந்தையா ஐயாத்துரை | கோண்டாவில் வடக்கு கோண்டாவில் |
| தம்பு நவரத்தினராசா | C/o இ. தம்பு, மயிலிட்டி தெற்கு தெல்லிப்பளை |
| கந்தையா ஞானசேகரன் | அங்கரா தோட்டம், அளவெட்டி வடக்கு அளவெட்டி |
| ஆ. சிவசம்பு பரமசாமி | 110/1 சிவன்பண்ணை றோட், கொட்டடி, யாழ். |
| ஐயாத்துரை தியாகராசா | நயினாதீவு — 1 |
| கதிரவேற்பிள்ளை சாரதாதேவி | ,, — 7 |
| இ. வரதலெட்சுமி | ,, — 6 |
| கணேசு தனலட்சுமி | ,, — 7 |
| இரத்தினசபாபதி சண்முகவடிவு | ,, — 7 |
| மணிவாசகர் இந்திராதேவி | ,, — 7 |
| ஐயாத்துரை லிங்கநாதன் | ,, — 8 |
| கனகசபை சரவணமுத்து | ,, — 5 |
| பாலசுப்பிரமணியம் சரோஜினிதேவி | ,, — 7 |
| கேசவராணி சிவானந்தர் | ,, — 2 |
| சோமசுந்தரம் மகேஸ்வரன் | ,, — 2 |
| கணபதிப்பிள்ளை இராமலிங்கம் | 140 நவீனசந்தை. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| வே. குமாரசாமி | சாவற்கட்டு, ஆனைக்கோட்டை |
| அருளம்பலம் ஓங்காரநாதன் | நயினாதீவு — 5 ஏ |
| வீ கந்தசாமி துரைசிங்கம் | சுதுமலை தெற்கு, மானிப்பாய் |
| சின்னத்துரை நடராசா | நயினாதீவு — 5 |
| இளையதம்பி சண்முகநாதன் | 49, புகையிரதநிலைய வீதி, கொக்குவில் |
| வே. கந்தசாமி | நயினாதீவு — 2 |
| ஆ. மு. தாமோதரம்பிள்ளை | ,, — 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
249205

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| முத்துவேலு தனபாலசிங்கம் | புங்குடுதீவு — 10 |
| கணபதிப்பிள்ளை சண்முகநாதபிள்ளை | நயினுதீவு — 3 |
| வீரகத்தி பஞ்சலிங்கம் | ,, — 4 |
| திருலிங்கநாதன் மகேஸ்வரி | ,, — 5 |
| மாரிமுத்து வேதநாதன் | ,, — 5 ஏ |
| அம்பலவாணர் சர்வானந்தராஜா | 196, K. K. S. வீதி, யாழ். |
| முத்தையா சிவபாலன் | 200. அரசடி வீதி, கந்தர்மடம், யாழ் |
| ச. பொன்னம்பலம் தில்லைநாதன் | நயினுதீவு — 3 |
| முத்துவேலு சண்முகநாதன் | ,, — 5 |
| சிவசிதம்பரம் சிவானந்தர் | ,, — 2 |
| நாகலிங்கம் ஏகாம்பரநாதன் | ,, — 5 |
| மதியாபரணம் அம்பிகைபாகன் | ,, — 8 |
| தாமோதரம்பிள்ளை பாலசிங்கம் | ,, — 5 |
| சோமசுந்தரம் சிவனடியான் | ,, — 6 |
| இராசையா மருதலிங்கம் | ,, — 6 |
| சண்முகநாதன் மகேஸ்வரி | ,, — 5 |
| கா. கந்தையாபிள்ளை சிவசிதம்பரம் | ,, — 1 |
| சோமு சின்னத்துரை | ,, — 1 |
| வே. க. த. சோமசுந்தரம் | ,, — 6 |
| குமாரசாமி சாந்தலிங்கம் | ,, — 6 |
| முருகேசு கிருஷ்ணசாமி | ,, — 8 |
| மதுரையாண்டி தில்லைம்பலம் | ,, — 8 |
| நாகமுத்தன் பத்மராஜா | ,, — 8 |
| இன்னுசிமுத்து பொன்னையா | ,, — 8 |
| கந்தையா கிருஷ்ணசாமி | ,, — மத்தி |
| இ. பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங் | இல. 3, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் |
| சின்னத்தம்பி தனபாலசிங்கம் | நயினுதீவு — 3 |
| நாகேசு இராசமணி | புங்குடுதீவு — 5 |
| மு. லெட்சுமணன் | நயினுதீவு — 5 |
| ஐயம்பிள்ளை வீரகத்தி | ,, — 4 |
| பேரின்பநாயகி நற்குணசிங்கம் | ,, — 5 |
| கனகம்மா காமாட்சிசுந்தரம் | ,, — 2 |
| தா. கனகலிங்கம் | ,, — 1 |
| பெரியதம்பி சடையப்பசாமி | ,, — 3 |
| கு. கிருஷ்ணதாசன் சரஸ்வதிதேவி | ,, — 5 |
| குமரையா மங்கையற்கரசி | ,, — 2 |
| செ. கமலாம்பிகை | தேவிபவனம், புங்குடுதீவு — 1 |
| சங்கரப்பிள்ளை சண்முகநாதன் | நயினுதீவு — 3 |
| சு. ப சரவணமுத்து சோமசுந்தரம் | ,, — 3 |
| தம்பிமுத்து ரஞ்சலிங்கம் | ,, — 2 |
| நாகலிங்கம் அன்னராசா | 10, நல்லூர், கச்சேரி வீதி. யாழ். |

249205
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| முழுப்பெயர் | முகவரி |
|---|---|
| கந்தசாமி திலகவதி | நயினாதீவு — 5 ஏ |
| இராசரெத்தினம் நாகேஸ்வரி | 63/3, K. K. S. வீதி கொக்குவில் |
| மகாலிங்கசிவம் பரிமளம் | 33, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம் |
| சின்னத்தம்பி இராசையா | நயினாதீவு — 1 |
| தம்பையா சிவராசன் | குருந்தட்டி, நெல்லியடி, கரவெட்டி |
| மருதப்பு வைத்திலிங்கம் | நயினாதீவு — 1 |
| நாகலிங்கம் சதானந்தன் | 43. Torington Flats Colombo-5 (நயினாதீவு கணக்காளர்) |
| சின்னத்தம்பி கனகரெத்தினம் | நயினாதீவு — 1 |
| ஆறுமுகம் வேலாயுதம் | ,, — 4 |
| இராமநாதர் சின்னத்துரை | ,, — 2 |
| தில்லையம்பலம் பாலசிங்கம் | ,, கிராமசேவையாளர் |
| சோமசுந்தரம் சந்திரசேகரம் | ,, — 6 |
| நவரெத்தினம் கலாநாயகி | ,, — 8 |
| வீரகத்தி கார்த்திகேசு | ,, — 8 |
| கிருஷ்ணசாமி சத்தியேஸ்வரன் | ,, — 8 |
| செல்லையா சுந்தரலிங்கம் | ,, — 8 |
| ஐயாத்துரை சுந்தரலிங்கம் | ,, — 5 ஏ |
| சம்புஹேஸ்வரக்குருக்கள் மகேஸ்வரக்குருக்கள் | நயினாதீவு — 1 |
| சின்னத்தம்பி தனபாலசிங்கம் | ,, — 3 |
| பொன்னம்பலம் பரமலிங்கம் | ,, — 8 |
| வீரபத்திரர் சிவபாதம் | ,, — 1 |
| சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை | ,, — 1 |
| நாகமுத்து கணபதிப்பிள்ளை | ,, — 6 |
| ஆனந்தர் விக்னேஸ்வரன் | அரச மரக்கூட்டுத்தாபனம் கடற்கரை வீதி யாழ்ப்பாணம் |
| கணபதிப்பிள்ளை கல்யாணி | நயினாதீவு — 6 |
| பாக்கியம் திருநாவுக்கரசு | ,, — 2 |
| சின்னத்தம்பி தங்கராசா | 81/6, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

University of Jaffna
249205
Library

STACKS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

KANDIAH KARTHIGESAN
TRUST FUND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org